மெய்ஞானக் கண்ணாடி சாத்திரம்

பரிதிராஜ்கு

மடப்பகண்ட சாத்திரம்

பதினான்கு

863



சென்னை,

[illegible] கலாசாலைப் பிரதானியர்

ந. சுப்பிரமணிய பிள்ளையவர்கள்

எம். ஏ., எம். எல்., அட்வகேட்

எழுதிய

முன்னுரையுடன்



திருநெல்வேலி, தென்னிந்திய

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்

திருநெல்வேலி & சென்னை

சித்தாந்தவரு ஐப்பசியர்

Published by

The South India Saiva Siddhanta Works

Publishing Society Tinnevelly, Limited.

Tinnevelly and Madras

November, 1925

[*Copyright*]

Printed by O. Muniswamy Mudaliar & Sons, Madras

பொருளடக்கம்

பதிப்புரை ...

முன்னுரை ...

மெய்கண்ட சாத்திரம்

க. திருவுந்தியார் ... க

உ. திருக்களிற்றுப்படியார் ... கூ

ங. சிவஞானபோதம் ... உசு

ச. சிவஞானசித்தியார் பரபக்கம் ... சுருு

,, சுபக்கம் ... கஙஎ

ஞ. இருபா விருபஃது ... உகங

ட. உண்மை விளக்கம் ... உஉஎ

ண. சிவப்பிரகாசம் ... உங்க

அ. திருவருட்பயன் ... உசுஎ

கூ. வினாவெண்பா ... உஎகூ

ஏ. போற்றிப்பஃறொகை ... உஅஞ

ஐ. உண்மைநெறி விளக்கம் ... உகூஞ

ஐஉ. கொடிக்கவி ... உகுச

ஐங. நெஞ்சுவிடுதூது ... ஙாங

ஐச. சங்கற்ப நிராகரணம் ... ஙகஞ

திருவுருவப்படங்கள்

க. மெய்கண்டதேவர் ...

உ. அருணந்திசிவம் ...

ங. உமாபதிசிவம் ...

பதிப்புரை

சைவசமய ஆசிரியர்கள் சமயாசாரியர்களென்றும் சந்தானாசாரியர்களென்றும் இருவகைப்படுவர். அவர்களுள் சமயாசாரியர்கள் திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசக சுவாமிகளென்னும் நால்வருமாவர். சந்தானாசாரியர்கள் மெய்கண்டதேவர், அருணந்தி சிவாசாரியர், மறைஞானசம்பந்த சிவாசாரியர், உமாபதி சிவாசாரியரென்னும் நால்வருமாவர். சமயாசாரியர் நால்வரும் தேவாரம் திருவாசகமென்னும் அருணூல்களைத் தமிழிலே தோத்திர வடிவமாக அருளிச்செய்து சைவசித்தாந்த ஞானத்தை நிலை நிறுத்தியருளினர்கள். சந்தானாசாரியர் நால்வரில் மெய்கண்டதேவர் சிவஞானபோதமென்னும் ஒரு நூலையும், அருணந்தி சிவாசாரியர் சிவஞான சித்தியார், இருபாவிருபஃ தென்னும் இரண்டு நூல்களையும், உமாபதி சிவாசாரியர் சிவப்பிரகாச முதலிய எட்டு நூல்களையும் தமிழிலே சாத்திரவடிவமாக அருளிச்செய்து சைவசித்தாந்த ஞானத்தை நிலைநிறுத்தி யருளினர்கள். ஆகவே சைவசித்தாந்தம் இப்பொழுது வழங்கிவரும் முறையில் நிலைபேறடைந்தமை இவ்விருவகையாசிரியர்களின் அரும்பணிக்கம் பற்றியேயாமென்பது நன்கு தெளியப்படும்.

தோத்திர வடிவமாகவும் சாத்திரவடிவமாகவும் செய்யப்பட்ட மேற்கூறிய இருவகை நூல்களுள் தோத்திரவடிவமான தேவார முதலிய அருணூல்கள் தம்மை மெய்யன்போடு விதிப்படி நியமமாக ஓதிவருபவர்களுக்கு அவரவர் விரும்பிய இம்மை மறுமை வீடென்னும் முத்திறப்பயன்களையும் அருளுவன. அவற்றிலே சித்தாந்த ஞானம் அனுபவமுறையாக ஆங்காங்கே சிதறுண்டு காணப்படும். ஆதலின் அவற்றை யோதுவோர் சித்தாந்த ஞானத்தை எளிதிற் பெறுதலும் பெற்று அனுபவத்திற்குக் கொண்டுவருதலும் இயலாத காரியங்களாம். ஆனால் சாத்திரவடிவமான சிவஞானபோதமுதலிய

பதிப்புரை

நூல்கள் சித்தாந்தத்திற் கூறப்படும் பொருள்களை அளவைநூன் முறைப்படி பிரமாணம் இலக்கண மென்னுமிரண்டானும் ஆராய்ச்சி செய்து நிறுத்திப், பின்னர் உயிர் இறைவனுடைய பேரானந்தப் பெருஞ் செல்வத்தை நுகர்தற்குச் செய்ய வேண்டிய சாதனத்தையும் அச்சாதனத்தைச் செய்து முற்றிய உயிர் அடையும் மேலாம் பயனெனப்படும் பாசநீக்கம் சிவத்துவ விளக்கமென்பனவற்றையும் தெளிவுபெற ஒழுங்கு படுத்தி விளக்கிக் கூறும். ஆதலின் இந்நூல்களை இலக்கணம் தருக்க மென்னும் இரண்டு நூல்களினும் பயின்ற பொதுவறிவோடு திருவருட்கண் கொண்டு காண்போர் சைவசித்தாந்தப் பொருள்களை எளிதின் அறிந்து சைவசித்தாந்த ஞானம் எளிதிற் கைவரப்பெற்று வீட்டின்பம் அடைவார்கள்; இடையிட்ட பயனுக ஏனையவும் அவர்களாற் பெறப்படும்.

இஃதன்றியும் தேவார முதலிய அருணூல்களின் மெய்ப்பொருள் சிவஞானபோத முதலிய சித்தாந்த சாத்திரங்களை ஓதியுணர்ந்தார்க்கே புலனாகும். இச்சித்தாந்த சாத்திரங்களை யுணராது தேவார முதலிய அருணூல்களின் பொருள் தெரியப் புகுவோர் 'கனகவரை குறித்துப்போய்க் கடற்கே வீழ்வார்.' இக்காரணம் பற்றியே போலும் பண்டை ஆன்றோர் பலரும் தேவாரமுதலிய அருணூல்களுக்குப் பொருள்கூற லாகாதென விதித்தனர்.

இக்காரணங்களால் சாத்திர வழிவமாகச் செய்தருளப்பட்ட சிவஞானபோத முதலிய நூல்களின் பெருமை அறியப்படும்.

தமிழ் மொழியிலே சாத்திரவடிவிற் செய்யப்பட்ட ஞான நூல்கள் பதினென்காகும். அவையாவன:—க. திருவுந்தியார், உ. திருக்களிற்றுப்படியார், ங. சிவஞானபோதம், ச. சிவஞானசித்தியார், ஞ. இருபா விருபஃது, ரு. உண்மை விளக்கம், எ. சிவப்பிரகாசம், அ. திருவருட்பயன், கூ. விஞவெண்பா, ஐ. போற்றிப் பஃறொடை, கக. கொடிக்கவி, கஉ. நெஞ்சுவிடுதூது, கங. உண்மை நெறி விளக்கம், கச. சங்கற்ப நிராகரணம் என்பனவாம்.

'உந்தி களிறு வுயர்போதஞ் சித்தியார்
பிந்திருபா வுண்மை பிரகாசம்—வந்தவருட்
பண்புவிரு போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
வுண்மைநெறி சங்கற்ப முற்று'

எனவரும் வெண்பாவால் மேற்கூறப்பட்டமை வீளங்கும்.

இவற்றுள் திருவுந்தியார் திருக்களிற்றுப்படியா ரென்னும் இரண்டு நூல்களும் காலத்தால் மிக்க பழமை வாய்ந்தன. திருவுந்தியார் தென்னுடுசெய்த தவத்தானே வடநாட்டினின்றும் எழுந்தருளித் திருவிசலூரில் வீற்றிருந்தருளிய மகா சிவயோகியாராகிய உய்யவந்ததேவ நாயனாலே அருளிச்செய்யப்பட்டது. இவ் வுண்மை

'வைய முழுது மலக்கயங் கண்டிடு
முய்ய வந்தா னுரையுந்தீபற
வுண்மை யுணர்ந்தா ரென்றுந்தீபற'

எனவரும் திருவாக்கானறியப்படும். திருக்களிற்றுப்படியார் திருவுந்தியாரருளிச் செய்த உய்யவந்ததேவ நாயனாது மாணாக்காகிய திருவிசலூர் ஆளுடையதேவ நாயனாது மாணாக்காகிய திருக்கடவூர் உய்யவந்ததேவ நாயனாலே அருளிச் செய்யப்பட்டது. இவ்வுண்மை

'என்னறிவு சென்றளவில் யானின் றறிந்தபடி
யென்னறிவி லாறறிக வென்றொருவன்—சொன்னபடி
சொல்லக்கே ளென்றொருவன் சொன்ன னெனக்கதனைச்
சொல்லக்கே ணூலுணக்கச் சொல்'

எனவும்,

'ஆளுடையா ளெண்டாரு மாளுடையா னேயறியுஞ்
சாளுடையான் றொண்டர் தலைக்காவ—ளளுந்
திருவியலூ ராளுஞ் சிவயோகி யின்றென்
வருவினையை மாற்றினன் வந்து'

எனவும் வரும் திருவாக்குக்களான் அறியப்படும். உண்மைவிளக்க மென்னும் தூல் திருவெண்ணெய் நல்லூர் மெய்கண்டதேவ நாயனாது மாணாக்கர்களுள் ஒருவராகிய திருவதிகை மனவாசகங்கடந்த நாயனாலே அருளிச்செய்யப்பட்டது. இம்மூன்று நூல்களும், சிவஞான போதம், சிவஞான சித்தியார், இருபாவிருபஃது, சிவப் பிரகாசமுதலிய எட்டு ஆகிய பதினொருநூல்களும் சேர்ந்த தொகை பதினென்காம். இப்பதினென்கு நூல்களும் மெய்கண்ட சாத்திர மெனவும், சித்தாந்த சாத்திரமெனவும் ஆன்றோர்களால் வழங் கப்பட்டு வருகின்றன. இவற்றிற்கு வடநூற் கடலும் தமிழ் நூற் கடலும் நிலை கண்டுணர்ந்த மாதவச் சிவஞான யோகிகள் முத லிய பெரியோர்கள் உரைவகுத்திருக்கின்றார்கள்.

இச்சித்தாந்த சாத்திரங்கள் பதினென்கனையும் சித்தாந்தசைவரிற் பலர் நியமமாகப் பூசை பாராயண மென்பன செய்துவருகின்றார் கள். அவ்வாறு பூசை பாராயண மென்பன செய்தற்கு மூலமாத்திர மூள்ள புத்தகம் மிகுந்த பயன்படு மென்பதனை அனைவரும் அறி வார்கள். சித்தாந்தசாத்திரமூலம் இதற்குமுன் திருவாளர் மதுரை நாயகம் பிள்ளையவர்களாலும் திருவாளர் சிங்காரவேலு முதலி யாரவர்களாலும் வெளியிடப்பட்டிருக்கின்றது. இப்பொழுது அம்மூலபாடப் பிரதிகள் கிடைத்தலரிதாகலின், யாங்கள் சித்தாந்த சாத்திரம் பதினென்கன் மூலபாடத்தை இதுபொழுது சைவ உல கத்திற்கு மகிழ்ச்சியோடு வெளியிடுகின்றோம். இவ்வெளியீட் டில் மெய்கண்ட தேவர் அருணந்தி சிவாசாரியர் உமாபதி சிவா சாரியரென்னும் முவர் திருவுருவப் படங்களும் சேர்க்கப்பட் டிருக்கின்றன.

எங்களுடைய இப்புதிய பதிப்பில் பல அருமையான பாடங் கள் காணப்படும். அவற்றை யெல்லாம் விவரமாக எழுதின் பதிப் புரை விரியுமாதலின் ஒன்றிரண்டு மட்டும் இங்கே குறிப்பிடுகின் றோம்.

திருக்களிற்றுப்படியாரின் ஙஉ-வது செய்யுள்

‘கண்ணைப்ப ளெப்பதே ரன்பின்மை யென்றமையாற்
கண்ணைப்ப ளெப்பதே ரன்பதனைக்—கண்ணைப்பர்
தாமறிதல் காளத்தி யாரறித லல்லதுமற்
ரூறியு மன்பன் றது’

என்று அச்சிட்ட பதிப்புக்கள் அனைத்திலும் காணப்படுகின்றது. எங்களுக்குக் கிடைத்த எட்டுப் பிரதிகளிலும் கையெழுத்துப் பிரதிகளிலும் ‘மற், றியாமறியு மன்னன் றது’ என்ற பாடமே காணப்படுகின்றது. இப்பாடம் எதுகைநயம் பொருள்நயமென்பன அமைந்து விளங்குதலின் அவ்வாறே பாடம் குறித்திருக்கிறோம்.

சிவப்பிரகாசத்தின் உச-வது செய்யுள் ஈற்றடி

‘சடத்திரளும் கர்த்தாவாய்த் தனக்கொன் றில்லாத்
தன்மையனுங் கூடவொரு சங்கை யின்றே’

என அச்சிட்ட பதிப்புக்கள் அனைத்திலும் காணப்படுகின்றது. எங்களுக்குக் கிடைத்த எட்டுப் பிரதிகளில்,

‘சடத்திரளு மகர்த்தாவாய்த் தனக்கொன் றில்லாத்
தன்மையனுங் கூடவொரு சங்கை யின்றே’

எனப்பாடம் காணப்படுகின்றது. ஞானாசாரியாகிய திருவாவடுதுறையாதீனத்திலே மூன்றாவது மகாசந்நிதானமாயெழுந்தருளியிருந்து உலகுடைய நாயனார் முதலிய அடியார்களுக்குச் சிவதீக்ஷை செய்து பலஞானநூல்களும் உரைகளும் அருளிச்செய்த ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகசுவாமிகள் ‘சிவப்பிரகாச சிந்தனை’யில் மேற்காட்டியவாறு ‘அகர்த்தாவாய்’ என்று பாடங்கொண்டு ‘அகத்தாவாகிய தனக்கெனவோ ராறிவில்லாத ஆன்மாவும்’ என்று உரையருளிச் செய்திருக்கின்றார்கள். மதுரைச் சிவப்பிரகாசரும் தாமியற்றியருளிய சிவப்பிரகாசவுரையில் ‘அகர்த்தாவாய்’ என்றே பாடங்கொண்டு ‘கத்தாவல்லனுமாய்த் தானே யறிகைக்கேகா ராறிவில்லாத ஆன்மாவும்’

என்று உரைகூறினர். ஆகலின் எங்கள் பதிப்பில் இப்பாடமே கொள்ளப்பட்டிருக்கிறது.

சங்கற்பநிராகரணத்தில் அகவல்கள் உய என்று பதிப்புக்கள் அனைத்தும் கணக்கிடுகின்றன. ஐக்கியவாதி சங்கற்ப நிராகரணத்தின் ஈற்றடி 'ஆயினை யமையு மருணிலை கேண்மதி' என்றிருக்கின்றது. இவ்வடி பொருண்முடியாமையின் செய்யுளி னிறுதியாகாது. பாடாண வாதி சங்கற்பமுஞ் சேர்ந்தே செய்யுள் முற்றுப்பெறுகின்றது. இவ்வாறே பின்வருவன அனைத்துமாம். அன்றியும் பாயிரத்தில் 'எண்மர் நிரையிலிருப்ப, மயங்கு வாத மாயா வாதி, முயங்கிட வொருதலை முதுவெதிர் மணிசேர், பெண்ணை சூழ்ந்த வெண்ணெயம் பதிதிகழ், மெய்கண்டவனருள் கைகண்டவர்களி,லொருவ ரொருதலை மருவி யிருப்ப' எனப்பதின்மர் பொற்றே ராலயத்திருந்தமை கூறப்படுகின்றது. ஆகவே பதின்மர் கூற்றுச் செய்யுட்கள் பத்தும், கடவுள் வணக்கம், பாயிரம் செய்யுளிரண்டும் ஆகச் செய்யுட்கள் பன்னிரண்டேயாகும். இவ்வாறு கணக்கிட்டு எங்கள் பதிப்பிற் குறித்திருக்கின்றோம். மேலும் காணப்படும் விவரங்கள் பல.

இவ்வகை அரிய பாடங்கள் கிடைத்தற்குத் துணையாயிருந்தவை, சூரியனார் கோவி லாதீனம் ஸ்ரீமத் இலக்கணம் முத்துக்குமார சுவாமித் தம்பிரானவர்களும், திருநெல்வேலி திருவாளர் S. பால்வண்ண முதலியாரவர்களும் உதவிய எட்டுப் பிரதிகளும் கையெழுத்துப் பிரதிகளுமேயாம். அவ்விருவர்களுக்கும் எங்கள் புதிய பதிப்பிற்கு முன்னுரையாகச் 'சந்தானாசாரியர் பரம்பரை' எழுதி யுதவிய சென்னை அட்வகேட் திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளை, M.A., M.L., அவர்கட்கும், பிரதிகள் பலவற்றையும் ஒப்பு நோக்கிப் பாடபேதங்களைக் குறித்துச் செப்பஞ் செய்த திருநெல்வேலி இந்துகலாசாலைத் தமிழ்ப் போதகாசிரியர் திருவாளர் வி. சீதம்பர ராமலிங்க பிள்ளையவர்கடகும் யாங்கள் எங்கள் மனமார்ந்த நன்றியைச் செலுத்துகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

ஊ

திருச்சிற்றம்பலம்

சென்னை நியாய கலாசாலைப் போதகாசிரியர்

திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளை

எம். ஏ., எம். எல்., அட்வகேட்

அவர்கள் எழுதிய

முன்னுரை

சைவ சித்தாந்த சந்தானாசாரியர்களும் அவர்களது அருள் நூல்களும்

முழுமுதற் கடவுள் சிற்றுயிர்களுக்கு அருள் செய்யும் முறை பலவாக இருப்பினும் அவற்றுள் இருமுறைகள் தெளிவாக விளங்குகின்றன. அவர், ஒவ்வொரு மக்கட் பிரிவினர்க்குப் அவரவர் தகுதிக்கு ஏற்ப வெவ்வேறு வடிவங்கள் வாயிலாக அருள் செய்திருக்கின்ற முறைமை பல சமய வரலாறறிஞரும் நன்கு அறியலாகும். கிறிஸ்துமதம், மகமதிய மதம் முதலிய கடவுள் உண்டென்று கூறும் ஒவ் வொரு சமயத்திலும் அவ்வச்சமயப் பெரியார் வாயிலாகவே சமய அறிவு புகட்டப்பட்டதாக அறிகிறோம். அத்தகைய சமயங்களில் கடவுளையும் அவரது திருவருளையும் தொழுது போற்றும் மாட்டும் காணப்படுகின்றது. ஆதலினாலன்றோ,

> " வேறுவே றுருவும் வேறுவே றியற்கையு
> நாறுபூ ருயிர மியல்பின தாகி
> ஏறுடை யீசனிப் புவனியை யுய்யக்
> கூறுடை மங்கையுந் தானுமம்வந் தருளி "

என்று மணிவாசகப் பெருமான் கீர்த்தித் திருவகவலில் திருவாய் மலர்ந்தருளியதூஉ மென்க. அங்ஙனம் அருள் செய்த முறைகள் பலவும் இரண்டு வகையின் வைத்து ஆராய்ச்சி செய்தல்கூடும். அவ்வகைகள் அன்பு வழியும் அறிவு வழியும் ஆகும். சிறந்த அன்பு நெறியிற் பயின்ற பண்டை நற்றவத்தினர்க்கு இறைவன் தானே வெளிப்பட்டு ஞானம் நல்கி வீட்டின்பத்தை அருளுவன். சைவசித்தாந்த சமயத்தில் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக் கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் என்னும் பெரி யோர்க்கும் ஏனை அறுபத்துமூன்று நாயன்மார்க்கும் அருள்செய்த முறையால் அஃது இனிது விளங்கும்.

"பண்டைநற் றவத்தாற் றேன்றிப் பரமனைப் பத்திபன் னுஞ்
தொண்டரைத் தானே தூய கதியினிற் றொகுப்பன்"

என்ற சிவஞானசித்தித் திருவாக்குங் காண்க. அங்ஙனம் அன்பு வழியிற் செல்வதன்முன் அறிவினுலே கடவுள், உயிர், உலகம் என்பவற்றின் இயல்பையும் தொடர்பையும் பற்றிய உண்மையை யுணராவேண்டுமென்ற விருப்பமுடைய உயிர்களின் பொருட்டு அவ்வுண்மை ஞானத்தைக் கடவுள் தக்க தவத்தினர்க்கு முதற்கண் உணர்த்தி அவர்கள் பரம் பரை வாயிலாக ஏனை உயிர்கள் அதனை யுணர்ந்து உய்யு மாறு கருணை செய்யுமுறை அறிவு வழிப் பாலதாகும். இந்த அறிவுமுறையைச் சிவபெருமான் முதன் முதல் நான்கு முனிவர்க்கு ஓர் ஆலநீழற் கீழ்க்காட்டி யருளியதாகத் திருமுறைகள் முழங்குகின்றன. அஃது

"ஓரானீழ லொண்கழ லிரண்டு முப்பொழு
தேத்திய நால்வர்க் கொளிநெறி காட்டினை"

என்ற ஞானசம்பந்தப் பெருமான் திருவெழு கூற்றிருக் கைத் திருவாக்கினால் இனிது விளங்கும். அந்நான்கு முனி வர் உலகத்திற்கு வெளிப்படுத்திய நெறி திருநெறி யென் றும் மறைவழி யென்றும் பொதுநெறி யென்றும் கூறப் படும். அஃது அறம், பொருள், இன்பம், வீடென்னும் நான் கினையுந் தருவது. அந்நெறிக்குரிய கருத்துக்கள் பலவும் பிற் காலத்தில் தமிழிலே சித்தர் நூல்களுள் வரையப்பட்டன.

இனி வீட்டின்பத்தையே விழைந்து அதற்குரிய நெறி யை அறிய விரும்பிய ஐந்து பெரியோர்க்குத் தென்றமிழ் நாட்டிற் றிகழ்ந்தோங்கிய பெருமணிமலை யென்னும் மகேந் திரத்தில் சிவபெருமான் அந்நெறியை உணர்த்தினதாகத் திருவாசகம் கூறுகின்றது.

" மன்னு மாமலை மகேந்திர மதனிற்
சென்ன வாகமஞ் சோற்றுவித் தருளியும் "

" மற்றவை தம்மை மகேந்தி ரத்திருந்து
உற்றவை வும் முகங்க ளாற்பணித் தருளியும்."

(கீர்த்தித் திருவகவல்.)

என்பதனால் அது விளங்கும். (இதைப்பற்றிய விரிந்த ஆராய்ச்சிக் குறிப்பு நமது கழகப் பதிப்பாகிய தொல் காப்பிய எழுத்ததிகாரம் - நச்சினார்க்கினியம் - முகவுரையில் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றது.) அவ்வைவம் முனிவரது மரபில் வந்தோரே பண்டைத் தமிழ் நாட்டில் பார்ப்பார் என்ற பெயர்பெற்றுச் சிறந்தனர். அம்மரபினர்க்கு இக் காலத்து ஆதிசைவர் என்ற பெயர் அமைக்கப்பட்டுள்ளது.

அவர்களது நெறியே ஆகம நெறியாகும். அவ் ஆதிசைவ மாபில் தோன்றிய மாணிக்கவாசகப் பெருமானுக்குத் திருப் பெருந்துறையில் சிவபெருமான் ஞானோபதேசஞ் செய்த முறையும் ஆகம முறையே யாகும். அவ்வாறே திருக் கைலாய மலையின்கண் சிவபெருமான் திருநந்தி தேவர்க்கு அறிவு நெறியினை அருளிச்செய்து அவர் வாயிலாக எண்ம ருக்கு வெவ்வேறு காலத்தில் ஞானத்தை நல்கி யருளினர். அவ்வெண்ம ராவார்: சனகர், சனற்குமாரர், சனந்தனர், சனாதனர், சிவயோகமாமுனி, பதஞ்சலி, வியாக்கிர பாதர், திருமூலர். அது,

நந்தி யருள்பெற்ற நாதனை நாடியே
னந்திக ணல்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்கிர
ரென்றிவ ரென்னே டெண்மரு மாமே

என்ற திருமூலர் திருவாக்காலும் உணரப்படும். இவருள் சனற்குமார மகா முனிவரே மெய்கண்ட சந்தானத்திற்குத் தலைவர். இவரையே சமயப் பொதுக் கழகத்தார் (Theosophical Society) தங்கள் பெரியோர் உட்கழகத் (Esoteric Society) திற்குத் தலைவராகக் கொள்ளுகின்றார்கள். வெள்ளி மலையில் அவரும் அவரைச் சார்ந்தாரு மிருப்ப தாக நமது புராணங்கள் கூற வெள்ளி மண்டலத்தில் அன் னோர்கள் இருப்பதாக அக்கழகத்தார் கூறுகின்றார்கள். இவர் வாயிலாக விஞ்ஞான தேவர் சந்தானம் மெய்கண்ட தேவர் சந்தானம் என்ற இரண்டு பாம்பரை முதற்கண் ஏற்பட்டுப் பின் பலவாயினவென்று அறிகின்றோம். அப் படியே திருமூலர் முதலிய பிற எழுவர் வாயிலாகவும் பல


Louis XII.

பாம்பனைகள் உலகத்தில் தைவசித்தாந்த ஞானத்தை வெவ் வேறு காலங்களில் பரவச் செய்தன. அவற்றின் விவரம் கீழ்க்குறித்த அட்டவணையிற் காண்க.

திருமூலதேவராற் பிரமதேவர், இந்திர தேவர், விஷ்ணு தேவர், உருத்திர தேவர், கந்துரு மகா விருடிகள், காலாக்கினி யுருத்திரர், கஞ்சனூர் மலையமான் என ஏழுவர் சந்தான மேற்பட்டன.

வியாக்கிரபாத முனிவரால் சத்தியோஜாத தேவர் சந்தானம் ஏற்பட்டது.

பதஞ்சலி முனிவரால் நிறைந்த காயனூர் சந்தானம் ஏற்பட் டது.

சிவயோக முனிவரால் வாமதேவர் சந்தானம் ஏற்பட்டது.

சனற்குமாரரால் பிரமதேவர் சந்தானமும், சிங்கநாத தேவர் சந்தானமும் என இரண்டு ஏற்பட்டன.

சனந்தனராற் பிரமதேவர் சந்தானமும், சிவமண்ணிய தேவர் சந்தானம், பரமதேவர் சந்தானம், சிவானந்தபோதர் சந்தானம் என மூன்று ஏற்பட்டன.

சனற்குமாரரால் விஞ்ஞான தேவர் சந்தானம் மெய்கண்ட தேவர் சந்தானம் என இரண்டு ஏற்பட்டன.

சனகராற் சம்பு சந்தானம், மலையமான் சந்தானம் என இரண்டு ஏற்பட்டன.

ஏறக்குறைய எட்டு நூற்றாண்டுகட்குமுன் இத்தமிழ் நாட்டிலே தோன்றி நிலைபெற்ற மெய்கண்டதேவர் சந்தானமே நமது ஆராய்ச்சிக்கு உரியதாகும். உலகந் தோன்றிய

காலந்தொட்டுப் பலபல காலங்களில் பலபல சந்தானங்கள் சித்தாந்தஞானத்தை உலகிற்கு விளக்கிய போதிலும் அதன் ஒளி பல காரணங்களால் சில நூற்றாண்டுகட்கு முன்னே நமது நாட்டிற் குன்றுவ தாயிற்று. புத்தசமயம் மிகுந்த காலத்தே ஸ்ரீமணிவாசகப் பெருமான் தோன்றி யருளி தமது அருள்நூலாலும் அருள் வாழ்க்கையாலும் சித்தாந்தஞானத் தைத் தமிழ்நாட்டிலே நிலைநாட்டினர். தேவார முதல்வர்கள் அன்பு நெறியில் நின்று தமது திருவருட் பாடல்களினாலே சித்தாந்த சமயத்தை நிலைநாட்டிச் சமண சமயத்தால் வந்த இடர்களை நீக்கியருளினார்கள். அவர்க்கு முன்னே பின்னே திருமூலமா முனிவரும் பதஞ்சலி முனிவரது பரம்பரையில் நிறைந்த நாயனார் சந்தானத்தில் வந்த ஞானமிர்த நாலாசிரிய ராகிய வாகீச முனிவரும் சைவசித்தாந்த உண்மைகளை உலகிற்கு வெளிப்படுத்த இயற்றிய நூல்கள் இன்றும் உள்ளன.

ஒன்பதாவது நூற்றாண்டிற்குப் பின்னே, வேத வியாசரியற்றிய பிரம சூத்திரத்திற்குச் செய்யப்பட்ட நால்வகைப் பேருரைகளாகிய நீலகண்ட பாடியம், சங்கர பாடியம், இராமாநுஜ பாடியம், மாத்துவ பாடியம் என்னும் மாறுபட்ட விரி நூல்கள் தமிழ்நாட்டிலே பரவி சமயக் கொள்கைகளைப் பற்றிப் பெருங் குழப்பத்தைக் கிளப்பினமையால் சைவ நன்மக்கள் திருமூலைகள் முதலிய சித்தாந்த நூல்களின் உண்மைப் பொருளாராய்ந்து வலமந்தனர். ஆதி மறைக் கருத்துக்களைச் சிறுபான்மை யுள்ளடக்கிய வடமொழி உபநிடதங்களுட் போந்த அத்துவித மென்னும் சொல்லிற்குப் பொருள் இன்னதென்று தெரியாமல்

அறிவுநூல் கற்போர் பலரும் மயங்கித் தியங்கினர். அம்மயக் கந் தீர்த்தற் பொருட்டும் திருமுறைப் பெருமையை உலகில் நாட்டற் பொருட்டும் சிவபெருமானது திருவருளினால் மெய்கண்ட சந்தானம் இத்தமிழ் நாட்டில் ஏற்பட்டதாகத் தெரிகின்றோம்.

‘ நல்வியாத முனியுணைசெய் சூத்திரத்தின்
பாடியமோர் நான்குங் கொண்ட
சொல்வாய்மை பொருள் வாய்மை தெளிதலுற்ற
தோராது சேக முற்றோ
ரெல்லாரு மத்துவித சுத்தநிலை
யினிதெய்திச் சேக மேயப்
பொல்லாத சமயிகளு மதிசயிப்பப்
புவனிமிசைப் போத மேற.’

என்று ஸ்ரீமெய்கண்டார் பிறப்பிற்குக் காரணங் கூறும் சந்தானாசாரிய புராணசங்கிரகத் திருப்பாட்டால் அது இனிது விளங்கும். மெய்கண்டதேவ நாயனாரால் சித்தாந்த ஞான பரம்பரை இந்நிலவுலகிலே பிறசந்தானங்கள் மறைவெய் தியபின் நிலைநாட்டப்பட்டது. அப்பரம்பரையி லுள்ளோர் மெய்கண்ட சந்தானத்தைச் சேர்ந்தவர்கள் என்று அழைக் கப்படுகின்றார்கள்.

மெய்கண்ட சிவாசாரியர் புராணம் பதினெண்புராணத் துள் பவிடிய புராணத்துள் கூறப்பட்டதாகச் சந்தானாசாரியர் புராண சங்கிரகம் என்னும் நூலியற்றிய சுவாமிநாத தேசிக ரவர்கள் தெரித்துள்ளார்.

“ பம்பிட நவில் புராணம் பதினெட்டுள் பவிடியத்தி
லெம்பெரு மக்கள் காதை யிணையன திகழுமன்றே.”

பவிடியத்துள் அவர் வரலாறு கேட்கப்படுவதற்குக் காரணமில்லை. மெய்கண்ட தேவர் காலம் எறக்குறைய 800-ஆண்டுகட்கு முன்னரென்று ஊகிக்க இடமுண்டு. ஸ்ரீ உமாபதி சிவாசாரியர் தமது சங்கற்பநிராகரணத்துள் அந்நூல் இயற்றப்பட்ட காலம் "எழுஞ்சு இருநூறெடுத்த வாயிரம், வாழு நற்சகனம் மருவா நிற்ப" என்ற விடத்துச் சாலிவாகன சகாப்தம் 1235-வது ஆண்டெனக் குறித்துள்ளாராகலின் அவர் காலத்திற்குச் சுமார் இரண்டல்லது மூன்று கலை முறைக்குமுன் ஸ்ரீ மெய்கண்ட தேவர் ஞானவொளி பரப்பத் தொடங்கினர் என்பது தெளிவாம். ஆயின் அவர் காலத்திற்குப் பின் பவிடிய புராணத்துள் அவர் வரலாறு கேட்கப்படக்கூடியது அவர் காலத்திற்கு முன்னேயே பவிடியம் அவரது வரலாற்றோடு தொன்றியிருக்குமென்று கோடல் சரித்திரவாராய்ச்சிக்குப் பொருத்தமானதல்ல. எதிர்காலத்துச் செய்திகளை முற்கூறல் சோதிட நூலுக்கே பெரிதும் பொருத்தமாம். பவிடியபுராணம் சோதிட நூலுமல்ல. பாரத முதலிய சில நூல்களுள் கால விபவ்பு முதவியவற்றைக் கூறியிருத்தல் காலத்தின் பொதுவிபவ்பு கூறிய தாகுமேயன்றி வருங்கால டக்கள் சரித்திரங்களை விதந்தோதிய தாகாது. தமிழ்ப் பெரியோரது சாத்திரங்கட்கு வடநூன் மூலம் வேண்டுமென்ற தப்புக் கொள்கை சில நூற்றாண்டுகளாக நம்மவர் மனதில் புகுந்து நிற்பதே இங்ஙனம் மெய்கண்ட தேவர் முதலிய சந்தான குரவர் சரித்திரத்திற்கு வடநூல் மேற்கோள் கூறியதற்குக் காரணமாகும். இவ்வாறே உண்மையில் வடநூல் மேற்கோளில்லாத தலமான்மியங்களுக்கு வடநூல் மேற்கோள் கூறும் பொய்

நெறியும் நமது நாட்டில் நிலவுதலாயிற்று. இங்ஙனம் தமிழையும் தமிழ்ப் பெரியோரையும் வடநூலுக்கும் வடநூலாசிரியர்க்குமே தாழ்ந்த நிலையில் வைத்துப் பேசும் பொய் வழக்கத்தைத் தமிழ்ப் பற்றுடையார் கைவிடுதல் வேண்டும். உண்மையாக வடநூலிலுள்ளவற்றைத் தமிழில் மொழி பெயர்ப்பதாலும் அம்மொழி பெயர்ப்புக்கு வடநூல் மேற் கோள் கூறுதலைப்பற்றி ஒருவரும் குறைகூறார். வடநூல் களிலில்லாததைத் தமிழினின்றும் அதனுள் மொழி பெயர்த்து அவ்வடநூல் மொழிபெயர்ப்பையே தமிழ்மூலத் திற்கு மூலம் என்று கூறுதலே அறிவுடையாரால் கடியப் படத்தக்கது. தில்லையம்பலவ ரடியெடுத்துக் கொடுக்கத் திருத்தொண்டத் தொகையையும் நம்பியாண்டார் நம்பி திரு வந்தாதியையும் கருவியாகக் கொண்டு சேக்கிழார் சுவாமிக ளருளிச் செய்த பெரிய புராணம் மூதனூலாக விருப்பவும் அதன் மொழிபெயர்ப்பாகிய உபமன்னிய பத்த விலாசம் அதற்கு மூதனூலென்று கூறும் பொய்யுரையும், அவ்வாறே சிவரகசிய மென்றும் வடமொழி நூலுள் அயுபத்துமூன்று நாயன்மார் சரித்திரங்களைச் சிவபெருமான் உமையம்மை யார்க்குத்தெரிவித்ததாகப் புகுத்திக் கூறுங் கட்டுமொழியும் உண்மைக்கும் சேக்கிழார் சுவாமிகள் பெருமைக்கும் நேர் பகையாம். ஸ்ரீமத் உமாபதி சிவாசாரியரவர்கள் சிவப்பிரகாச அவை யடக்கத்துள் "தொன்மையவா மெனும் எவையும் நன்றுகா இன்று தோன்றிய நூலெனு மெவையுந் தீதாகா" என்று திருவாய் மலர்ந்தருளியதை நம்மவர்கள் கடைப் பிடிக்கவேண்டும். அங்ஙனம் கடைப்பிடித்துத் தமிழுக்கு உண்மையிலுள்ள பெருமையைக் காவாவிடின் திருவள்ளு

வர் குறள் முதலியனவும் வடநூலின் திரிபென்னும் பொய்க் கொள்கையானது தமிழ் நாட்டில் நிலைபெற்றுவிடும். அதற் கிப்பொழுதே பலர் கங்கணங் கட்டிக்கொண்டு திரிகின்ற னர். ஔவையாரது ஆத்திசூடிக்கும் கொன்றைவேந்தனுக் கும் திருவள்ளுவரில் ஒருபகுதிக்கும் ஆரியத்தில் (வட மொழியில்) மொழிபெயர்ப்புகள் ஏற்பட்டு விட்டன. இப் பொழுது அவை மொழி பெயர்ப்பு நூலென்றே கூறப்படு கின்றன. இன்னுஞ் சிலகாலஞ் தமிழ் மக்கள் தூங்குவார்க ளென்றால் அம் மொழிபெயர்ப்பு நூல்கள் தமிழ் மூல நூல் களுக்கு மூல நூலாதலுங் கூடும். இது நிற்க.

சைவசித்தாந்த சந்தானகுரவர் வரலாறு புராண வடி வமாகத் திருவாரூர் சுவாமிநாத தேசிகரவர்களால் இயற் றப்பட்டதென்று மேற்கூறினோம். அவர் காலம் தெளிவாக விளங்கவில்லை. சந்தான குரவரைப்பற்றித் தருமபுர ஆதீனத்தைச்சார்ந்த சண்முக சுவாமிகள் என்பவர் சந் தானதேசிகர் போற்றிக் கலிவெண்டா வென்னும் நூல் செய்துள்ளார். சந்தானகுரவர் நான்மணி மாலை யென்ற நூல் காலஞ்சென்ற திருமயிலை வித்துவான் சண்முகம் பிள்ளையால் பாடப்பட்டது. சந்தானகுரவர் சோத்திரம் பல புராணங்களுள்ளும் காணப்படுகின்றது. முதற்கண் மெய்கண்ட தேவர் சரித்திரமாதலாற் பாலது.

மெய்கண்டதேவர் புராணம்

தொண்டை நாட்டிற்குஞ் சோழ நாட்டிற்கும் நடுவே யுள்ளதாய்த் திருநாவுக்கரசு நாயனாருஞ் சுந்தரமூர்த்தி நாயனாருந் தோன்றியிலங்கிய திருமுனைப்பாடி என்னும்

நடுநாட்டிலே திருப்பெண்ணாகடம் என்னுமூரிலே சைவ வேளாள குலத்திலே அச்சுத களப்பாளர் என்னும் குல திலகருக்குத் தவப்புதல்வராக ஸ்ரீ மெய்கண்ட தேவர் தோன்றி யருளினர். பண்டைத் தமிழரது செந்நெறிக் கொள்கையாகிய சித்தாந்த ஞானத்தை உலகில் நிலைநாட் டுவான் வந்த அருட்போராசிரியர் பண்டைத்தமிழ் மக்களது சிறந்த நாகரிகத்தைப் பழுதுபடாவண்ணம் போற்றிவரும் சைவ வேளாளர் மரபிலே உதித்தல் மிகவும் பொருத்த முடையதே. அவர் தவங்கிடந்து பெற்ற தனிப்புதல்வ ரென் பது யாங்ஙனமெனின், கூறுதும்.

நாயனாரது தந்தை அச்சுத களப்பாளர்க்குப் பன்னு ளாகப் பிள்ளைப் பேறில்லாக் குறை யேற்பட்டிருந்ததால் தமது குலகுருவாகிய திருத்துறையூர் அருணந்தி சிவாசாரி யாரிடம் சென்று அக்குறை நீங்குதற் பொருட்டுச் செய் வது யாதெனா அவர் வினவினர். அப்போது ஆசிரியர் திருமுறையைப் பூசித்துக் கயிறு சாத்திப் பார்த்தனர்.

“ பேயடையா பிரிவெய்தும் பிள்ளாயிமே ணெள்ளநினை
வாயினதே வரம்பெறுவ னையுறவேண் டாவொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாந் தீவினையே ”

என்னுந் திருப்பாட்டு அகப்பட்டது. அச்செய்யுளுள் திருவெண் காட்டிலுள்ள முக்குள நீரில் நீராடுபவர்க்குப் பிள்ளாயிமேறு என்ணிய யாவும் கைவருமென்று அறுதி யிட்டுக் கூறியிருத்தலின், ஆசிரியர், அச்சுத களப்பாள ரைத் திருவெண்காட்டிற்குச் சென்று முக்குளநீரில் முழுகி

அங் கெழுந்தருளியிருக்கும் பெருமானையும் அம்மையை யும் வழிபட்டு வரும்படிக் கட்டளையிட்டார். அக்கட் டளையைச் சென்னி மேற்கொண்டு அச்சுத களப்பாளர் தமது மனைவியாரோடும் திருவெண் காட்டிற்குச் சென்று ஆசிரியர் விதித்தபடி யொழுகி அறங்கள் பலவுஞ் செய்து வந்தனர். அங்ஙனம் ஓராண்டு அவர் வதியுங் காலத்து ஒரு நாள் அவருக்குக் கனவில் சிவபெருமான் றோன்றி 'அன்ப, இப்பிறவியில் மகப்பேறெய்துந் பான்மை நினக்கு இல்லை' என்றுரைத்தனர். அதுகேட்ட அச்சுத களப்பாளர் 'ஞான சம்பந்தப் பெருமானது திருவருட் பாடலை நம்பி ஈண்டுத் தவங் கிடந்ததின் பெரும்பயனை இம்மையிலேயே நற்புதல்வனை நீவிர் அடியேற் கருளுதல் வேண்டும்' என்று விண்ணப்பஞ்செய்து பன்முறை பணிந் தனர். அப்போது அம்மையப்பராகிய சிவபெருமான் கருணை கூர்ந்து 'ஞானசம்பந்தன் நம்மைத் துதித்த பாட்டின்கண் உறுதி வைத்து எம்மை வழிபட்டமையால் அன்னவன் போன்ற மகவினை நீவிரும் பெற்று வாழ்திர்' என்று திரு வாய் மலர்ந்தருளினர். அதனைக்கேட்ட அச்சுத களப்பா ளர் அளவில்லாத மகிழ்ச்சி படைத்து தன்னெஞ்சியபின் முன்போலவே சிவபெருமானை வழிபட்டு அவரருளியின் ஒழுகுவாயினர்.

கனவிற் கண்டதெல்லாம் பொய்யென்று தூக்கி விடு தல் தவறு. கனவென்பது நுண்ணுடம்பின் நுகர்ச்சியாக வுள்ளது. நமது கண்ணிற்குப் புலனாக நின்ற வுடம்பே தூல வுடம்பென்று கூறப்படும். அவ்வுடம்பு கொண்டு தன விலே உயிர் போதல் வருதல் முதலியன செய்யும். தூங்

கும்போது கட்புலனாகாத நுண்ணுடம்பு பலவித நற்சக்தி களை யடைதல் கூடும். அருந்தவத்தினரது கட்புலனுக்கு அருள் செய்புந் கடவுள் அவரது நுண்ணுடம்பிற்கு மாத்திரையே புலனாகும் வண்ணம் தோன்றுதலு மியல்பே. தமது நுண்ணுடம்பைப் பருவுடம்பினின்றும் வேறு பிரிக்கு மாற்றலுடைய யோகிகள்கூட ஏனையோரது நுண்ணுடம்பிற்குப் புலனாகும் வண்மை யுடையாரென்பது இவ்வாராய்ச்சியில் (Psychic Research) வல்ல மேலைநாட்டுப் பண்டிதர் சிலரும் ஒப்புக் கொள்ளக் கூடியதே. நனவிற் கண்டது கனவில் உருவெளித் தோற்றம்போல் புலனாவது இதனின் வேறாகும். கடவுளரும் யோகிகளரும் கனவில் தோன்றும் முறை வேறு. பின்னது பிற்பயன் விளைப்பது, முன்னது ஞானக்கண்ட பயனென்றும் விளைப்பதில்லை. கனவில் தோன்றிய பெருமக்கள் தாம் அங்ஙனந் தோன்றியதை நனவில் உணர்த்தல் கூடுமாதலின் அன்னவர் தோற்றத்தைக் கனவின் பொய்த் தோற்றத்தோடு பிறழக்கொள்ளுதல் கலாகாது. இதன் நுட்பங்கள் இவண் விரிக்கிற் பெருகும். இது நிற்க, வாலாற்றின் தொடர்ச்சியை நோக்குவோமாக.

பின்னர், அச்சுத களப்பாளரது மனைவியார் வயிறு வாய்த்ததறிந்து பத்துத் திங்களிலும் செய்யற் பாலனவாகிய சடங்குகளனைத்தையும் அவர் உவகையோடு செய்து முடித்தனர். சைவசித்தாந்த இளஞ் செஞ்ஞாயிறுகிய மெய்கண்ட தேவர் நல்வேளையிலே நிலவுலகமுய்ய உதித்தருளினர்.

பண்டைமறை வண்டமிழ்ப் பசுந்தேன் ஞானம்
பரிந்தொழுகச் சிவகந்தம் பரந்து நாறக்
கண்டவிரு தயகமல முகைக ளெல்லாங்
கண்டிறப்பக் காசினிமேல் வந்தவருட் கதிர்போன்
விண்டமலர்ப் பொழில்புடைசூழ் வெண்ணெய் நீடவு
மெய்கண்ட தேவன்மிகு சைவ நாதன்
புண்டரிக மலர்தாழச் சிரத்தே வாழும்
பொற்பாத மெப்போதும் போற்றல் செய்வாம்.

(சிவஞானசித்தியார்-பாயிரம்)

அக்காலத்துச் செய்யவேண்டிய சடங்குகளையெல்லாம் முடித்துத் திருவெண்காட்டடிகளிடம் விடைபெற்று, சுற்றத்தார் புடை சூழப் பிள்ளையோடும் மனைவியோடும் அச்சுத களப்பாளர் திருப்பெண்ணாகடஞ் சென்று தமது மாளிகையில் வந்தனர். அவ்வூராரெல்லாம் பிள்ளைப் பேறளித்த நற்செய்தி கேட்டுக் களிப்படைந்தனர். அவ்வருட் குழந்தைக்கு மூதலில் சுவேதவனப் பெருமா ளென்று திருவெண்காட்டடிகள் திருப்பெயரிடப் பெற்றது. சிலநாட் சென்றபின் திருவெண்ணெய் நல்லூரிலுள்ள நண்மாமனார் குழந்தையை எடுத்துத் தமதில்லத்திற்குக் கொண்டுபோய் வளர்த்து வந்தனர். அங்ஙனம் வளர்ந்துவரு நாளில் சுவேதவனப் பெருமாள் முற்பிறவியிலேயே சரியை கிரியை யோகம் முதலியன முடித்துச் சிவஞான மடைதற்குரிய பெருந்தவத்தினராதலின் இரண்டு வயதளவிலே 'அடிசோர் ஞானம்' அடைதற்குரிய சாழு சித்திக நிலை எய்தினர். முற்பிறவியில் உறுதியாகப் பயின்ற கல்வி இப்பிறவியில் இளமையில்

எளிதாகத் தழைத்தோங்கி ஒளிர்வதை இயற்கையிலேயே கணித நூல் வன்மை பெரிதும் படைத் திலங்கும் சில பிள்ளைகளிடம் கண்கூடாக இன்றுங் காண்கின்றோம். இலக் கியங்களை மூன்று அல்லது நான்கு வயதில் படித்துப் பொருள்கூறும் குழந்தை ஒன்று சமீபகாலத்தில் பர்மா வில் தோன்றியதாகக் கேள்விப்படுகிறோம்.

> " ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்கு
> எழுமையு மேமாப் புடைத்து "

என்றார் திருவள்ளுவர். ஒரு பிறவியிற் கற்ற கல்வியின் பயனுகிய நல்லறிவு பல பிறவிகளிலும் உயிரோடு கலந்து வளர்ந்து நிலைபெறுதல்போல பல பிறவியிற் கற்ற பெரும் பயன் ஒரு பிறவியிலே இளம்பருவத்திலேயே அளவிலடங் காது பொங்கி மிளிர்தல்கூடும். அத்தகைய கல்விபோல பல பிறவிகளிற் கடவுள் மாட்டு அன்பு செலுத்தி இயற்றப் படும் அருந்தவமானது ஒரு பிறவியிலே அத்தவத்தின் எல்லையற்ற பயனுகிய கடவுளது அருட்காட்சியை யளிக்க வல்லது. சைவசித்தாந்த சமயத்திற்கு முதற்றலைவராகிய ஞானசம்பந்தப் பெருமானும் சித்தாந்த ஞான பரம்பரைக்கு முதற்றலைவராகிய மெய்கண்ட தேவநாயனாரும் உலகமுய் யவே தோன்றி யருளினர் என்பது அவர்கள் குழவிப் பரு வத்திலேயே உலக நெறி செல்லாது கடவுளது அருண் ஞானநெறியிலேயே நிற்கும் உயர் நிலை எப்தினமையால் விளங்கும்.

சுவேதவனப் பெருமாள் திருவெண்ணெய் நல்லூரி லிருந்த காலையில் திருக்கைலாயத்திலிருந்து சனற்குமார

மூனிவரது ஞானப்புதல்வராகிய சத்திய ஞான தரிசனிக னிடம் உபதேசம் பெற்ற பரஞ்சோதி மாமுனிவர் என் பார் ஆகமத்தலைவராகிய ஐம்முனிவருள் தலைசிறந்த அகத் திய முனிவர் வீற்றிருக்கின்ற பொதியமலை நோக்கிச் செல் லுங் காலத்தில் அவரது ஒளிவிமானமானது திருவெண் ணெய் நல்லூருக்கு நேராக வந்தவிடன் நின்று விட்டது. அதன் குறிப்பை யுணர்ந்த பரஞ்சோதியார் சுவேதவனப் பெருமானைக் கண்டு அவருக்கு மெய்யுணர்வளித்து மெய் கண்டார் என்ற தமது ஞானத் தந்தையின் திரு நாமத் தைச் சூட்டி யருளினர்.

சிவபெருமான் தக்க பக்குவமுடையார்க்குக் குருவாய் வந்துணர்த்துவது பெருட்பான்மையும் தமது போன்றவர நிலைக்களமாகக் கொண்டேயாம். பரஞ்சோதிமா முனிவர் மெய்கண்ட தேவர்க்கு மெய்யுணர் வளித்தகாலை அவர் கடவுளோடு இரண்டறக் கலந்து நிற்கும் நிலையினின்று அருள் செய்தாராகலின் சிவபெருமானே தமது நாயன ருக்கு உண்மைப் பொருள் உணர்த்தியதாகக் கொள்ள வேண்டுமே யொழிய பரஞ்சோதி முனிவர் தாமே அவ் வாறு உணர்த்தினர் என்று கோடல் பொருந்துவதன்றும். இவ்வாறே உபமன்னியர் கண்ணனுக்கு உபதேசஞ் செய்த தாகவும் கண்ணன் பார்த்தற் கறிவுறுத்தியதாகவுங் கூறுப.

மெய்கண்டார் கலைஞானமனைத்தையும் திருவெண் ணெய் நல்லூரில் எழுந்தருளிய பொல்லாப் பிள்ளையாரிடங் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்தனர். பின் அவர் தாம் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறவேண்டுமென்ற திருவுள்ளக் கருத்தால் சிவஞான போதமென்னும் சைவசித்தாந்தக் கலை



டணி ஞான நூலியை இயற்றி யருளினர். அச் சிவஞான போதநுண்பொருளை அவர்பால் கேட்டுத்தெளிந்தோர் நாற்பத்தொன்பது மாணவராவர். அந்நாற்பத்தொன்பதின்மரது பரம்பரை வாயிலாகவே இத்தமிழ் நாடெங்கும் சித்தாந்த அறிவுச்சுடர் கொளுத்தும் ஒளி நிலையங்களாகிய திருமடங்கள் ஏற்பட்டன. முதல் மாணவர் பரம்பரையில்வந்த ஸ்ரீநம சிவாய தேசிகரால் நிலைபேறெய்திய மடம் திருவாவடுதுறை யாதீனமாகும். அதே பரம்பரையில் வந்த ஞான சம்பந்த தேசிகரால் தருமபுர வாதீனம் ஏற்படுத்தப்பட்டது. ஸ்ரீ மெய்கண்ட தேவருடைய மாணவருள் முதல் நின்றவர் அவரது தந்தையார்க்குக் குல குருவாகிய அருணந்தி சிவாசாரியார் என்பது அவர் வரலாற்றுள் விரித்துரைக்கப்படும். பதிணென்கு சித்தாந்த நூல்களுள் ஒன்றுகிய உண்மை விளக்க ஆசிரியராகிய மனவாசகங்கடந்தவரும் அவர்களுள் ஒருவர். சிற்றம்பலநாடிகளும் அவருள் ஒருவரென்ப. மெய்கண்ட தேவநாயனார் தமது மாணவருக்கு உண்மைப் பொருளுணர்த்திய பின்னர் நனவிலேயே அதீதத்தைப் புரிபவராய் இடையறாது சமாதி நிலையிலிருந்து ஐப்பசித் திங்களில் சோதி நாளில் சிவபெருமானடி இரண்டறக் கலத்தலாகிய பரமுத்தியை யடைந்தனர்.

அருணந்தி சிவாசாரியார் புராணம்

அருணந்தி சிவாசாரிய சுவாமிகள் ஆதிசைவ மரபினர். அவர் நடுநாட்டிலேயுள்ள திருத்துறையூரிலே வதிந்தவர். அவர் மெய்கண்ட தேவநாயனருடைய தந்தையார்க்குக்குல குரு வென்றும் மெய்கண்ட தேவர் பிறப்பதற்குக் காரண

மான தேவாரத் திருப்பாட்டினைக் கயிறு சாத்திக் கண்டவர் என்றும் முன்னமே கூறப்பட்டது. அவர் சிவாகமங்களினத் தையுங் கற்றுத் துறைபோகியவராதலால் சகலாகம பண்டிதனென்னும் உயர்ந்தபட்டம் பெற்றிருந்தார். அவர் வடமொழியில் வேத முதலிய கலைகள் யாவற்றையும் நன்கு கற்றதனுடனமையாது செந்தமிழிலேபன்னிரு திருமுறைகள் முதலிய பன்னூல்களையும் நுட்பமாக ஆய்ந்து தெளிந்தவர். அவருக்குத் தேவாரத்தின்கணிருந்த பெரும்பற்று அச்சுத களப்பாளர் பிள்ளை வேண்டிய காலத்து வேறு வடநூல்களில் கயிறு சாத்தாது ஞானசம்பந்தப் பெருமான் திருமுறைக்குறிப்பினை உணரப்புகுந்தமையால் இனிது விளங்கும். இற்றைக் காலத்திலே திருக்கோயில்களில் பூசனை புரியும் குருக்களாகிய ஆதிசைவர்களிற் பலர் தேவாரத் திருமுறைகளிற் சிறிதும் பற்றிலாதவராய்ப் ஆகமநூல் கிடந்த மூலையுந் தெரியாதவராய்த் தம் பெருமை புணராது காலங் கழிக்கும் நிலை எத்துணையோ பரிதாபத்திற் கிடமாக விருக்கிறது! அவர்கள் தங் குலமுதல்வராகிய அருணந்தி சிவாசாரிய மூர்த்திகளது சரித்திரத்தைக் கருத்துடன் கற்பார்களாயின் தமது நிலையைத் திருத்திக் கொள்ள முயல்வது திண்ணம். சைவ சமயத்திற்கு ஆசிரியர்களாய் விளங்கும் இவர்கள் இழிந்த நிலையிலிருப்பதனுலேயேதான் அச்சமயத்திற் பிறந்த பலரும் தங்நெறி யீதென உணராது புறச்சமயங்களைத் தம்மதமெனக்கொண்டு மயங்குவதற்கு ஏது வாயிற்று. அகத்தியர் முதலிய பெருமுனிவர்களும் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள், ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள்முதலிய சமயாசாரியர்களும் ஆதிசைவ மரபைச் சார்ந்தவர்க

லென்பது இக்காலத்திலுள்ள சைவக் குருக்கள் மனதில் பதியவேண்டியதொன்று.

அருணந்தி சிவாசாரிய சுவாமிகள் தம் நாட்டிலுள்ள சைவர்கள் பலருக்கும் குலகுருவாக இருந்து ஐந்தெழுத்து ஓதுவித்தும் தமது பெரும்போதனையால் சைவநெறி நிலை நாட்டியும் சைவசித்தாந்தத்திற்கோர் தலைவராய் விளங்கினார். அவர்பால் ஞான நூல்களைப் பாடங் கேட்டவர்கள் எண்ணில்லாதவர்கள். எவ்விடத்திற்குச் சென்றாலும் தமது மாணவர்க்கு நல்லது போதித்தற் பொருட்டும் சித்தாந்த வுண்மைகளை நிலை நாட்டுதற் பொருட்டும் சிவாகமங்களைத் தனி வண்டியில் ஏற்றிக்கொண்டு போவதாக அவர் புராணங் கூறுகின்றது. அவர் சரியை கிரியை யோகம் ஞானமென்னும் நான்கு பாதங்களையுங் கூறு மூலாகமங்களையும் உபாகமங்களையும் பாதுகாத்ததுபோல அவர்க்குப் பின் வந்தோர் பாதுகாவாமையால் இப்போது ஆகம இலக்கிய முழுதும் அகப்படாமலும் வெளிப்படாமலு மிருக்கின்றது. மூலாகமங்கள் இருபத்தெட்டு. உபாகமங்கள் இருநூற்றேழு. இவற்றுள் சிற்சிலவே இப்பொழுது கிடைக்கின்றன. அவற்றுள்ளும் ஒவ்வொரு பகுதியே அச்சிற்கு வந்துள்ளது. காமிகம், காரணம் முதலிய மூலாகமங்களுள் கிரியாபாத மாத்திரமே அச்சுவாகனம் ஏற்றப்பெற்றன. ஏனைய பகுதிகள்கிடைக்கப் பெறவில்லை. உபாகமங்களுள் பௌஷ்கரம், மிருகேந்திரம், சர்வ ஞானோத்தரம், சிவதருமோத்தரம் என்னுஞ் சில நூல் களே வெளிவந்துள்ளன. வடநூல்களை அச்சிடுவோர் தமிழில் அவற்றிற்குச் சம்மையான மொழிபெயர்ப்பில்லாமல் வெளிப்படுத்துதல் தமிழ் மக்களுக்குப் பெரும்பயன் விளைக்

காது. சிவாகம சங்கங்கள் ஆகமநூல்களைத் தேடிக் கண்டு பிடித்தெழுதி அவற்றைச் செவ்வையான மொழிபெயர்ப் போடு திருத்தமான அச்சில் வெளிப்படுத்த முயலுமானால் தமிழ் மக்களுக்கு அது பேருதவியாகும். வைதிகப்பக்கத் திலே நூல்களைப் போற்றிப் பாதுகாப்பார்களைப் பார்த்து ஆகமிகளும் அவ்வாறு தங்கள் நூல்களைப்போற்ற ஊக்கங் கொளல் வேண்டும். வைதிகப்பக்கத்திலே வேத நான்கும் ஆயுர்வேத முதலிய உபவேதங்களும் வேதாந்த நூல்களும் வேதாங்கங்களும் உபநிடதங்களும் மிருதி பதினெட்டும் பதினெண் புராணங்களும் அவற்றைச்சார்ந்த பிறநூல்களும் பெரும்பாலும் செம்மையான அச்சில் வெளிப்பட்டு விட் டன. வேதாந்த சூத்திரமும் அதன் பாடியங்களும் பெரும் பான்மையும் மொழி பெயர்ப்போடு வெளிவந்துள்ளன. இவைகளால் தமிழ் மக்களுக்குப்பெரும்பயன் விளைவதில்லை. தமிழ்நாட்டிலுள்ள சிவாலயங்களிலும் திருமடங்களிலும் செய்யப்படும் சடங்குகள் யாவற்றிற்கும் சைவர்கள் வீட் டிற் செய்யப்படும் எவ்வகைச் சடங்குகட்கும் ஆதாரமாகிய ஆகமங்களும் பத்ததிகளும் வெளிவராமலிருப்பது மிகவும் பரிதாப மெய்துதற்குரிய நம் நிலையைக்காட்டுகின்றது. ஒரு ணந்தி சிவாசாரியரைப்போல ஆகமக்கடலைக் கரைகண் டுணர்ந்த ஒருவர்கூட இக்காலத்தில்லை. இனியேனும் சைவர்களும் ஆதிசைவர்களும் ஒருங்குகூடி ஆகமங்க ளைப் பாதுகாக்க முயலவேண்டும். ஆகமங்கள் யாவற்றையு மொழிபெயர்த்து, கடவுட்டன்மை வாய்ந்த நமது செந் தமிழிலேயே சடங்குகள் யாவற்றையும் நிகழ்த்துதற் குரிய முறைகளை வகுத்துக் கொள்ளுதல் இன்றியமையாத

தொன்று. 'என்றுமுள தென்றமிழி'லே ஆகமங்கள் நிலை பெறுமாயின் அவைகள் சிதைவுண்டு பழுதுபடா. தமிழ் மக்களும் அவற்றின் நலனை யுணர்ந்து போற்றுவர்.

ஸ்ரீ அருணந்தி சிவாசாரிய சுவாமிகள் சரியை, கிரியை, யோகங்களில் தலைநின்றவராய்த் தமது மாணவராகிய அச்சுதகளப்பாளரின் அருள்ஞானப் புதல்வராகிய மெய்கண்டாரிடம் ஞானோபதேசம் பெறும் பான்மையுடையவரா யிருந்தார். ஆசிரியர் மெய்கண்டார் குழவிப் பருவத்தினராயிருந்தும் மாணவர் பலர்க்கும் ஞான நூல் கற்பிக்கின்றார் என்பதை ஆதி சைவ திலகர் கேள்வியுற்று வியப்புக்கொண்டு தூதர் சிலரை முன் விடுத்துத் திருவெண்ணெய் நல்லூருக்குத் தமது பரிவாரங்களோடும் விருதுகளோடும் புறப்பட்டார். அப்பதியிலுள்ள சைவ வேளாளர் யாவரும் தெருக்களெங்கும் வாழை, கமுகு, தெங்கு என்பவற்றுல்தோரணம்நாட்டி வீடுதோறும் பூரணகும்பமெடுத்து மங்கலவாத்தியங்களொடு தங்கள்குருவை எதிர்கொண்டு வணங்கினர்கள். மெய்கண்ட முதல்வர் மாத்திரம் அருணந்தியார் வரவை எதிர் கொள்ளாது தமது இருக்கையில் வீற்றிருந்தனர். அதைக்கண்ட சிவாசாரியார் மெய்கண்டார்பால் சென்று அவர் தமது மாணவர்க்கு ஆணவமலத்தினியல்பினை எடுத்துமொழிவதைக்கேட்டு அவ்வருள்ஞானச் செம்மலை நோக்கிச் செருக்குஞ் சிற்றமும் உடையவராய் ஆணவசொரூபமாவ தென்னை என்று அதிர்ச்சியோடு கேட்டவுடனே மெய்கண்டார் இன்முகத்தோடு அருணந்தியாரை நேர் நோக்கித் தமது விரலால் சுட்டிக் காட்டி அவர் தான்நின்ற நிலையில் ஆணவவடி

வத்தை விளக்கினர் என்பதைக் குறிப்பித்தருளினர். அந்தச் சிவஞானக் கதிரவனது அருளொளி நோக்கால் மலவிருள் அகலப்பெற்றாராய் உண்மையுணர்ந்து அச்சைவ நாதரது திருவடியில் தாழ்ந்திறைஞ்சி தமக்கு ஞானம் நல்கவேண்டு மென்று குறையிரந்தார். அவ்வாதி சைவமுதல்வற்கு நமது சைவ குலதிலகர் உடனே திருநீறளித்து மெய்யுணர் வருளி சிவஞான போதப்பொருள் தெரித்துக்தமது நாற்பத்தோன் பது மாணவருள் முதன் மாணவராகும் பெற்றி நல்கினர். மெய்கண்டார் தமக்குச் செய்தபெருநன்றியை அருணந்தி சிவம் தாம் சிவஞான போதத்திற்கு வழி நூலாக இயற்றிய சிவஞான சித்தியார்ப் பாயிரத்துள்ளும் இருபா விருபஃது என் னும் சித்தாந்த நூலிலுள்ளும் மிகவும் அழகுபெற விபந்து துதித்துள்ளார்.

இவரியற்றிய சிவஞான சித்தியார் பதினொன்று நூல் களுள்ளும் விரிந்தநூலாய்ப் புறச்சமய மறுக்கும் பரபக்கமும் அகச்சமயம் விளக்கும் சுபக்கமுமுடையதாய் தாயுமானார் முதலிய பெரியோர்களால் பெரிதும் போற்றப் பெற்றதா யுள்ள அருந்தமிழ்நூல். அதன் பாயிரத்தைப் படுத்த செய்யுள் பின்வருமாறு :

என்னெயிப் பவத்திற் சோரா வகையெடுத் தென்சித் தத்தே
தன்னிலைவைத் தருளி னூலே தாளிணை தலைமேற் சூட்டு
மின்னமர் பொழில்சூழ் வெண்ணெய் மேவிவாழ் மெய்கண் டானால்
சென்னியிற் கொண்டு சைவத் திறத்தினைத் தெரிக்க லுற்றும்'

(சித்தியார் சுபக்கம் - செய்யுள்-உ.)

சில காலங்கழித்து, சிவாசாரிய மூர்த்திகள் தமது மாணவர் களுட் சிறந்தவராகிய மறைஞானசம்பந்த சிவாசாரியாருக்கு



ஸ்ரீமாடபதி சிவாசாரியர்.

ஞாலேபதேசஞ் செய்தபின் பரசிவோகபாவனையால் அகண்ட பூரணமானநிலைமை எய்தினர்.

மறைஞான சம்பந்தர் புராணம்

திருப்பெண்ணாகடத்தில் பராசரமுனிவர் பரம்பரையில் தோன்றி மறைகளனைத்தையுங் கற்றுத் தெளிந்தமையால் மறைஞான சம்பந்தனெனப் பெயர் பெற்ற அந்தணர் தலைவர் ஸ்ரீ அருணந்தி சிவாசாரியாரிடம் சென்று 'அடிசேர் ஞானம்' பெற்றுத் தில்லையில் ஞானபூசை இயற்றியிருக்கு நாளில் ஸ்ரீ உமாபதி சிவாசாரியாரது பக்குவங்கண்டு அவர்க்குச் சித்தாந்த ஞான முணர்த்தியபின் அத்தலத்திற்கு வட மேற்றிசையிலுள்ள திருக்களாஞ் சேரியில் வீற்றிருந்து சிவ பெருமானோடு இரண்டறக் கலந்தனர். ஞானநூல் போதித் தலேயன்றித் தாமாக அத்தகைய நூலொன்றும் இவரியற் றியதாகத் தெரியவில்லை.

உமாபதி சிவாசாரியர் புராணம்

தில்லைப்பதியிலே வாழ்கின்ற திருவுடையந்தணர் மர பினில் உமாபதி சிவாசாரியர் பிறந்து வளர்ந்து, பொன்னம் பலவர்க்குப் பூசனைபுரியும் பேறுபெற்றுத் திகழ்ந்தனர். தில்லை மூவாயிரவருள் சிறப்பாக இவர் ஒருவரே சித்தாந்த ஞானத்தை உலகர்க்கு விளக்கினாராவர். தில்லையானது நாவலந்தீவிற்குச் சுழுமுனை நாடியோன்றது. அதன் பிங்கல நாடி இமய நோக்கிச் செல்லும். இடைநாடி இலங்கைக்கு நேரே போகும். சுழுமுனைநாடியே நாடிகள் மூன்றினுஞ் சிறந்து ஐந்தெழுத்தும் நிலைபெறும் ஆதாரங்களை ஒருமைப்

படுத்தி நிற்கும் சிறப்புவாய்ந்தது. ஐந்தொழிலு மியற்று வதற்கு ஏதுவாகிய திருநடனம் செய்யப்படும் ஒளி நிலைய மாகத் தில்லை விளங்குவதால் அதனை எல்லாத் தலங்களினு முயர்ந்ததாகச் சைவநூல்கள் கூறும். இறைவன் தனது சத்தியையே நிலைக்களமாகக்கொண்டு ஐந்தொழில் நடாத்து தலாலே தில்லையானது சிவபெருமான் நடஞ் செய்யும் ஞான காசமாகத் துதிக்கப்படும். இத்தில்லையின்கண் வியாக்கிர பாதருக்கும் பதஞ்சலி முனிவருக்கும் சிவபெருமான் திரு நடனங் காட்டியகாலத்தே அத்திரு நடனங் காணவிரும்பி மூவாயிரம் தாபதர்கள் அம்முனிவர்களைச் சூழ்ந்திருந்தார் கள். அவர்களும் திருநடனங்கண்டு தில்லையில் தங்கினர்கள். இங்ஙனம் பெருமுனிவர்களைச் சூழ்ந்து தாபதர்கள் பலர் வீட்டு நெறி நின்றொழுகுதல் தமிழ் நாட்டு வழக்கமென் பது "அறுவகைப்பட்ட" என்னு முதற்சூத்திரத்தையுடைய தொல்காப்பியச் சூத்திரத்தில்

"மறுவில் செய்கை மூவகைக் காலமு
நெறியி னுற்றிய வறிவன் றேயமும்
நாலிரு வழக்கிற் றாபதப் பக்கமும்"

என்பதற்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறிய உரைபால் விளங்கும். "நாலிரு வழக்கிற் றாபதப் பக்கமும்" என்பதற்கு "அவ்வறிவர் கூறிய ஆகமத்தின் வழி நின்று வீடு பெற முயல்வார்க்கு உரியவாகிய எண்வகை மார்க்கத்துள் தவம் புரியும் கூறும்" என்று பொருள் கூறப்பட்டது. திரு நடனங் கண்ட பெரியோரைக் கூறுமிடத்துச் சிவ பெருமானையே முழுமுதற் கடவுளாக வழிபடும் வைதிகரை யும் தாபதராகிய மூவாயிரவரையும் வேறு பிரித்துக் கூறி

னர் கோயிற் புராண முடையார். அது நடராஜச் சருக்கம் 24-ம் பாட்டில்

"நாரணன் வேதா வாசவன் வானோர் நவைசேரா
வாரண மேலோர் தாபதர் மூவா யிரவோர்நற்
சாரணர் தாவா நாதர் பூதா திகளாசைக்
காரண மேலை நாடலை நேரே கண்டார்கள்"

என்ற அடிகளால் விளங்கும். இதனல் தாபதராகிய மூவாயிரவரும் ஆகமநெறி நின்ற தமிழந்தண ரென்பது தெளியப்படும். திருநடனங் கண்டதின் பயனுக இவர்கள் சிவசாரூபமுடையவராய்க் கணநாதராளர்கள் என்று புராணங் கூறும். திருஞான சம்பந்தப் பெருமானுக்கு அவர்கள் சிவகண நாதராய்த் தோன்றினரென்பது பெரியபுராணத்திற் கூறப்பட்டது. அத்தன்மையைச் சம்பந்தப் பெருமான் திருநீலகண்ட யாழ்ப்பாணருக்குங் காட்டினர்.

"நீலத்தார் கரியமிடற்றர் நல்ல நெற்றி மேலுற்ற கண்ணினர்பற்று
சூலத்தார் சுடலைப்பொடி நீறணிவார் சடையார் [தொழுக்
சீலத்தார் தொழுதேத்து சிற்றம்பலஞ் சேர்தலர்ற் கழற்சேவ டிகை
கோலத்தா யருளாயுன காணங் கூறுதுமே"

(கோயில்)

என்ற திருப்பாட்டினல் அவரது வடிவங் கூறப்பட்டது காண்க. சிவவடிவம் பெற்றமையால் அவருள் தாமு மொருவராகக் கூத்தப் பெருமான் இரணியவன்ம னென்னும் அரசனுக்குத் தம்மைக் காட்டினதாக அறிகின்றோம். தில்லைத் திருநடனங்கண்டு அவண்வதிந்த மூவாயிரவரும் வடநாட்டில் அயன் செய்த வேள்

ணிக்கு அத்தேவன் அழைக்கச்சென்று மீண்டார்க ளென்று கோயிற் புராணம் கூறுகின்றது. அதற்குப் பின்பு அவர்கள் முத்தி போம்புதலைக் கைக்கொண்டு சிவநெறிச் சார்பாகிய வைதிக நெறியினையும் பொது நன்மைக்காகப் போற்றிவந்தார்களென்று அறிகிறோம். இவ்வாறு சைவ நெறியுங் குற்றமற்ற வேள்விநெறியுங் கைக்கொண்டமை யால் அவர்களைச் சேக்கிழார் சுவாமிகள் முதலியோர் மிகுதி யாகப் புகழ்ந்துள்ளார்கள். வீடுபேற்றிற் கேதுவாகிய திருநீற்றில் மிக்க அன்புடையவராய் உலகின் துன்பம் நீங்குவதற்கு மழைபெய்யும் பொருட்டுக் கேடிலா வேள்வி செய் யந்தணராய் அவர் விளங்கினமையால்

“மறுவிலா மரபின் வந்து மாறிலா வொழுக்கம் பூண்டா
ரறுதொழி லாட்சி யாலே யருங்கலி நீக்கி யுள்ளா
ருறுவது நீற்றின் செல்வ மெனக்கொள்ளு முள்ள மிக்கார்
பெறுவது சிவன்பா லன்பாம் பேறெனப் பெருகி வாழ்வார்”

(பெரிய புராணம்-தில்லைவா ழந்தணர் சருக்கம்.)

என்று துதிக்கப் பெற்றனர்.

இத்தகையதில்லைவா ழந்தணர்கள் பலருந் தற்காலத்தே தம்பெருமை யுணராது தமது உண்மை நெறி சிவாகமநெறி யென்று முணராது சிவபெருமானை நோக்கிச் செய்யும் வேள்வியிலா வேள்வி இயற்றும் உயர்மறை நெறியையும் தழுவி நில்லாது சுமார்த்த மதத்தினரது கொள்கையைத் தழுவிக்கொள்ள முயன்று வருவது மிகவும் இரங்கத் தக்க செய்கையாம். இவர்கள்தங் குலமுதல்வராகிய உமாபதி சிவத்தின் உயர்திரு வாக்கினைக் கடைப்பிடித்து ஒழுகுவா

ராயின் சைவப் பெருமையை உலகில் நாட்டினவ ராவர். இது நிற்க.

ஸ்ரீ உமாபதி சிவாசாரியர் சிவாகமங்களெல்லாம் இனிது கற்றுத் தவநெறியொழுகி இறைவரது ஒப்பற்ற திருவருள் பதிதற்குரிய பருவம் வாய்ந்திருந்தார். அவர் ஒருநாள் கூத்தப் பெருமானுக்கு வழிபாடு முடித்துத் தமது வீட்டிற்கு வழக்கமாக அமைந்த விருதுகளோடு சிவிகைமேற் செல்வாராயினர். அங்ஙனஞ் செல்லுங்கால் வீதியிலே ஒரு திண்ணையில் மறைஞான சம்பந்த சிவாசாரியர் தமது மாணவரோடு வீற்றிருந்தனர். அவர் தமது சிடரை நோக்கி "பட்ட கட்டையிற் பகல் குருடு எகுதல் பாரீர்" என்று சொன்னர். இச்சொற்களைக் கேட்ட உமாபதி சிவாசாரியர் சிவி கையினின்று விரைவில் இழிந்து மறைஞான சம்பந்தர் திருவடியைப் பொன்பொடு தொழுது அவர் சொன்ன வாக்கியத்திற்குப் பொருள் கேட்டார். அவர் அதன் பொருள் தெரித்த பின்பு அவர் திருவடித்தொண்டு பூண்டு உமாபதி சிவம் ஒழுகலாயினர். (பட்டகட்டை என்றது சிவிகை.) பகலிலும் உபசார விருதாக விளக்கெடுத்துச் சென்றதன் காரணமாகப் பகற்குருடு என்ற வாக்கிய மெழுந்தது. அதனுல் நிலையாமை உணர்த்தியவாறும். ஸ்ரீ உமாபதி சிவாசாரியர் சிவஞானப் பேறென்றனேபே விரும் பிச் சாதி குலம் பிறப்பென்னும் தடஞ்சுழியைக் கடந்து நின்றார். ஒருநாள் சிடருடைய பக்குவ மறிதற் பொருட்டு மறைஞான சம்பந்தர் கைக்கோளர் தெருவிற் சென்று பாவிற் செலுத்திய கூழின் மிச்சத்தை விடாய் தணித்தற் பொருட்டு வாங்கி உண்டார். அப்போது அவர் புறங்கை

யில் ஒழுகிய மிச்சத்தை உமாபதிசிவம் எந்திப் பருகினர். உடனே மறைஞான சம்பந்தர் அவருக்கு ஞானோபதேசஞ் செய்து சிவஞானபோதப் பொருள் உரைத்தனர். இவர் இங்ஙனம் மரபு கடந்து ஞானம் பெற்றதின் சிறப்பை யுணராது ஏனைத் தில்லைவாழந்தணர்கள் இவரைக் குலமுறை பிறழ்ந்தவராகக் கொண்டு நடேசப் பெருமானுக்குப் பூசை செய்யத் தகுதியற்றவ ரென்றிகழ்ந்தனர். ஆதலினால் அவர் சிதம்பரத்திற்குக் கீழ்த் திசையிலுள்ள கொற்றவன் குடி யென்னும் ஊருக்குச்சென்று அங்கே மடமொன்று அமைத்து அதில் தமதடியார் சூழச் சிவபெருமானை விதிப் படி வழிபட்டிருந்தார்.

ஸ்ரீ உமாபதி சிவாசாரியர் பொன்னம்பலவருக்குப் பூசை செய்தற்குரிய நாள் வரவும் சிற்சபைக்கு அவரைச் செல்லவொட்டாமல் ஏனையோர் தடுத்துவிட்டபடியால் அவர் தம்முடைய மடமெய்தித் தளர்வுற்றிருந்தார். ஏனைத் தில்லைவாழந்தணர்கள் திருமன்றிற் சென்று அழகிய சிற்றம் பலமுடையாரது பேடகத்தைத் திறந்து பார்க்கவும் அங்கே திருவடிவத்தைக் காணாமையால் அச்சமுற்றுப் பெருங் கவலை யுற்றனர். அப்போது யாவருங் கேட்க வானில் ஒலித்த மொழியாவது: "நம்மைப் பூசையாற்றுந் தகுதி யுடையவன் உமாபதியாதலால் அவன்பா லமர்ந்தோம்" என்பது. இதைக்கேட்டவுடனே யாவரும் ஒருங்குகூடிக் காயிடஞ்செல்லும் கன்றுகள்போல உமாபதிசிவத்தின் திரு மடத்திற்கு ஓடிச்சென்று அவரிடம் தங்கள் குற்றத்தை மன்னிக்க வேண்டுமென்றும் அவர் தில்லைப்பெருமானைப் பூசைசெய்தல் வேண்டுமென்றும் முறையிரந்து நின்றார்கள்.

அவர் அவ்வாறே அம்பலஞ்சென்று கடவுட் பூசைமுடித்துத் தன் திருமடத்திற்கு மீண்டனர்.

அவர் தமது சீடர் பலருள்ளும் புலையர் குலத்திலுதித்த பெற்றான் சாம்பான் என்பார்க்கு முத்திகொடுத்த வரலாறு மிகவும் அதிசயமானது. பெற்றான் சாம்பான் என்பவர் முற் பிறவியிலேயே பெருந்தவம் ஆற்றியும் சிறிது வழுவினால் தாழ்குலத் துதித்தனர். அவர் நடராஜப் பெருமானிடம் அன்புடையவராய்த் திருக்கோயிலுக்கு விறகு வெட்டிக்கொண்டு வந்து சேர்ப்பதையே தமது பணிவிடையாகக்கொண்டார். அவருக்குக் கனவில் நடேசப்பெருமான் தோன்றித் தன்பால் பேரன்புடைய உமாபதியாருக்குப் பணிவிடை செய்யும்படி கட்டளையிட்டார். அவர் அவ்வாறே சென்று உமாபதி சிவாசாரிய சுவாமிகளது திருமடத்திற்கு விறகு கொடுத்துவந்தார். ஒருநாள் பெருமழையினாலே அவர் விறகுகொண்டுவரத் தாழ்த்தமையால் மடத்தில் அடுதீ சமைக்கக் காலந்தாழ்த்தது. அப்போது அதற்குக் காரணமென்னவென்று சுவாமிகள் தமது மாணவரை வினவச் சாம்பனாரது விறகுவாமையால் தடையேற்பட்டது என்று அவர்கள் விடையளித்தார்கள். மறுநாள் அவர் வந்தவுடன் தனக்குத் தெரிவிக்க வேண்டுமென்று உமாபதி சிவம் அவர்களுக்குக் கட்டளையிட்டார். மறுநாள் சாம்பனார் மடத்திற்கு விறகுகொண்டு வருவதற்குமுன் கடவுள் ஒரு பெரியவர் வடிவம்போல் அவருக்குத்தோன்றி ஓரு சீட்டுக்கொடுத்து அதை உமாபதியாரிடம் அளிக்கும்படி பணித்தனர். மறுநாள் திருமடத்திற்கு இரட்டைப்பங்கு விறகு கொண்டுவந்தவுடன் அங்குள்ள மாணவர்கள் உமாபதி

சிவத்திற்கு அவர் வரவை அறிவித்தார்கள். அப்போது உமாபதிசிவம் அவர் யாரென்று வினவ, அவர் பெரியவர் கொடுத்த சீட்டை அவரிடம் கொடுத்தார். அந்தத் திரு முகத்தைப்பார்த்துக் கண்களில் ஒற்றிக்கொண்டு உடம் பெங்கும் புளகங்கொண்டு கூத்தப்பெருமானது திருவருளை வியந்தனர். அந்தச்சீட்டில் எழுதியிருந்த பாட்டாவது:

"அடியாற் கெளியன் சிற்றம்பலவன் கொற்றங்
குடியாற் கெழுதியகைச் சீட்டுப்—படியின்மிசைப்
பெற்றூன் சாம்பனுக்குப் பேதமறத் தீக்கைசெய்து
மூத்தி கொடுக்க முறை."

இத்திருப்பாட்டின் கருத்தின்படி பெற்றூன் சாம்பனுக்கு ஞானதீக்கை செய்யத் தொடங்கவும் அப்போதே அவர் விடெய்துதற்குரிய பக்குவமுடையவராக விருந்தமையால் அதற்குத்தக்க முறையாக சுவாமிகள் அருள்செய்த வுடன் அவர் முத்தியடைந்தார். இதன் உண்மையுணராத சாம்பனரது சுற்றத்தாரும் மனைவியும் மனங்கலங்கி அரச னிடஞ்சென்று அவனைச் சுவாமிகள் தீயால் எரித்துவிட்ட தாகக் குறைகூறித் துயருழந்தார். அப்போது அரசன் சுவாமிகள்பால் சென்று அதைப்பற்றி உசாவியபொழுது சுவாமிகள் தீக்கையின் மேன்மையை யெடுத்து விளக்கினர் கள். அரசன் அங்ஙனமாயின் மற்றொரு தீக்கை அவ்வாறு செய்ய வேண்டுமென்று வேண்டிக்கொண்டான். அப் போது தமது அடியார் குழாத்தைநோக்கி அவருள் சத்நி பாதம் பெற்றவ ரிலராகவே சூழ்ந்து பார்த்துச் சிவபெரு மானது திருமஞ்சன நீராலே வளர்ந்ததாய்க் கோமுகையின் பக்கத்தேயிருந்த முள்ளிச்செடியைத் தக்கது என்று கண்

டார். தமது அருட்பார்வையால் அம்முள்ளிச்செடியைப் பார்த்தவுடன் அது ஒளிமயமாகி ஒரு பிழம்பாக வானில் எழுந்து மறைந்து சிவமேறு கலந்தது. அப்போது அதனைக்கண்ணுற்ற அரசன் எல்லையில்லாத வியப்பும் மகிழ்ச்சியுமடைந்து சுவாமிகளுடைய திருவடிகளைவணங்கி அவருக்குப் பொன்னுடை மாலை முதலியன கொடுத்துத் தன் பிழை பொறுக்கும்படி வேண்டிக்கொண்டு தன் அரண் மனைக்கேகினன்.

பின்னர் ஒருநாள் சிதம்பரத்தில் திருவிழாவிற்குக் கொடியேற்ற அங்குள்ள அந்தணர்கள் முயன்றபோது கொடியெழாமை கண்டு அவர்கள் கவலையுற்றனர். அப் பொழுது விசும்பில் 'உமாபதி வந்தக்கால் கொடியேறும்' என்ற திருவாக்கு எழுந்தது. உடனே சுவாமிகளிடம் எல்லோரும் போய் வேண்டினர். அவர்களும் அப்படியே விரைவில் தில்லைக்குச் சென்று கொடிக்கவியென்னும் அழ கிய சிறுநூலிலுள்ள முதற்பாட்டைப் பாடியவுடன் கொடி காணுக எறிற்று.

சுவாமிகள் சிவப்பிரகாசமென்னும் சிவஞானபோதச் சார்புநூலொன்றும், உண்மைநெறி விளக்கம், நெஞ்சுவிடு தூது, விண்ணப்பவெண்பா, திருவருட்பயன், சங்கற்ப நிராகரணம், போற்றிப்பஃறொடை என்னும் பிற ஏழு சித்தாந்தநூல்களும் இயற்றியருளினர்கள். கோயிற்புராணம், சேக்கிழார்புராணம், திருத்தொண்டர் புராணசாரம், திருப்பதிகக்கோவை முதலி யனவும் இவரால் இயற்றப்பட்டன என்ப. வடமொழியில் பௌட்கரம் என்னும் உபாகமத்திற்கு இவர் இயற்றிய விரி வுரை ஒன்றுண்டு. மாணவர்க்கு ஞானநூல் கற்பித்தலும்

பதிநூல் இயற்றுதலும் தக்கவருக்கு முத்திப்பேறு உதவுதலும் ஆகிய பேருபகாரங்களைச் செய்தலேயே தமது கடமையாகக் கொண்டிருந்து பின் சமாதி நிலையில் நின்று சித்திரையத்த நாளில் சிவபெருமானோடு இரண்டறக் கலந்தனர்.

"சத்திய ஞான னந்த தத்துவ வநுப வத்தாற்
பத்திசெய் யடியார் போற்றப் பரனடிக் கமல மெய்தி
நித்திய சுபாவ முத்த நிராகா ரபூர்த்தி யான
சுத்தவத் துவிதா னந்த சொரூபமே யாகி நின்றார்."

(உமாபதி சிவாசாரியர் புராணம்)

மெய்கண்ட சாத்திரம்

"உந்தி களிறு வுயர்போதந் தித்தியார்
பிந்திருபா வுண்மை பிரகாசம்—வந்தவருட்
பண்புவிளை போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
வுண்மைநெறி சங்கற்ப முற்று."

ஸ்ரீமெய்கண்ட தேவநாயனார் சிவஞான போதம் இயற்றுவதற்கு முன்னேயே திருவுந்தியார் திருக்களிற்றுப்படியார் என்கிற இரண்டு சைவசித்தாந்த நூல்கள் இயற்றப்பட்டன. திருவுந்தியாரென்பது திருவியலூர் - உய்யவந்த தேவநாயனாரால் அருளிச் செய்யப்பட்டது. இது வீடு அடைவதற்குரிய நெறியையும் அடைந்தோர் தன்மையையும் ஆசிரியரது சுவானுபவத்தையும் சுருக்கித்தாழிசையால் விளக்குகின்ற அருமையாகிய சிறப்பு நூல். திருக்களிற்றுப்படியாரென்பது திருவுந்தியாரியற்றிய ஆசிரியரது மாணாக்கரின் மாணாக்கராகிய திருக்கடலூர் - உய்யவந்த தேவநாயனாரால் அருளிச் செய்யப்பட்டது. இது திருவுந்தியாரின் கருத்தை

இனிது தெள்ளிதின் விளக்கும் சிறப்புநூல். இது நூறு வெண்பாக்களையுடையது. இது பொன்னம்பலத்திலுள்ள திருக்களிற்றுப்படியிலே வைக்கப்பட்டபொழுது அப்படியிலேயுள்ள களிற்றின் கையானது கிடிர்ந்து அதனை வாங்கி நடேசப்பெருமான் திருவடியில் கொடுத்தமையால் திருக்களிற்றுப்படியார் என்று அதற்குக் காரணப் பெயர் ஏற்பட்டது. இந்நூலின்கண்ணே அறுபத்துமூன்று நாயன்மார் அற்புத நிகழ்ச்சிக்குக் காரணமான வல்வினை, மெல்வினையைப்பற்றிய விவரமும் திருவள்ளுவ நாயனாரது குறள்கள் சிலவற்றை மேற்கோளாகக்கொண்டு அவற்றின் பொருளை விளக்கிய பகுதியும் பிற அரிய சித்தாந்த முடிபுகளும் சிறப்பாக உற்றுநோக்கத்தக்கன. அவையாவன:—

*சார்புணர்ந்து சார்பு கெடவொழுகி னென்றமையாற்
சார்புணர்க ஞான தியானமுமாஞ்—சார்பு
கெடவொழுகி னல்ல சமாதியுமாங் கேதப்
படவருவ தில்லையினைப் பற்று. (செ. ஈச)

†வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை யென்றமையால்
வேண்டினஃ தொன்றுமே வேண்டுவது—வேண்டினது
வேண்டாமை வேண்டவரு மென்றமையால் வேண்டிடுக
வேண்டாமை வேண்டுமவன் பால் (செ. சஅ)

அன்பின் சிறப்பைப்பற்றிக் கூறும் செய்யுள் வருமாறு:—

---

* குறள்-மெய்யுணர்தல். கூ.

† ,, அவாவறுத்தல். உ.

'அன்பேயென் னன்பேயென் றன்பா லழுதாற்றி
யன்பேயன் பாக வறிவழியு—மன்பன்றித்
தீர்த்தந் தியானஞ் சிவார்ச்சனைகள் செய்வதெல்லாஞ்
சாற்றும் பழமன்றே தான்.' (செ - ஙஙு)

இவ்விரு நூலும் வடநூன் முறையைப் பின்பற்றுது தமிழ் முறைக்கேற்ப எழுதப்பட்டுள்ளன. முப்பொருளின் உண்மையையும் இலக்கணத்தையும் கூறும் பொதுப்பகுதி இவைகளுள் குறிப்பாக அறியக் கிடப்பதேயன்றித் தெளிவாகக் கூறப்படவில்லை.

ஸ்ரீ மெய்கண்டாரது சிவஞான போதம் முப்பொருளின் உண்மையையும் இலக்கணத்தையுங் கூறும் பொதுப் பகுதியும், வீட்டிற்குரிய ஞான நெறியினையும் அந்நெறி நின்றார் பெறும் பயனையும் கூறுஞ் சிறப்புப் பகுதியையுமுடைய முழுமுதல் நூலாகும். தமிழ் மொழிக்குப் பன்னிரண்டு உயிரெழுத்துக்கள் போல இந்நூல் பன்னிரண்டு சூத்திரங்களையுடையது. ஒவ்வொரு சூத்திரத்திற்கும் கருத்துரை கூறப்பட்டிருப்பதுடன் அச்சூத்திரத்தின் பகுதிகளைக் காரண வுதாரணங்களோடு கூடிய அதிகரணங்களாக அமைத்து நூல் செய்யப்பட்டுளது. உதாரணங்களாகக்கூறப்பட்ட செய்யுட்கள் எண்பத்தொரு வெண்பாக்கள். அவையடக்கம் ஒரு வெண்பாவாலும் காப்பு ஒரு வஞ்சித்துறையாலும் கூறப்பட்டுள்ளன. முதன்மூன்று சூத்திரமும் பிரமாணவியல்; அடுத்த மூன்று சூத்திரமும் இலக்கண வியல்; அடுத்த மூன்று சூத்திரமும் சாதனவியல்; இறுதி மூன்றும் பயனியல் எனப்படும். முதற் சூத்திரத்துள் கடவுள் உண்

மையும் அவர் எல்லாவற்றையும் ஒடுக்கி மீளத் தோற்றுவிக் கும் முதற்பெருமானுகிய சிவபெருமானென்பதும், இரண் டாவது சூத்திரத்துள் கடவுள் உயிர்களுடன் அத்துவிதமாக நின்று அவைகட்கு விணப்பயனை ஊட்டுமுறைமையும் உயிர் கட்கு மலபந்தத்தால் பிறப்பிறப்பு நிகழு முறையும், மூன் ரும் சூத்திரத்தினுல் உயிர் உண்மைக்குக் காரணமும் விளக்கப்பட்டன. உலகந்தோன்றி ஒடுங்குவதற்குக் காரண மாகிய இருவகை மாயை உண்மையும் ஆணவமல உண் மையும் முதற் சூத்திரத்துள்ளும் இருவினையுண்மையை இரண்டாஞ் சூத்திரத்துள்ளும் கூறப்பட்டன.

இனி, நான்காஞ் சூத்திரத்தே உயிரினது இலக்கணம் இயம்பப் பெற்றது. அது மலமறைப்பால் அறிவு விளங்கப் பெறுதபொழுது கேவல அவத்தையில் நிற்பதாயும், தத்து வங்களோடு கூடியவழி சகலாவத்தையில் நிற்பதாயும், மல மற்றவிடத்து சுத்தாவத்தை யுடையதாயும் கூறப்பட்டுள் ளது. ஒவ்வொன்றும் கனவு,நனவு, துயில், துரியம், துரியா தீதம் என்று ஐந்து நிலைகளை யுடையது. ஐந்தாஞ் சூத் திரத்துள் தத்துவங்களெல்லாம் இவ்வைவந்தவத்தைக்குள் ளாகும் உயிர்க்குத் தொழில் செய்வதற்கண் கருவியாகி நிற் குந் தன்மை கூறுமுகத்தான் பாசவியல்பு கூறப்பட்டது. இச்சூத்திரத்தே உயிர்க்குயிராய் நிற்பவன் கடவுளென் பதை யுணர்த்தி அடுத்த சூத்திரத்தே அக்கடவுளின் இலக் கணம் கூறப்பட்டது. ஆருஞ்சூத்திரத்தே தோன்றினின் றழியு முலகம் சுட்டி யறியப்படுவதாகலின் அது அசத்து என்றும் அங்ஙனஞ் சுட்டி யறியப்படாது சுட்டிறந்து உணரப்படும் பரம்பொருள் சத்து என்றும் ஆசிரியர் பின

நயம்பெற விளக்கியுள்ளார். முதல் ஆறு சூத்திரமும் முப் பொருள்களது பொதுவியல்பு உணர்த்துதலால் பொது வெனப்படும். பின் ஆறு சூத்திரமும் அவற்றின் சிறப்புக் கூறுதலால் உண்மை யெனப்படும்.

ஏழாஞ்சூத்திரத்துள் அசத்தாகிய உலகத்தையும் சத் தாகிய பரம்பொருளையும் அறியவல்லதாய் அசத்தைவிட் டுச் சத்தைப் பற்றக்கூடியது உயிர் என்று உணர்த்து முகத் தான் சாதனத்திற்குரிய அதிகாரியின் தன்மையை ஆசிரியர் குறித்தனர்.

உயிர் ஐம்புலன் வழிச்செல்லுதலால் தன்னையும் தலை வனையும் அறியாது நிற்பதாகலின் அவ் வைம்பொறி வழி யிற் பற்றுவிட்டுத் தவநிலையில் நின்றால் பரம்பொருள் குரு வாய் வந்து நல்லறிவு அளிக்க அது அவன் கழல் எய்தும் என்று விளக்குமுகத்தான் இருவகைப் பற்றும் அறுதற் கேதுவாகிய தவம் ஞானத்திற்குச் சாதனமாமென்பதும் அதனால் பெறுஞ் சிவஞானம் வீட்டிற்குச் சிறந்த சாதனமா மென்பதும் அத்தகைய ஞானம் சிவபெருமானே ஆசிரிய னாய் வந்து அருளற் பாலதென்பதும் எட்டாஞ் சூத்திரத் தால் வலியுறுத்தப்பட்டது.

சிவவடிவத்தைக்கண்ட மாத்திரையே தன்னைக் காண் கின்ற ஆன்மா அம்முதல்வனை அவனளித்த ஞானக்கண் கொண்டு காணுமிடத்து ஆன்மசுத்தி எய்தும். அவ்வான்ம சுத்தி நிலைபெறுதற்பொருட்டு விதிப்படி திருவைந் தெழுத் தைக் கணித்தல் வேண்டுமென்பது ஒன்பதாஞ் சூத்திரத் தால் கூறப்பட்டது. இனி பத்தாவது சூத்திரத்தே மல நீக்கமும், பதினொன்றுவதில் சிவப்பேறும் கூறப்பட்டன.

மலநீக்கத்திற்கு முற்படுவது 'ஏகனுகி இறைபணி நிற்றல்' ஆகலின் அது பத்தாஞ் சூத்திரத்துள் விதந்தோதப்பட்டது. அயரா அன்பினை யுடையோர்க்கு உணர்வில் நேர் வருஞ் சிவபோகமானது ஐம்பொறி யளவினும் வருதலால் ஐம்பொறிக்கு அது புலனுகப்பெறும். அன்பர் கூட்டுறவும் அவரது திருவேடத்தையும் திருக்கோயிலையும் முதல்வன் எனக்காணும் வழிபாடும் சிவப்பேற்றினை நிலை நிறுத்துவான் நிகழுமென்பது பன்னிரண்டாஞ் சூத்திரத்திற் கூறப்பட்டது. எட்டாஞ் சூத்திரத்திலே கேட்டலும், ஒன்பதாஞ் சூத்திரத்திலே சிந்தித்தலும், பத்தாஞ் சூத்திரத்திலே தெளிதலும், பதினென்றாஞ் சூத்திரத்திலே நிட்டை கூடுதலுந் தெரிக்கப்பட்டன.

இனி, சிவஞான சித்தியார் என்னும் நூலானது சிவஞான போதத்தின் வழி நூலாய் புறச்சமயங்களின் நிலை இனைத்தென அளவிடும் பரபக்கமும் சித்தாந்த சமயத்தின் மெய்ப்பொருள் தெரிக்கும் சுபக்கமும் ஆகிய இரண்டு பெரும்பகுதியை யுடையது. சிவஞான போதத்துள் அவை யடக்கங்கூறிய ஒரு திருப்பாட்டினையே பரபக்கம் அடிப்படையாகக் கொண்டுள்ளது. சுபக்கம், சிவஞானபோதப் பன்னிரண்டு சூத்திரங்களின் பொருளைப் பன்னிரண்டு அதிகாரங்களில் விரித்துவிளக்கும் நூலாகும். பரபக்கத்துள் புறப்புறச் சமயங்களையும் புறச்சமயங்களையுமே ஆசிரியர் ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்டார். அவைகள் யாவும் சிவாகமப் பிரமாணத்தை ஒப்புக்கொள்ளாமையால் புறச்சமயங்களெனப்பட்டன. வைதிகச்சார்பில்லாத சமயங்களை புறப்புறமெனவும் வைதிகச்சார்புடைய சமயங்களைப் புறமெனவும்

வகுத்துக்கூறினர். புறப்புறச் சமயிகளுள் நாற்பூதங்களை மாத்திரம் உள்பொருளெனக் கொள்ளும் உலோகாயதரும்; சௌத்திராந்திகர், யோகாசாரர், மாத்தியமிகர், வைபாடிகர் ஆகிய நால்வகைப் பௌத்தரும்; நிகண்டவாதி, ஆசீவகன் என்ற இருவகைச் சமணரும் அடங்குவர். புறச்சமயத்துள் பாட்டாசாரியன் மதம், பிரபாகரன் மதம் என்ற இரு வகை மீமாஞ்சக மதமும்; சத்தப் பிரமவாதம், கிரீடப் பிரமவாதம், பாற்கரியவாதம், மாயாவாதம் ஆகிய நால்வகை வேதான்மவாதமும்; சாங்கிய மதமும், பாஞ்சராத்திர மதமும் அடங்கும். தருக்க மதம், நியாயமதம், யோகமதம் என்றமூன்றும் புறச்சமயத்துள் ஆசிரியர் சிவஞான சுவாமிகளாலே வைத்து ஓதப்படினும் அவை ஒரு முதல்வனை யுடைமையால் சிறப்பாக எடுத்துக் கண்டிக்கப்படவில்லை. சிவஞான போதப்பொருளை சுபக்கத்தில் விரித்தோதப் படுதலின் அதுபற்றிய விபாம் இவண்கூறாது விடுக்கின் றும். ஸ்ரீதாயுமான சுவாமிகள் "பாதி விருத்தக்காள் இப் பார்விருத்த மாகஉண்மை, சாதித்தார் பொன்னடியைச் சா ரும்நாள் எந்நாளோ?" என்று இந்நூலாசிரியரை வணங் கினமையால் இந்நூற் பெருமை அளவிடப்படாதது.

'பாரிலுள்ள நூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே
ஓர்விருத்தப் பாதி போதும்'

என்றதுங் காண்க.

சிவஞானசித்தியார் எட்டாஞ் சூத்திரத்தில் முப்பதா வது பாட்டில் முதலிரண்டடிகளிற் கூறிய வுண்மையே இங்கு சுட்டப்பட்டது.

“ அறியாமை யறிவகற்றி யறிவி னுள்ளே
யறிவுதனை யருளினு னறியாதே யறிந்து
குறியாதே குறித்தங்கக் காணங்க ளோடுங்
கூடாதே வாடாதே குழைந்திருப்பை யாயிற்.....’”

இப்பகுதியுள் உலகச்சார்பு தொலைதற் கேதுவாகிய பாச நீக்கமும் திருவருளினுலே மெய்ப்பொருளைக் கூட்டுச் சிந்தித்துத் தெளியு நிலையும் விளக்கப்பட்டன. சுபக்கத்துள்ளடங்கிய திருவிருத்தங்கள் நஉஅ, பரபக்கத் துள்ளவை நஆக.

இருபா விருபஃது என்னும் நூல் வெண்பா, ஆசிரியப்பா என்னு மிருவகைப் பாக்களால் யாக்கப்பட்டு ஓவ்வொன்றிலும் பத்துப் பாக்கள் கொண்ட ஓர் அழகிய நூல். இது மெய்கண்ட தேவரைத் துதிக்கு முகத்தால் சித்தாந்த வுண்மைகளையும் அருணந்தி சிவாசாரியாரது சிவாநுபவத்தை யும் தெளிவு படுத்துவதாகும்.

உண்மை விளக்கமென்பது மெய்கண்ட தேவரது மற் றொரு மாணவராகிய மனவாசகங் கடந்தார் என்பவராலியற் றப்பெற்றது. அது ஐம்பத்துமூன்று வெண்பாக்களை யுடை யது. அது முப்பத்தாறு தத்துவங்களையும் ஆணவம், இரு விணை என்பவற்றினியல்பையும் ஆன்மாவி னியல்பையும், கடவுளி னியல்பையும், ஐந்தெழுத்தின் உண்மையையும் தமது ஆசிரியரிடத்துத் தமக்கு விளக்கும்படி வினவ ஆசிரி யர் விடையளித்ததுபோ லியற்றப்பெற்ற நூலாகும்.

சைவசித்தாந்த நூல் பதினான்கனுள், எட்டு உமாபதி சிவாசாரிய சுவாமிகளால் இயற்றப்பெற்றன. அவ்வெட்டி

னுள்ளடங்கும் சிவப்பிரகாசமானது சிவஞான போதத்திற் குச்சார்பு நூலாகவுள்ளது. அதன் பாயிரத்துள் தனக்கு முன்னுள்ள திருக்கைலாய பரம்பரை ஆசிரியர்கள் இன்ன ரென்பதும், சைவநூல்களி னியல்பும், தீக்கைவகைகளுங் சுருக்கமாகவும் விளக்கமாகவும் ஓதப்பெற்றுள்ளன. அதன் அவையடக்கத்தே நூல்களை ஆராய்ந்து உண்மை தெரியு முறையை ஆசிரியர் நன்கு விளக்கியுள்ளார். பழமைபற்றி யொன்றை நன்றென்றும் அஃதின்மைபற்றியே மற்றொன் றைத் தீதென்றும் கொள்ளுதல் கவறென்று குறிக்கமை உற்று நோக்கத்தக்கது.

> “ தொன்மைய வாமெனும் எவையும் நன்றுகா
> இன்றுதோன்றிய நூலெனு மெவையும் தீதாகா.”

இந்நூலானது பொதுவென்றுஞ் சிறப்பென்றுட் இரு பகுதியுடையதாய் நூறு விருத்தங்களாலாயது. சிவஞான போதத்திற்குச் சார்பு நூலாதலின் இந்நூலினைப் பன்னி ரண்டு சூத்திரப் பகுதிகளாகவும் பிரித்துக் கூறுவது மரபு. பாயிரம் பன்னிரண்டு பாக்களாலாயது. பாயிரத்திற்குப்பின் வந்த முதற் சூத்திரமாகிய ஆறு பாட்டினுள் பதிலக்கணங் கூறப்பட்டது. அதற்கடுத்த மூன்றுசூத்திரண்டு பாக்கள் இரண் டாஞ் சூத்திரமாக அமைகின்றன. அதனுள் பாச லிலக்கண மும், பாச லிலக்கணமும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. பசு வின் பொது லிலக்கணம் ஒருபாட்டாலும், எஞ்சிய பாட்டுக் களிலுலே பாச லிலக்கணமும் கூறப்பட்டது. ஆக முதல் ஐம்பது பாட்டும் பொது வியலாகும். பின் ஒரு பாட்டால் உண்மை அதிகாரத்திற் கூறப்படுவனவற்றைத் தொகுத்துச் சுட்டியுள்ளார். பின் எட்டுப்பாட்டுக்களும் மூன்றாஞ் சூத்

திரமெனப்படும். அதனுள் உயிரின் ஐந்தவத்தை இலக்கணம் தெளிவாக நாட்டப்பட்டுள்ளன. அடுத்த மூன்று பாட்டுக்களும் நான்காஞ் சூத்திரமாகும். அதனுள் கேவல, சகல, சுத்தமென்னு மூன்று அவத்தைகளின்றன்மை நன்கு விளக்கப்பட்டது. அடுத்த ஐந்து பாட்டுக்களும் ஐந்தாஞ் சூத்திரமாகும். அதில் இறைவன் உயிர்களை அறிவிக்குமாறும் உயிர் விணைப்பயனை நுகருமுறையுங் காட்டப்பட்டன. பின்னுள்ள ஆறுஞ்சூத்திரமாகிய ஒருபாட்டு ஒரு சூத்திரமாகும். அதன் கண் பரமசிவன் குருவாய் வந்து ஞானம் நல்கு முறை கூறப் பட்டது. ஏழாஞ்சூத்திரமாகிய அடுத்த இரண்டுபாட்டினுள் ஞானம் பெறுவதற்குரிய ஆன்ம நிலை கூறப்பட்டுள்ளது. பின் ஐந்து பாட்டுக்களுள் ஞானத்தின் பயனை ஆன்ம தரி சனம் கூறப்பட்டுள்ளது. இப்பகுதி எட்டாஞ் சூத்திர மெனப்படும். ஒன்பதாஞ் சூத்திரமாகிய அடுத்த நான்கு பாட்டினுள் ஆன்மசுத்தி கூறப்பட்டது. பத்தாம் சூத்திர மென்னும் பகுதியுள் ஆன்ம லாபமாகிய பாசநீக்கமும் வாச னாமலம் நீங்குதற்குரிய ஐந்தெழுத்து அருள் நிலையுங் கூறப் பட்டன. பதினொன்றாம் சூத்திரமாகிய அடுத்த ஐந்து பாட் டினுள்ளும், பன்னிரண்டாம் சூத்திரமாகிய அடுத்த ஒரு பாட்டினுள்ளும் அணைந்தோர் தன்மை கூறப்பட்டது. நூலின் இறுதிச்செய்யுளிரண்டினும் நூற்கருத்தும் அதனை அறிவுறுத்து முறைமையுங் கூறப்பட்டன. நூலின் மங்கல வாழ்த்து உட்பட பாட்டின் தொகை நூற்றொன்று.

திருவருட் பயனென்னும் அழகிய சிறு நூலானது திருவள்ளுவர் நூல்போலக் குறள் வெண்பாக்களாலாகியது. இது பத்து அதிகாரங்களுடையது. ஒவ்வொரு அதிகாரத்

திற்கும் பப்பத்துக் குறள்களுள்ளன. இறைவனது இயல்பு கூறும் முதலதிகாரம் பதிமுதுநிலை யென்னும் பெயருடைத்து. ஏனை அதிகாரங்களின் பெயர்களும் இவ்வாறே அவை கூறும் பொருளினியல்பை விளக்குந் தன்மையன. அவை உயிரவை நிலை, இருண்மல நிலை, அருளுருவு நிலை, அறியுநெறி, உயிர் விளக்கம், இன்புறுநிலை, ஐந்தெழுத்தருணிலை, அணைந்தோர் தன்மை என்பன.

விரு வெண்பாவென்பது பதின்மூன்று பாக்களினாலாயது. அது ஆசிரியர் தமது குருவாகிய மறைஞான சம்பந்தரிடம் சாத்திர வுண்மைகளை வினவுமுறையால் கூறப்பட்டுள்ளது.

போற்றிப் பஃறொடை யென்பது உயிர் தொழிற்படு முறைமை யுணர்த்தும் வாயிலாகத்தமக்குச் சிவஞானம் நல்கிச் சிவாநுபவ மீந்த குருமூர்த்தியைப் பஃறொடை வெண்பாவினால் வாழ்த்திய நூலாகும்.

கொடிக்கவி சிவமந்திரங்களி னியல்பு உணர்த்துவ தாய்த் திலையிலே கொடியேறும் பொருட்டுப் பாடிய சிறு நூலாகும்.

நெஞ்சு விடுதூது என்பது ஆசிரியர் தமது திருவுள்ளத்தை மறைஞான சம்பந்தர் பால் மாலைவாங்கும்படித் தூது விடுமுகத்தான் பன்னூற்பொருள் முடிபையும் இனிது விளக்கும் கலிவெண்பாவினால் இயற்றப்பெற்றுளது.

உண்மைநெறி விளக்கமென்பது தத்துவரூபம், தத்துவக் காட்சி, தத்துவ சுத்தி, ஆன்ம வடிவம், ஆன்ம தரிச

னம், ஆன்ம சுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் என்னும் பத்துக் காரியங்களை இனிது விளக்கு நூலாகும்.

சங்கற்ப நிராகரணம் என்பது அகச்சமயங்கள் பலவற் றினது கொள்கைகளைக் கூறி அவற்றைச் சித்தாந்தப்பார்வை யால் மறுக்கும் நூலாகும். சிவஞானசித்தியார் பரபக்கமும் இந்நூலும் சித்தாந்த சைவத்தின் வேறுப சமயக்கொள்கை வேறு பாடுகளைத் தெரிதற்கு மிகவும் பயன்படுகின்ற நூல்க ளாகும். இந்நூற்குக் காரணம்:—

சாலிவாகன ஆண்டு கஉஙரு-ல் சிதம்பரத்தில் நடந்த ஆனித்திங்கள் ஆறுவது திருவிழாவில் வெவ்வேறு அகச்சம யங்களின் [illegible] ஆசிரியர்கள் எட்டுப்பேர் தேர் மண்டபத்திலொரு புறமிருப்பவும், மாயாவாதி யொருவன் ஒருபுறமிருப்பவும், ஸ்ரீ மெய்கண்ட தேவர் அடியாரொருவர் மற்றொரு பக்கமிருப்பவும், உண்மை உசாவுவான் ஒருவன் தம்பிரானர் திருவருள் எத்தன் மைத் தென்று மாயாவாதியைக் கேட்க அவன் சொன் னதை எட்டு ஆசிரியருள் ஒருவர் மறுக்கப் பின் அவருள் ளேயே ஒருவரை யொருவர் மறுத்துப் பேசித் தத்தங் கொள்கையை உசாவியோனுக்கு உரைத்தனர். அன்னோர் கூறிய கொள்கைகளை அவரவர் சங்கற்பங்களாக வைத்து அவற்றை உசாவியோனைத் தமது சிவப்பிரகாசங் கற்று உண்மை யுணரலாமென்று உமாபதி சிவம் அவனுக்கு அறிவுறுத்தியதே இந்நூலில் அடங்கிய பொருளாகும். இந்நூலில் மறுக்கப்பட்ட சமயங்கள் மாயா வாதம், ஐக்கிய வாதம், பாடாண வாதம், பேதவாதம், சிவசம

வாதம், சங்கிராந்த வாதம், ஈசுர அவிகார வாதம், நிமித்த காரண பரிணாம வாதம், சைவ வாதம் என்பன. சைவ வாதமென்பது சுத்தசைவம் என்னும் ஓர் அகச்சமய மாகும், சைவசித்தாந்த சமயமல்ல. அது ஆன்மா சகலா வத்தையிலே அறிவா யறியுமென்றும் அந்த அறிவையே சரியை கிரியை யோக மூற்றியவிடத்துக்கடவுள் உதவுகிறா ரென்றும் கூறுவது. கேவலத்தில் ஆன்மா அறிவில்லாம லிருக்குமென்ற கொள்கை யுடையது. இச்சங்கற்ப நிரா கரணம் செந்தமிழ் நயமிக்க இருபது அகவற் பாக்களால் அமைந்துள்ளது.

சிவஞானபோதம் முதனூலுடையதா ?

மெய்கண்ட சாத்திரமெனப்படும் சைவசித்தாந்த நூல்கள் பதினென்கும் மொழிபெயர்ப்பு நூல்களல்லவென்பதும் அவைகளை இயற்றிய ஆசிரியன்மாரின் அனுபூதி ஞானத்தின் பயனுக அமைந்துள்ளன வென்பதும் அவைகளைக் கற்பார் யாவர்க்கும் தெள்ளிதிற் புலனும். அவற்றுள் ஸ்ரீ மெய்கண்ட தேவநாயனர் அருளிச்செய்த சிவஞான போதத்தைவடமொழியிலுள்ள இரௌரவாகமத்திலே பாவ விமோசனப் படலத்திலுள்ள பன்னிரண்டு சூத்திரங்களின் மொழிபெயர்ப்பு என்று இக்காலத்திலே பலர் கருதுகின்றூர் கள். அது உண்மைதானு வென்ற ஆராய்ச்சி சைவநூல் களின் வரலாற்றினை அறியவிரும்பும் மாணவர்களது ஒரு தலையாய கடமையாகும். இவ்வாராய்ச்சி ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்கள், திருவாளர் பொன்னம்பலம் பிள்ளை முதலிய பெரியோர்களால் முன்னே செய்யப்பட்டுளது. இயைபுபற்றி ஈண்டும் அதுபற்றிய ஆராய்ச்சி நிகழற் பாலது.

ஒரு நூலின் பொருளை ஆராய்வது வேறு; அது வந்த வரலாற்றினை ஆராய்வது வேறு. வரலாற்றினை ஆராயு முயற்சியானது இக்காலத்திலே சிறப்பாக நிகழ்வதுபோல முற்காலத்திலே நிகழ்ந்ததில்லை. முற்காலத்திலே பொரு ளாராய்ச்சியைச் சிறப்பாகவும் ஏனையவற்றை அத்துணை அவசியமிலவாகவும் கருதப்பட்டதென்பது நமது நாட்டிற் கும் இலக்கியத்திற்கும் சரித்திரநூல் முன்னில்லாமைபற்றி

நன்கு ஊகிக்கப்படும். இதனைச் சிவஞானபோத நூலா ராய்ச்சி செய்வார் மனதில் நன்கு பதித்துக் கொள்ளவேண் டும். நூலின் பொருளினை ஆழமாக ஆராயும் வழக்கம் இற் றைக் காலத்தில் அவ்வளவு செம்மையாக நிலவாவிடினும் சரித்திரவாராய்ச்சி இற்றைக்காலத்திற்றான் சிறந்து விளங்கு கின்றதென்பது திண்ணம். அதற்குக் காரணம் சரித்திர வாராய்ச்சியில் வல்ல மேலைநாட்டுக் கலைஞர் தொடர்பு இப் போது அமைந்திருப்பதுபோல முன்னளில் அமையபா மையே. சரித்திர வாராய்ச்சியினும் நூற்பொரு ளாராய்ச் சியே சிறப்புடையது என்பார் பின்னையதில் வல்லமை யுடை யவர் முன்னையதினும் வன்மை யுடையரோ என்று ஆராய் யிட்டுக் கூறுதல் தக்க வழக்கன்று. ஒன்றில் வல்லார் மற் றொன்றிலும் வல்லார் என்று கோடற்குத்தக்க காரணங்கள் வேண்டும். சித்திரமெழுத வல்லவன் அவ்வன்மை காரண மாக இசையிலும் வல்லவனா யிருத்தல் வேண்டுமென்று கூறமுடியாது. அதுபோலப் பொருளாராய்ச்சியில் வல்லவன் சரித்திர வாராய்ச்சியிலும் வல்லவனாயிருத்தல் முடியாது. சித்திர வேலைக்காரன் இசைகற்றுத் தேறின் இசையிலும் ஓவியத்திற்போல வல்லவனாதல் கூடும். இசைகல்லாத காலத் தும் சித்திரம் எழுதத் தெரிந்த காரணமொன்று பற்றியே அவனை இசையிலும் வல்லனென்று கோடல் சிறிதும் பொருந்துவதன்றும். அவ்வாறே முற்காலத்தில் பொரு ளாராய்ச்சியில் மிக்க வன்மை யுடையவர்கள் சரித்திர வாராய்ச்சியில் பழகியிருந்தால் அதிலும் இக்காலத்தவர் களைப் பார்க்கிலும் மிக்க திறமை காட்டியிருத்தல் கூடுமென் பது கூறலாமே யொழிய சரித்திர வாராய்ச்சி செய்யாத

காலத்திலும் அவர்கள் அதில் வல்லவர் என்று கூறுவது அறிவிற்குப் பொருந்துவதன்றும். சரித்திர வாராய்ச்சியி னுலே பயனில்லையென்று கொள்ளினுங் கொள்ளுக. அவ் வாராய்ச்சி செய்யப் புகுந்த விடத்து அதனேடு பொருத்த மில்லாதவற்றை எடுத்து இயம்பி அதனை ஒதுக்குதல் ஆராய்ச்சி முறையன்றும்.

சரித்திர வாராய்ச்சி முறைக்கேற்பச் சிவஞானபோத வரலாற்றினை முற்காலத்திலே ஒருவரும் ஆராய்ச்சி செய்த தாகத் தெரியவில்லை. அங்ஙனஞ் செய்யாமையால் முன் னிருந்தோர்களுக்கு இழுக்கு ஒன்றுமில்லை. இப்போது அதனைச் செய்யுங்கால் அதற்குப் பொருத்த மில்லாதபடி முன்னோர் கூறியதை நாம் கண்ணை மூடிக்கொண்டு ஒப்புக் கொள்ள வேண்டியதில்லை.

"தொன்மைய வாமெனு மெவையும் நன்றுகா
இன்றுதோன்றிய நூலெனு மெவையுந் தீதாகா."

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்ற திருவாக்குக்களை யுற்று நோக்குக. பெரு முனிவர் களுங்கூட ஆராயாதபோது தவறுதலியல்பே. அவர்களும் ஆராய்ச்சிக்கு ஏது அமைந்த விடத்தேதான் அதனைச் செய் வார்கள். ஐயம் நிகழ்ந்த இடத்தேதான் முனிவரும் யோ கக் காட்சியால் உண்மை யுணரத் தொடங்குவதாகப் புரா ணங்களிற் கேட்கப்படுகின்றது. ஐயம் நிகழாதவரை அவர் கள் பார்வையும் ஏனையோரது போலவே யிருந்ததென்ப

கருதுதற் கிடமுண்டு. இதுகாறுங் கூறியவை இந்நூலின் சரித்திர வாராய்ச்சிக்குத் தோற்றுவாயாகும்.

தமிழிலே மொழி பெயர்ப்பு நூல் செய்யப் புகுந்தார் யாவருந் தமது மேற்கோளை விளக்குவது மரபு. அது திருவிளையாடற் புராண முதலிய பல நூல்களிலுங் காணப்படும். ஒரு நூலின் ஆசிரியராதல், பாயிர முரைத்தோராதல், நூலாசிரியர் காலத்தே நூலினைப் பற்றி யெழுதினோராதல் அது மொழிபெயர்ப்பென்று கூறுதலிடத்து அந்நூல் மொழி பெயர்ப்பல்ல வென்பது நன்கு ஊகிக்கப்படும். பிற மொழி நின்று தமது மொழியிற் பெயர்த்தலை மறைத்துக் கூறும் வழக்கம் தமிழ்ப் பேராசிரியர்களிடம் பாண்டிங் காணப்படுவதில்லை. வடமொழி நூலோர்க்கு அங்ஙனஞ் செய்தல் இயல்பென்பது பெரிய புராணச் சரித்திரத்தால் இனிது விளங்கும். ஆசிரியர் சேக்கிழார் தமது நூலிற்கு முதனூல் திருத்தொண்டத்தொகையும் நம்பியாண்டார் நம்பி திருவந்தாதியுமென்று கூறியிருப்பவும் அதனை வட மொழியில் மொழிபெயர்த்தோர் தமது மூலத்தைக் கூறுமை யாலும் தங்களுடைய மொழி பெயர்ப்பு நூலை தமிழ்நூற்கு மூல மென்று அபிமானம் பற்றி வாய்ப்பறை யறைந்தமை யாலும் அதனைக் கேட்டு மயங்கிய தமிழர் சிலர் பெரிய புரா ணத்தையே மொழிபெயர்ப்பு நூலென்று கூசாது சொல்லத் தொடங்குகிறார்கள். இது நிற்க.

சிவஞான போதம் இயற்றிய ஆசிரியர் மெய்கண்டார் தமது நூலிற்கு மூலம் இரௌரவ வாகமம் பாவ விமோசனப் படலமென்று கூறவில்லை. முதற் சூத்திரத்தே "என்மனார் புலவர்" என்று கூறினரே யன்றி, "என்றார் சிவபெரு

மான், "என்றூர் இரௌரவம்" என்று விதந்தோதிஞ நில்லை. மங்கல வாழ்த்தும் அவையடக்கமுங் கூறிய ஆசிரி யர் தமது நூற்கு மூலமிருந்திருப்பின் அதனைக் கூறுது விடக் காரணமில்லை. கூறவேண்டியது அவசியமில்லை யென்று சொல்லுவதும் பொருத்தமாகாது. என்னை? சிவ பெருமானது திருவாக்கின் மொழிபெயர்ப் பென்றுதல் இரௌரவ சிவாகமத்தின் ஒரு பகுதியின் மொழிபெயர்ப் பென்றுதல் ஆசிரியர் காட்டியிருந்தால் அது கற்போருக்கு மிக்க ஊக்கத்தைக் கொடுக்க வல்லதாகும். ஆன்றோர் வழக்கின்படி நூன் மரபும் உரைத்தவா றுகும். ஆசிரியர் நூற்கு மூலம் கூறுமையாலே மூலமில்லை யென்றலே பொருத்த முடைத்து.

இன்னும் தமிழ்ச் சிவஞான போத மூதற் சூத்திரத் தையும் வடமொழிச் சிவஞான போத முதற் சூத்திரத்தை யும் ஒத்துப் பார்ப்பின் தமிழ்ச் சூத்திரத்தின் பொருளைச் செவ்விதிற் றெரிக்கும் ஆற்றல் வட மொழிச் சூத்திரத்திற் கில்லை யென்பது புலனுகும். தமிழ்ச் சூத்திரத்தில் 'அவனவ ளது' என்று கூறியிருப்ப வடமொழிச் சூத்திரம் "பெண்ணு ணலியின் ஆதித் தன்மையால்" என்று தொடங்குகின் றது. 'அவனவளது வெணும் அவை' யென்று பிரபஞ்சத்தை முக் கூற்றினுளடக்கிக் கூறியிருக்குஞ் சிறப்பு வடமொழிச் சூத்திரப் பகுதிக்கில்லை. பின்னையது முன்னையதற்கு மூலமா மெனின் ஆசிரியர் மெய்கண்டார் சிவபெருமானது வாக் கென்று சொல்லப்படும் வடநூற் சூத்திரத்திற் கிணையத் தமி ழ்ச் சூத்திரஞ் செய்திருப்பார். அவ்வாறு செய்யாணமையால் வடமொழிச் சூத்திரத்தின் வழிவந்தது தமிழ்ச் சூத்திர

மல்லவென்று ஊகிக்கப்படும். தமிழ்ச் சூத்திரத்திலுள்ள 'மலத்துளதாம்' என்கின்ற சொற்றொடருக்கு நேரான சொற்றொடர் வடநூற் சூத்திரத்தில் காணப்படவில்லை. உலகம் ஒடுங்குமென்பதற்கும் உயிர்களுக்கு ஆணவ மலபரிபாகத்தின்பொருட்டு மீளவும் அது தோன்றுமென்பதற்கும்'மலத்துளதாம்' என்ற ஒரு சொற்றொடர் அமைத்த திறமை ஆசிரியர் மெய்கண்டார்க்கே யுரியது. இவ்வகையான நயம் அமையாத வடமொழிச் சூத்திரத்தை மூலமென்றும் சிவவாக்கென்றுங் கூறுதலும் தமிழ்ச் சூத்திரத்திற்கேற்ப வடமொழிச் சூத்திரத்தை வலிந்து பொருள் கோடலும் சரித்திர வாராய்ச்சியின்மையான் வந்த அபிமானத்தின் பயனேயன்றி வேறில்லை. இவ்வாறே ஏனைத் தமிழ்ச் சூத்திரங்களையும் வடமொழிச் சூத்திரங்களோடு ஒப்பிட்டு நடுவு நிலைமையோடு ஆயுமிடத்துத் தமிழ்ச் சூத்திரமே வடமொழிச் சூத்திரத்திற்கு மூலமென்பது தெளிவாகும். சுருக்கமாக அதனை எண்டுக் காட்டுதும்:—

வடமொழிச் சிவஞான போத முதற் சுலோகத்தே 'மூவினைமையின்' என்ற பொருளுள்ள சொற்றொடரில்லை. அதற்குப் பதிலாகக்'காரியம்' என்னும் சொல்லே அமைந்து கிடக்கின்றது. அது அத்துணைச் சிறப்புடையதல்ல வென்பது நன்கு விளங்கும். இனி 'அந்தம் ஆதி' என்ற சொற்றொடர்போல நயமான வாக்கியம் வடமொழிச் சுலோகத்திலில்லை. 'கர்த்தா ஒருவன் உளன். அவன் பிரபஞ்சத்தை ஒடுக்கி உளதாக்குவன்' என்பது மாத்திரமே கூறப்பட்டது. 'என்மனார் புலவர்' என்பதற்கும் கோனை பதமில்லை.

இரண்டாஞ் சுலோகமானது ஆசிரியர் ஸ்ரீ மெய்கண்டாரது சூத்திரத்திற்கு வியாக்கியானம் போலத் தோன்றுகிறது. 'அவையே தானே' என்பதற்குக் 'கர்த்தாவேறுயினும் வியாபகத்திணல் வேற்றுமையின்றி' என்னும் பொருளுள்ள சொற்றொடர் காணப்படுகின்றது. அது 'அவையே தானேயாய்' என்பது போல் அழகாக வமைந்த தல்ல. 'நீக்கமன்றி நிற்கு மன்றே' என்பதற்கு நேரான சொற்றொடர், 'அமைந்த வளவில் நில்லாது கிருத்தியங்களைச் செய்கின்றுன்' என்று பொருளுள்ள வாக்கியஞ் சேர்க்கப்பட்டுள்ளது. 'போக்கு வரவுபுரிய' என்பதற்கு வடமொழிச் சுலோகத்தில் நேரான சொற்றொடரில்லை.

மூன்றுஞ் சூத்திரத்திலே 'உண்டி வினையின்மை' என்ற சொற்றொடரின் பொருளை நன்கு விளக்கா, ஒரு சொல்லே வடமொழிச் சுலோகத்திலமைந் துள்ளது. 'உணர்த்த' என்ற முக்கியமான சொல்லின் பொ[illegible] விளக்குமொழி சுலோகத்திலில்லாமை அதற்கு ஓ[illegible]குமும். 'மாயாவியந்திர' என்னும் வாக்கியமும் அதனுளில்லை.

நான்காஞ் சூத்திரத்திலே 'சகசமலத்துணராது' என்பதன் சொல்லாற்றலை இனிது விளக்காது மலத்திணல் மறைக்கப்பட்ட ஞானங் கிரியையையுடைய ஆன்மா என்று பொருள்படும் வாக்கியமே வடமொழிச் சுலோகத்து ளமைந்து கிடக்கின்றது. ஞானம் கிரியை என்பதற்கு ஸ்ரீ மெய்கண்ட தேவர் சூத்திரத்தில் சொல்லில்லை. ஞான மறைப்பே சிறப்பாகக் கூறப்பட்டது.

இனி, ஐந்தாஞ் சூத்திரத்தில் 'அளந்தறிந் தறியா' என்பதற்கு நேராகிய பகுதி வடமொழிச் சுலோகத்தி

லில்லை. உயிர் அறிவிக்க இந்திரியங்கள் அறிவதுபோல சம்பு அறிவிக்க உயிர் அறியும் என்று அது கூறியதே யொழிய இந்திரியங்கள் எப்படி உயிரை அறியமாட்டாவோ அவ் வாறே உயிர்கள் தம்மையுந் தம்மைச் செலுத்துந் திருவருளை யும் அறியமாட்டா என்னுங் கருத்தை விளக்கும் வாக்கி யங்கள் வடமொழிச் சுலோகத்திலில்லை. முதல்வனது சிற் சத்தியால் என்னும் பொருள்படத் 'தமியருள்' என்று தமிழ்ச் சூத்திரத்திலிருப்ப, வடமொழிச் சுலோகத்துள் 'சம்புவினுல் அறிகின்றன' என்று கூறப்பட்டது. 'காந்தங் கண்ட பசாசத்தனவே' என்பதில் 'அனவே' என்ற சொல்லாற்றலால் முதல்வன் விகாரியில்லை என்று ஆசிரியர் மெய்கண்டார் பெறவைத்திருப்ப அதனை விரித்து அவன் விகாரியல்லன் என்று சுலோகத்தில் கூறப்பட்டது.

ஆறாஞ் சூத்திரத்துள் சுருக்கமாகவும் நயமாகவும் சத்தும் அசத்தும் வரைசெய்து உணர்த்தியதின் நயம் வட மொழிச் சுலோகத்தி லமையவில்லை. ஆசிரியர் அசத்து என்றதை வடமொழிச் சுலோகத்தில் சடமென்ற வார்த் தையால் தெரிவிக்கின்றார். 'சிவசத்து' என்ற சொற்றொட ரின் பொருள்வளத்தைச் சம்புவின் ரூபமென்ற சுலோகப் பகுதி பெற்றிலது. 'இன்மைமாயின்' என்பதன் பொருளை 'அசத்பாவக' என்ற சொல்லினுல் சுலோகஞ் செய்தார் விளக்கினரே யொழிய, சத்தும் அசத்தும் என்ற சொற்களை இனிதமைத்துச் சுலோகத்தை யாக்க அறிந்திலர். சூத்தி ரத்தில் 'இசைக்கு மன்னுலகே' என்பதற்கு சுலோக 'ஞானி கள் கூறுவார்கள்' என்ற சொற்றொடரமைக்காது 'ஞானி கள் அறிவார்கள்' என்று பொருள்படும் வாக்கியமே சுலோ கத்திற் காணப்படுகின்றது.

அடுத்த எழாஞ் சூத்திரத்தே சத்து, அசத்து என்ற சொற்களின் பொருள்நய முணரப் பெறுது சித்து, அசித்து என்ற சொற்களை அமைத்தே வடமொழிச் சுலோகம் செய்யப்பட்டுளது. 'இருதிற னறிவுள' என்று சூத்திரம் சுருக்கிக் கூறியிருப்பதை, 'எவன் பிரபஞ்சத்தையுஞ் சிவனையுமறிகின்றானே' வென்று விரித்துக் கூறுகின்றது சுலோகம்.

எட்டாஞ் சூத்திரத்தில் 'தம்முதல்' என்பதன் பொருளை இனிதுணர்த்துஞ் சொல் வடமொழிச் சுலோகத்திலில்லை. அதனல் சிவபெருமான் குருவாய் வருகின்றார் என்ற வுண்மையை அச்சுலோகம் விளக்கவில்லை. அரன் என்பதற்கும் நேராகிய பதமில்லை. 'வளர்ந்து' என்பது போலச் 'சகஸ்தித்வா' என்ற சொல் நயமுடையதல்ல.

ஒன்பதாஞ் சூத்திரத்தே 'ஊனக்கண் பாசமுணரா' என்பதன் பொருளை விளக்கும் பகுதி வடமொழிச் சுலோகத்திலில்லை. 'பாசம்' என்ற சொல்லிற்கு 'விருத்தி' யென்ற சொல்லே சுலோகத்திற் காணப்படுகின்றது. 'விதி' என்னும் பதப் பொருளை விளக்குஞ் சொல் அதில் காணப்படவில்லை.

பத்தாவது சூத்திரம் பாசகூட்டியம் கூறவந்தது. அதனை இனிது விளக்கும் 'மலமாயை தன்னெடு வல்வினை யின்றே' என்பதன் கருத்தை விளக்குதலோடமையாது 'ஸ்வாநுபூதி மான்பவதி' என்ற வாக்கியத்தைச் சேர்த்து வருஞ் சூத்திரத்தின் கருத்தையும் வடமொழிச் சுலோகம் விளக்குவதாயிற்று. 'வல்வினை' என்ற சொற்குச் சுலோகத்தில் நேராகிய பகுதியில்லை. கூறவேண்டியதைக் கூறாது அவசியமில்லாத வாக்

கியத்தைச் சேர்த்து நிற்கின்றது அச்சுலோகம். 'இறைபணி நிற்க' என்ற அழகிய சொற்றொடர் போல 'கதின ஸ்வவிருத்திகம்' என்ற வாக்கியம் ஆற்றலுடைய தல்ல.

பதிமூன்றாம் சூத்திரத்தில் 'கண்டு காட்டலின்' என்ற சொற்றொடரின் உண்மைப் பொருளை இனிது விளக்குமொழி சுலோகத்தில் இல்லை. காட்டுபவன் என்னும் பொருளையே சுலோகம் விளக்கிற்று. காண்பவன் என்பது தெளிவுபடுத்தப் படவில்லை. 'காட்டலின்' என்ற சொல் லாற்றலினாலே ஆசிரியர் மெய்கண்டார் பெறவைத்த நுட் பத்தை 'ஆத்மோபகாரகே தான்மின்' என்று வடமொழிச் சுலோகம் விரித்தது. 'அயாச' என்பதன் பொருள் நய மூணாதது மேலான என்ற பொருளுள்ள சொல்லையே வட மொழிச் சுலோகத்தார் அதனைக் குறிக்க வழங்கியுள்ளார். 'அரன் கழல் செலுமே' என்பதின் பொருளை விளக்கும் பகுதி வடமொழிச் சுலோகத்திலில்லை. மேலான பக்தியைச் செய்யவென்ற வளவில் சுலோகம் நின்றுவிட்டது.

பன்னிரண்டாவது சூத்திரத்திலே "செம்மலர் நான் றாள் சேரவொட்டா அம்மலங்களீ இ" என்கின்ற கருத்தை வடமொழிச் சுலோகம் விளக்கவில்லை. அதற்குரிய வாக்கி யமும் அதிலில்லை. 'அரனென' என்பதற்கும் நேரானசொல் லில்லை. "மாலற நேய மலிந்தவர்" என்பதற்குந் தெளிவான வாக்கியமில்லை. அஃதன்றியும் வடமொழிச் சிவஞானபோத இறுதிச் சுலோகத்தின் இறுதியடிக்கும் சரியான வாக்கியந் தமிழிலில்லை.

இவ்வேறுபாடுகளால் தமிழ்ச்சூத்திரங்களிலுள்ள நயங் களை வடமொழிச் சுலோகங்களிற் காண இடமில்லை யென்ப

தம் ஆசிரியர் மெய்கண்டாரது நூல் நயத்தைச் செவ்வி தின் உணர்ந்து அதனை வடமொழியில் இனிதமைக்கும் ஆற்றலில்லாத ஒரு வடமொழி வாணரால் வடமொழிச் சிவ ஞானபோதம் எழுதப்பட்டதென்பதும் இனிது விளங்கும். ஆசிரியர் மெய்கண்டாரது சூத்திரங்கள் மிக்க நயமுடையன வென்று கூறினுல் அவையெல்லாம் வடமொழிச் சுலோகங் களில் தொக்கு நின்றனவென்று தமக்குத் தோன்றியவா அபிமானிகள் போலிச் சமாதானங் கூறுவர். ஆசிரியர் மெய்கண்டாரது நூலை மொழிபெயர்ப்பு என்று சொல்லு வது திருவாசகத்துக்கு போப்பையர் என்னும் பெரியோரால் அமைந்துள்ள மொழிபெயர்ப்பைத் தனியே எடுத்து அது மொழிபெயர்ப்பு நூலென்று காட்டாது அச்சிடப்பட்ட பின் நூறு அல்லது இருநூறு ஆண்டுகள் சென்றால் ஆங்கி லப்பற்று மிக்கோர் போப்பையரது ஆங்கிலத் திருவாசகத் தையே மாணிக்க வாசகர் தமிழில் மொழி பெயர்த்து விட்டாரென்று கூறினுற் போலும். ஓவியச் சீர்மை வாய்ந்த ஒரு வடிவத்தையும் அது வாயப்பெறுத மற்றொரு வடிவத்தையும் ஆசிரியர் மெய்கண்டார் நூலை வழிநூலென் றுரைப்பார்க்குக் காட்டினுல், பின்னையதிற் புதைந்து கிடந்த தையே முன்னையது விளக்க எழுந்தது என்று அவர் கூறு வர்போலும். இங்ஙனஞ் சாற்றுவார் மயக்கத்திற்கு மருந் தில்லை. உண்மையை நுண்ணிதின் ஆயப்புகுவோருக்கு இதுகாறுங் கூறிய காரணங்களால் ஆசிரியர் மெய்கண்டார் நூலே முதனூலென்பது அங்கை நெல்லியாம்.

மெய்கண்டார் சிவஞான போதத்தை வடமொழியிற் பெயர்த்தவர் அதனை வடநூற் பன்னிரண்டாவது சுலோகத்

தில் குறிப்பித்துள்ளார். வடமொழிச்சிவஞான போகத்தின் பன்னிரண்டாவது சூலோகத்தின் இறுதியில் "ஏவம் வித் யாத் சிவஞானபோதே சைவார்த்த நிர்ணயம்" என்ற வாக் கியங் காணப்படுகின்றது. அதற்குப்பொருள் 'இவ்விதமாகச் சிவஞான போதத்திலே சைவப் பொருள் துணியப்பட்ட தென்றறிக' என்பதே. இந்த வாக்கியத்தில் 'சிவஞான போதே' என்ற சொல் உற்று நோக்கத்தக்கது. அந்தச் சொல் வடமொழிச் சிவஞான போதத்தைச் சுட்டுவதல்ல. சுட்டுவ தாயின் 'இச் சிவஞான போதத்தே' என்று கூறப்பட்டிருத் தல் வேண்டும். அதற்குரிய சுட்டு யுச்சூத்திரத்திலில்லை. இல்லாததை இருப்பதென்று கோடல் பொருத்தமில்லை. ஆதலால் அங்கு சிவஞானபோத மென்றது மெய்கண்டார தூலையே குறிக்கும். வடமொழிச் சிவஞானபோதம் எழு தப்பட்ட காலத்தே சிவஞானபோதம் என்று பெயருள்ள நூல் ஒன்றுதானிருந்ததாகவின் அதனைத் தமிழ்ச் சிவஞான போதமென்று கூறுவதற்குக் காரணமில்லை. தமிழிலுள்ள திருவாசகத்தை ஆங்கிலத்திலே மொழி பெயர்க்க போப் பையர் அதனைத் தமிழ்த் திருவாசகமென்றும், காரது மொழிபெயர்ப்பை ஆங்கிலத் திருவாசகமென்றும் கூறினை ரில்லை. யாண்டும் அவ்வாறே ஆகும். ஒரு மொழியிலுள்ள ஒருநூலை மொழி பெயர்ப்பவர் நூலின் பெயரொடுமொழிப் பெயரையும் இணைத்துக் கூறுவது வழக்கமில்லை. அவ்வாறே நூலாசிரியர் பேரையும் நூலிணைத்து இணைத்துக் கூறுதல் மரபன்மை யறிக. மகாபாரதத்தின் மொழி பெயர்ப்பு என்று விடத்து வியாசர் செய்த மகாபாரதத்தின் மொழி பெயர்ப்பு என்று* கூறுவது அவசியமில்லை. வியாசரைத்

தவிர வேறு யாராவது மகா பாரதஞ் செய்திருந்தால் வியாச மகா பாரதமென்று கூறுவதற்குக் காரணமுண்டு. சிவஞான போதமென்பது ஒரே நூலாகவும் அது மெய்கண் டார் ஒருவராலே செய்யப்பட்டதாகவும் இருந்தமையாற் றான் வடமொழிச் சிவஞான போதம் எழுதினோர் 'சிவஞான போதே' என்ற அளவில் மெய்கண்டார் நூலையே குறித்தா ரென்று கொள்க.

அன்றியும் வடமொழிச் சூத்திரத்தின் மொழி பெயர்ப்பு மெய்கண்டார் தாவின் பன்னிரண்டாவது சூத்திர மென்று கொண்டால் "ஏவம் வித்யாத் சிவஞான போதே சைவார்த்த நிர்ணயம்" என்ற வாக்கியத்திற்கு மொழி பெயர்ப்பு அதன்கண் ஏன் காணப்படவில்லை என்ற வினா வெழும். அதற்கு அவ்வாக்கியத்தை மொழி பெயர்த்தல் அவசியமில்லையென்றவிடை தக்கதன்றும். சிவாகம முடிபினை அறுதியிட்டுச் சிவபெருமானாலே கூறப்பட்ட சொற்றொ டரை அவசியமில்லையென்று ஒதுக்குவது ஆசிரியர் மெய் கண்டார் மாட்டு ஏற்படுத்தப்படும் குற்றமாமன்றே? அங் ஙனம் மெய்கண்டார் மேற் குற்றமேற்றுதல் தவறுகும். ஆக லால் மெய்கண்டார் நூல்செய்யுமுன் வடமொழியில் சிவ ஞானபோதம் ஏற்படவில்லையென்றே கொள்ளுதல் பொருத்த முடைத்து.

இன்னும் இரௌரவாகமத்துள் பல சுலோகங்களை யுடைய பாவ விமோசனப் படலத்துள் பன்னிரண்டு சுலோகங்கள் மாத்திரமே சிவஞான போதம் என்ற ஒரு சாத்திரமாயிற்று என்று கோடல் ஆகமத்திற்குப் பொருத்துவ தன்றும். அதன்கணுள்ள பன்னிரண்டு சூத்திரங்களை

வேறுக எடுத்து அவற்றை மாத்திரம் சிவஞான போத மென்று கூறினரென்று கொள்ளுவதற்கிடமில்லை. எனெனில் அப்பன்னிரண்டு சூத்திரங்களுள் இறுதிச் சூத்திரமே சிவஞான போதமென்ற வார்த்தையை யுள்ளடக்கி நிற்கின்றது. அவ்வார்த்தையுள்ள ஒரு சுலோகம் பாவவிமோசனப் படலத்துள் அமைந்து கிடக்குமாயின் பன்னிரண்டு சூத்திரத்திற்கும் சிவஞான போதமென்ற பெயர் வேறுக எற்பட்டிருக்க இடமில்லை. ஒரு படலத்திலுள்ளே ஒரு சூத்திரம் அதற்கு முன்னுள்ள பதினொரு சூத்திரங்களையும் ஒரு சாத்திரமாகத் தோற்றுவாயின்றிக் கூறல் நூன் முறைக்கு முற்றுமாறுகும். ஆகலால் வடமொழியில் சிவஞானபோதப் பன்னிரண்டு சூத்திரமும் பாவ விமோசனப் படலத்தின் பகுதியென்று கொள்ள இடமில்லை. இரௌரவத்தின் பகுதியென்று சொல்வதற்குத் தெளிவான சான்றுகள் ஒன்றுமில்லை. இரௌரவத்தின் பகுதியெனப்படும் சில சுலோகங்கள் காலஞ்சென்ற சேந்திநாதய்யரவர்களால் வெளிப்படுத்தப்பெற்றன. அச்சுலோகங்கள் தீக்கை செய்முறையைப்பற்றிக் கூறுகின்றன. அங்ஙனங் கூறுமிடத்துச் சீடன் கையில் சிவஞானபோதமென்னுஞ் சாத்திரத்தைக்கொடு என்ற பொருளுள்ள வாக்கியங் காணப்படுகின்றது.

" பாவநாதிகூடியாசைசுகம் சுத்தம் கிருத்வாயதானிதி
சிவஞானபோத சாஸ்திரஞ்ச தத்யாத்பக்ய சிஷ்யகம் "

சிவஞானபோதமானது இரௌரவத்தின் ஒரு பகுதியாயிருக்குமாயின் தன்னின் வேறுகிய ஒரு சாத்திரமாக இரௌரவம் அதினைக் கூறவேண்டியதில்லை. ஆகவே சிவ

ஞானபோதம் இரௌரவத்தின் பகுதி யென்பதற்கும் வெளிப்பட்ட சுலோகங்கள் இடங்கொடுக்கவில்லை. ஆதலால் சிவஞான போதத்தை இரௌரவத்திலிருந்து வந்தமென்று சொல்லுவதற்கு மெய்கண்டார் காலத்திற்குப்பின் புதிதாக எற்படுத்திய சில சுலோகங்களே இப்போது இரௌரவ மெனப் படுதல் காண்க.

இனி ஸ்ரீமெய்கண்டாரது முதல் மாணவராகிய அருணந்தி சுவாமிகள் தமது நூல்வழிகூறுஞ் செய்யுள் கவனிக்கத் தக்கது. "போத மிகுத்தோர் தொகுத்த" என்னும் முதற் குறிப்பினை யுடைய பாட்டில் மிக்க ஞானமில்லாமலும் மிக்க பேதமையில்லாமலும் நடுத்தரமான நிலையில் நிற்போர்க்கு உய்திகூட நெறி எது என்று ஆராய்ச்சி செய்வோரின் பொருட்டு ஒரு வழியை இறைவன் நந்தி பெருமானுக்கருளிச்செய்ய அவர் அவ்வழியைச் சனற்குமாரருக்கு உபதேசிக்க அந்த நெறியை மெய்கண்டதேவர் கடைப்பிடித்து அருளிச்செய்த ஞான நூலின் வழித்தாயது சிவஞானசித்தியாரென்று கூறப்பட்டுள்ளது. இதனால் விளங்குவது யாதெனில் சிவஞானபோதத்திற் கூறப்படும் ஞான நெறியானது இறைவனிடத்திலிருந்து நந்திதேவர் பரம்பரை வாயிலாக மெய்கண்டார்க்கு வந்தென்று தெரிகின்றேம். உபதேச முறையால் பெற்ற அரும்பொருளை அடிப்படையாகக் கொண்டு ஸ்ரீமெய்கண்டார் செய்தருளிய ஞான நூலே சிவஞானபோதமென்று கொள்ள வேண்டுமேயன்றி நூல் தானே கைலாயத்திலிருந்து குவலயத்தில் இழிந்ததென்று கூற இடமில்லை. நெறி எது என்பவர்களுக்கு அதனை யுணர்த்த அவ்வழியைக் குருநாதன் கொண்டு நூல் செய்தா

ரென்பதே பொருந்துவதாகும். அது உமாபதி சிவாசாரிய சுவாமிகள் சிவப்பிரகாசத்துப் பாயிரத்துள் நான்மரபும் சந் தானமரபும் வேறுவேறுகக் கூறினமையாலே தெள்ளிதிற் புலனும். சிவப்பிரகாசம் ஐந்தாவது பாட்டினுள் சந்தான பரம்பரை திருக்கைலாயத்தில் வீற்றிருக்கும் பெருமான் முதலாக மறைஞான சம்பந்தர் ஈறுகக் கூறப்பட்டது.

“தேவர்பிரான் வளர்கயிலைக் காவல் பூண்ட
திருநந்தி யவர்கணத்தோர் செல்வர் பாரிற்
பாவியசத் தியஞான தரிசனிக ளடிசேர்
பாஞ்சோதி மாமுனிகள் பதியாம் வெண்ணெய்
மேவியசீர் மெய்கண்ட திறலான் மாரு
விரவுபுக ழருணந்தி விறலார் செல்வத்
தாவிலருண் மறைஞான சம்பந்த ரிவரிச்
சந்தானத் தலைமையாளுந் தன்மை யோரே.”

ஆயின் சிவப்பிரகாசம் பதினொன்றுவது பாட்டினுள் நான் மரபு கூறப்படுமிடத்து ஸ்ரீமெய்கண்டார் சிவஞானபோதம் செப்பினர் எனவும் அவரது ஞானப்புதல்வராகிய அருணந்தி சிவாசாரியர் சிவஞானசித்தியார் இயற்றினரெனவும் அவ் விரண்டு நூலையும் ஆகம நூலையும் ஆசிரியர் திருவுள்ளத்தில் உறைகின்ற திருவருளையுங் கலந்து சிவப்பிரகாச மியற்றப் படுவதாகக் கூறுவது காண்க.

“தெரித்தகுரு முதல்வருயர் சிவஞான போதஞ்
செப்பினர்பின் பவர்முதல்வர் சிவஞான சித்தி
விரித்தனர்மற் றவர்கழுரு வடிகள் போற்றி
விளம்பியநூ லனையிரண்டும் விரும்பி நோக்கிக்
கருத்திலுரை திருவருளு மிறைவ னூலுங்
கலந்துபொது வுண்மையெனக் கருதி யானு

மருத்திமிக வுரைப்பன்வளர் விருத்த நூறு
மாசில்சிவப் பிரகாச மாகு மென்றே."

ஸ்ரீ அருணந்தி சிவாசாரியர் இயற்றிய 'போத மிருத்தோர்' என்று தொடங்கும் சிவஞானசித்தி நான்மரபுச் செய்யுளி லாதல், சிவப்பிரகாச நான்மரபுச் செய்யுளிலாதல், இரௌ ரவ ஆகமத்திலிருந்தாதல் பிற எதாவது ஓராகமத்திலிருந் தாதல் சிவஞானபோதம் இயற்றப்பட்டதாகக் கூறப் படவேயில்லை. 'தெரித்தகுரு' என்ற செய்யுளில் சிவ ஞான போதத்தையும் சிவஞான சித்தியாரையும் வேறுகவும் இறைவன் நூலாகிய ஆகமத்தை வேறுகவும் கூறியிருத்தல் காண்க. இவைறவன் நூலின் ஒரு பகுதியின் மொழி பெயர்ப்பென்று அங்கே ஆசிரியர் கூறிற்றிலர். நான்மரபு கூறுமுன் சிவாகமத்தி னியல்பினை விரிந்த ஒரு செய்யுளில் [illegible]ம் அச்சிவாகமத்துள் ஒன்றினுடைய பகுதி யின் மொழிபெயர்ப்பென்று சிவஞானபோதத்தைக் குறித் துக் கூறவில்லை. சிவாகமமாவது சரியை கிரியை யோகம் ஞானமாகியவற்றைத் தெளிவுற உணர்த்துவதென்று நன்கு வகுத்துக்கூறிய வாசிரியர் அதற்கடுத்த பாட்டில் சிவஞான போதத்தை அச்சிவாகமத்தின் வழித்தென்று எளிதாகக் கூறியிருக்கலாம். இரௌரவப் பகுதியின் மொழிபெயர்ப் பாகச் சிவஞானபோத மிருக்குமாயின் ஆசிரியர் அங்ஙனங் கூறுதுவிடார்.

"கிரியையென மருவுமவை யாவு ஞானங்
கிடைத்தற்கு நிமித்தமெனக் கிளக்கு முண்மை
சரியைகிரி யாயோகத் தன்மை யோர்க்குச்
சாலோக சாமீப சாரூ பங்கண்

மருவியிடு முயர்ஞான மிரண்டா மாறு
மலமகல வகலாத மன்னு போதத்
திருவருளொன் றுரண்றதனைத் தெளிய வோதுஞ்
சிவாகமமென் றுலகறியச் செப்பு நூலே.”

சந்தான குரவர் நால்வருள் நூல் செய்த மூவருஞ் சிவ ஞானபோதத்தை இரௌரவாகமப் பகுதியின் மொழி பெயர்ப்பு என்று கூறிற்றிலராகலான் ஸ்ரீ மெய்கண்டார் காலந்தொட்டு உமாபதி சிவாசாரியர் காலம் இறுதியாகச் சிவ ஞானபோதம் வடநூலின் மொழிபெயர்ப்பு என்ற கொள்கை உலகத்தில் நிலவவில்லை யென்பது நிண்ணம். சந்தான குரவர் காலத்திற்குப் பின்னே சிவஞான போதப் பெருமை தமிழுலகிற் பரவியகாலத்தே வடமொழியிற் சிவஞான போதம் எற்பட்டிருத்தல் வேண்டும். அங்ஙனம் எற்பட்ட காலத்திற்குப் பின்னேயே அது இரௌரவாகமத்திலிருந்து வந்ததென்ற கட்டுக்கதை தமிழ்நாட்டிற்கு வடநூல் மூலம் வேண்டுமென்ற தப்புக் கொள்கையில் உற்பத்தியாயிருத்தல் வேண்டும். அதற்குச் சற்று முன்னேதான் சிவஞான போதத்திற்கு முன்னும் பின்னும் எழுதப்பட்ட பாயிரச் செய்யுட்கள் யாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

சிவஞானபோதமானது ஸ்ரீ மெய்கண்டாரால் இயற்றப் பட்டதென்று கூறியிருப்பவும் “மலர்தலை” என்ற பாயிரச் செய்யுளில் ‘மயர்வு மறநந்தி முனிகணைத் தளித்த உயர் சிவஞான போத முரைத்தோன்’ என்று கூறப்பட்டது. அவ்வாறே சிவஞானபோதத்தின் இறுதியின் கண்ணும் “எந்தை சனற்குமர னேத்தித் தொழுவியல்பாய், நந்தி யுரைத் தருளு ஞானநூல்” என்று கூறப்பட்டது. “ஓட்

டக்கூத்தன் பாட்டிற்கு இரட்டைத்தாழ்' போலச் சந்தானகுரவர் காலத்திற்குப்பின் ஏற்பட்ட புதுக்கொள்கையை நாட்டுவதற்குச் சிவஞானபோதத்திற்கு முன்னும் பின்னும் அதனை வலியுறுத்தும் பாயிரச்செய்யுட்கள் எழுந்தனபோலும். அங்ஙனமாயினும் அப்பாயிரச் செய்யுட்களில் சிவஞானபோதம் இரௌரவ ஆகமத்தின் பகுதியென்று கூறப்படவேயில்லை. நந்தி பெருமான் நூல் செய்தால் அது வடமொழியிற்றூ னிருக்கவேண்டுமென்று துணிவதற்குக் காரணம் யாதோ விளங்கவில்லை. அல்லதூஉம் நந்தி பெருமான் உரைத்த நூலே ஆகமத்தின் பகுதியென்று கூறவும் போதிய பிரமாணம் யாதுமில்லை. ஆதலால் இச்சிறப்புப்பாயிரச் செய்யுட்கள் எழுந்த காலத்தும் சிவஞான போதம் இரௌரவத்தின் வழி நூலென்ற கொள்கை உலகத்தில் நிலைபெறவில்லை. இதனால் யூகிக்கப்படுவது யாதெனில் சிறப்புப் பாயிரச் செய்யுட்கள் எழுந்த காலத்திற்குப் பின்னேயே வடமொழிச்சிவஞானபோதத்தை வைப்பதற் கிடமாக இரௌரவாகமப்பகுதியொன்றுவற்பட்டிருத்தல் வேண்டும். அதற்குப் பின்னேயே வடமொழிச் சிவஞானபோதத்திற்கு விரிவுரை வகுத்த சிவாக்கிர யோகிகள் இரௌரவத்திலே சிவஞானபோதம் உபதேசிக்கப்படுகின்றதென்ற கருத்தைத் தமது பாடியத்துள் கூறுவாராயினர். சிவாக்கிர யோகிகள் காலந்தொட்டு சிவஞானபோதம் மொழி பெயர்ப்பு என்ற கொள்கையானது வலி பெறுவதாயிற்று. திருவாவடுதுறையில் விளங்கிய உலகுடை நாயனார் என்பாரும் அக்கர்ணபரம்பரைத் கட்டுக்கதையை நம்பினதாக அறிகிறோம். அவர்க்குப் பின்வந்த ஆசிரியர்

சிவஞான சுவாமிகள் இதனைப்பற்றிய சரித்திரவாராய்ச்சியிற் கவனஞ் செலுத்தாது ஐதிகவாலாற்றைத் தான்கேட்ட முறையாகவே தமது நூலிற் குறித்துவிட்டனர். அங்ஙனங் கூறினும் 'சிவஞான போதமெறி காட்டும் வெண்ணெய் பயில்வாய்மை மெய்கண்டான்' என்ற விடத்துக் கையாய பாம்பரையில் வந்தது சிவஞான போதநெறி யென்று குறிப்பித்தமை காண்க. 'காமிக முதலிய சைவாகமங்களுள் ஞானபாதப் பொருளின் இகலறுத்து அவற்றின் பொருணுண்மை போதித்தற்கு இரௌரவாகமத்தில் எழுந்தது சிவஞானபோதம்' என்ற வாலாறு ஸ்ரீ அருணந்தி சிவாசாரியாரால் கூறப்படவில்லை யென்பது காண்க. அது அருணைந்தி சிவாசாரியரது "போதமிருத் தோற்றொகுத்த" என்ற செய்யுளை உற்றுநோக்கில் நன்கு விளங்கும். அருணந்தி சிவாசாரிய சுவாமிகள் சுருக்கிக் கூறினதையே ஆசிரியர் சிவஞானயோகிகள் விரித்துக் கூறினரென்று ஒரு சாரார் இரண்டிற்கும் பொருத்தங்கூற முற்படுவாராயின் அருணைந்திசிவாசாரிய சுவாமிகள் கூறியது சுருக்கமென்பதற்கும் ஆசிரியர் சிவஞான யோகிகள் கூறியது விரிவு என்பதற்கும் தக்க பிரமாணங் காட்டவேண்டும். இரௌரவாகமத்திலாவது நந்தி பெருமானுக்கு மலைவுதீர்கற்பொருட்டுச் சிவஞானபோதம் கூறப்பட்டதென்று வரையப்பட்டுளதாவென்று ஆராய்ச்சிசெய்தால் அங்ஙனங்கூறும் இரௌரவாகமத்தின் பகுதி இதுவரை காணப்படவில்லை.

இன்னுஞ் சிலர் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகளுக்குக் குருந்த மரத்தடியில் சிவபெருமான் குருவாயெழுந்தருளிய காலை அவர் கையிலிருந்த புத்தகம் சிவஞானபோத மென்று

கடவுண்மாமுனிவர் கூறியதைப்பெரிய பிரமாணமாக எடுத் துரைப்பார். அக் கடவுண்மாமுனிவர்தாணும் சிவபெருமான் வைத்திருந்த சிவஞானபோதம் இரௌரவத்தின் பகுதி யென்று தெரிவிக்கவில்லை. கடவுண்மாமுனிவர் காலம் சந் தானகுரவர் காலத்திற்கு மிகவும் பிந்தியது. அவர் நூலுட் குறித்த சிவஞானபோதம் ஆசிரியர் மெய்கண்டார் மொழி பெயர்த்த சிவஞானபோத மென்பதற்குப் பிரமாணமில்லை. கடவுள் குருவடிவமாக எழுகின்றகாலை தமது திருக்கை யொன்றில் ஏடுவைத்திருத்தல் அவர்கொண்ட திருமேனி யின் இலக்கணத்தின்பாற் படும். அதனை ஒரு சாரார் வேத மென்பர். ஒரு சாரார் ஆகமமென்பர். ஒரு சாரார் சிவஞான போதமென்பர். அவர் கூறுவனவெல்லாவற்றிற்கும்பொருள் அபரஞானக்குறி என்பதே கருத்தாகக் கொள்க. "சீதளப் பளிக்குமேனியும்" என்ற திருவிளையாடற் செய்யுளில் வேத புத்தகம் என்ற வாக்கியங் காணப்படுகின்றது. அச்சொற் றொடரைக்கேட்ட துணையானே வைதிகர்கள் சிவபெருமான் திருக்கையில் வைத்திருந்தது 'எங்கள் வேதமே, எங்கள் வேதமே' என்று முழங்குதல் கூடும். வேதத்திற்குப் பொருளருளிச் செய்ய முன்வந்த பெருமான் எப்படித்தன் கையிலுள்ள வேதத்தை விரித்து ஒவ்வொரு சொல்லிற்கும் பொருள் கூறவில்லையோ அவ்வாறே அவர் குருந்தமரத் தடியில் எழுந்தபோதும் மணிவாசகப் பெருமானுக்குச் சிவ ஞான போதத்திலுள்ள பன்னிரண்டு சூத்திரங்களையும் விரித்துப் பொருள் கூறவில்லை. ஆதலால் அவர் திருக்கையி லிருந்த திருவேடு ஸ்ரீ மெய்கண்டார் இயற்றிய நூலிற்கு மூதனூலென்று கொள்ளப் போதிய சான்றில்லை. எனவே

ருயினும் அது இரௌரவப் பகுதியென்று கொள்ளுதற்குப் பிரமாணம் யாது மின்மை யறிக. இதுகாறுங் கூறியவற் ருல் திருக்கைலாய பரம்பரையில் வந்த ஞான நெறியினை ஆசிரியர் மெய்கண்டார் உணரப்பெற்றுச் சிவஞானபோத நூலினை முதன் மூதலில் இயற்றியருளினரென்பதும், அவர் காலத்திலும் எனைச்சந்தான ஆசாரியர் காலத்திலும் அது மொழிபெயர்ப்பு நூல் என்ற கொள்கை ஏற்படவில்லை யென்பதும், அவர்கள் காலத்திற்குப் பின்னே வடமொழி யிற் சிவஞானபோதம் மொழிபெயர்க்கப்பட்ட தென்பதும், அதற்கு அவ்வடமொழிச் சிவஞானபோதத்தின் இறுதிச் சுலோகத்தின் இறுதி யடியே தக்க சான்ருகுமென்பதும், சிவஞானபோத நூலே திருக்கைலையிலிருந்து வந்ததென்று கோடல் உமாபதிசிவாசாரியர் கூறிய ஞான்மரபொடு முரண் படு மென்பதும், அக்கொள்கையை ஒருவாறு வலியுறுத் துதும் சிவஞானபோதத்துச் சிறப்புப்பாயிரச் செய்யுட்கள் எழுந்தபின்னையே இரௌரவாகமப் பகுதியொன்று வட மொழிச் சிவஞான போதத்தைத் தன்னகத்துக் கொள் ளுதும் வண்ணம் ஏற்பட்டிருத்தல் கூடுமென்பதும், அந்த இரௌரவத்தைத் தழுவிய சிவாக்கிரயோகிகள் காலந் தொட்டே ஸ்ரீமெய்கண்டாரது சிவஞானபோதம் மொழி பெயர்ப்பென்ற பொய்க் கொள்கை உறுதிப்பட்டதென்ப தும், அதற்குப்பின்னே வந்த கடவுண்மாமுனி முதலியோர் அக் கொள்கையை ஒருவாறு தழுவினரென்பதும், பின் னர் சிவஞான பாடியத்திலே அது இடம்பெற்றுத் தமிழ் மக்களால் அதற்குப் பின்னே சிலகாலத்திற்கு முன்வரை நம்பப்பட்டதென்பதும் உய்த்துணரப்படும்.

தமிழ்ச் சிவஞானபோதம் முதனூ லல்லவென்ற தப் புக்கொள்கையை நிலை நாட்ட முன்வந்தாருள் மிக்க ஊக் கங்காட்டினவர் காலஞ்சென்ற யாழ்ப்பாணம் திருவாளர் சபாரத்ன முதலியார் என்பார். அவர் கூறு முதற்காரணம் அந்நூல் மொழிபெயர்ப்பென்ற கொள்கை பரம்பரைக் கொள்கை என்பதே. முன்னுள்ள உண்மையை மறைத்துப் பின் ஏற்பட்ட கொள்கையைப் பரம்பரைக் கொள்கை யென்று கூறுவது சைவப் பெருநெறிக்கு இடையூறு விளை விக்க சில நூற்றாண்டுகட்கு முன் எழுந்த வஞ்சன்மவாதத் தைக் கைக்கொண்ட நம்மவரிற் சிலர் அவ்வேகான்மவாதமே பரம்பரைச் சமயமென்றும் சைவசித்தாந்தம் நேற்று வந்ததென்றும் குழறுவதை யொக்கும். இது சரித்திர வாராய்ச்சியின்மையான் வந்த இழுக்கு. சந்தானகுரவருள் இறுதியில் நின்ற ஸ்ரீஉமாபதிசிவத்தின் காலத்தே சிவஞான போதம் மொழிபெயர்ப்பு என்ற கொள்கை கிடையாது என்று மேலே காட்டினேம். அதற்குப்பின் ஏற்பட்ட கொள்கையைத் திருவாவடுதுறை ஆதீனத்தார் கைப்பற் றிக் கொண்டால் அது எவ்வாறு பரம்பரைக் கொள்கை யாகும்?

இனி முதலியார் அகச்சாட்சியத்தைப் பற்றிப் பேசுவ தாக முன் வந்து, 'மலர்தலையுலகின்' என்று தொடங்குஞ் செய்யுளில் "நந்திமுனிகணத் தளித்த உயர் சிவஞானபோத மூரைத்தேதான்" என்ற வாக்கியத்தையும் மற்றொருவிடத் தில் 'நந்தி யளித்த ஞானநூல்' என்ற வாக்கியத்தையும் எடுத்துக் காட்டுகின்றார். அவ்வாக்கியங்கள் உமாபதிசிவா சாரியர் காலத்திற்குப் பிற்பட்டிருத்தல் வேண்டுமென்றும்

முன்னே காட்டப்பட்டது. அவைகளுள் ஸ்ரீ மெய்கண்டார் நூல் வடநூலின் மொழிபெயர்ப்பு என்று காட்டுவதற்குச் சொல்லில்லை. நந்தி சொன்ன நூலென்று கேட்டவுடனே அது வடமொழியிற்றானிருக்கவேண்டு மென்றும், 'உரைத்தார்' என்றதற்கு மொழிபெயர்த்தார் என்பது பொருளென்றுங் கூறுவது மிகத் தவறாகும். நந்திபெருமான் கூறியதை மெய்கண்டார் 'உரைத்தார்' என்ற விடத்து இருவரும் அச்செய்யுளின்படி வெவ்வேறு மொழியில் பேசினார்கள் என்று கருதுகிறவர்கள் சதாசிவமூர்த்தியிடத்தி லிருந்து ஆகமங்களை அனந்தரே கேட்டு ஸ்ரீகண்டருக்குரைப்ப, ஸ்ரீகண்டர் கணங்கட்குஞ் முனிவருக்குஞ் அவற்றை அளித்தபோது அனந்தர் பேசிய மொழி வேறு, ஸ்ரீகண்டருக்குரைத்தபோது அனந்தர் பேசிய மொழி வேறு, முனிவருக்கே தவரும் வழங்கிய மொழி வேறு, என்று கூறுதல் எல்லாரும் வடமொழியிலேதான் பேசினார்கள் என்று கொள்ளுவதைப்போல? வடமொழியிலே ஆகமமிருத்தலினாலே அங்ஙனங் கூறலாமென்றால், தமிழிலே சிவஞானபோதமிருத்தலினாலே, நந்திபெருமானும் தமிழிலேயே பேசினரென்று ஏன் கூறக் கூடாது? வடமொழியிலுள்ள சிவஞானபோதம் இருக்கிறதென்றால் அது தமிழினின்று மொழி பெயர்த்ததென்று சரித்திரவாராய்ச்சியால் மேலே விளக்கப்பட்டது. தமிழிலுள்ள ஆத்திசூடி கொன்றைவேந்தன் முதலிய நூல்களை வடமொழியில் மொழிபெயர்த்தவர் தமது மூலத்தைக் கூறாதுவிட்டால் ஆத்திசூடியுங் கொன்றைவேந்தனுமே மொழி பெயர்ப்பு நூலாமென்று குருட்டு நம்பிக்கையுள்ள தமிழர் கூத்தாடுவதியல்பே. ஆனால் அது உண்மைக்கு

விசோதமா மன்ரே ? இவ்வாறுதான், கபடமும் அறிவு மூள்ள மக்கள் கபடமும் அறிவுமில்லாத மக்களைத் தமது வஞ்சனையால் எளிதில் வென்றுவிடுவார்கள். இச்சூழ்ச்சி களை வெளிப்படுத்திக் தொலைக்கவே சரித்திர வாராய்ச்சி முறை மிகவும் பயன்படுகின்றது.

முதலியாரது மூன்றுவது போலிக் காரணமென்ன வென்றால் சிவஞான போதத்தில் வடசொற்கள் காணப்படு கின்றன என்பது. இது ஒரு காரணமாகுமா? அப்படி யானால் வடசொற்கள் சிறுபான்மையுடைய தேவார திருவா சக முதலிய எல்லா நூல்களையுமே மொழிபெயர்ப்பு என்று கூறநேரும். முதலியாரைப் போன்ற தப்பு வழக்கானிகள் அத்தகைய கூற்றையும் நிலைநாட்ட முன்வருவார்கள். அவ ரைப்பற்றிப் பேசிப் பயனென்?

நான்காவது காரணம் மந்திரங்கள் வடமொழியிலுள் ளன. அவற்றையும் அவற்றின் கருத்தையும் சிவஞான போதம் விளக்குதலால் சிவஞானபோதம் மொழிபெயர்ப்பு என்பதே. மேற்காட்டிய காரணம்போல் இதுவும் தள்ளத் தக்கதே. மந்திரமென்பதின் இயல்பே இன்னதென்று அறியாது, ஆசிரியர் தொல்காப்பியர் முதலியோர் தமிழில் மந்திரமுண்டு என்று கூறிய உண்மையையு மறியாது; தமிழானது மந்திரத்திற்குரிய மொழி யல்லவென்று தம் அறியாமையைப் புலப்படுத்தியதே நாம் அவர்பால் இரங்கத்தக்க செய்கையாம். மந்திரம் யாவும் தமிழ்க்கே யுரியன என்பதைப்பற்றிப் பிறிதொரு இடத்திற் கூறப் பட்டது. ஈண்டு விரிவஞ்சி விடுக்கின்றும். அவர் கூறிய வண்ணமே அவை வடமொழியினிருந்தாலும் அவற்றை

விளக்குவான் புகுந்த ஆசிரியர் தமிழில் முதனூல் செய்யவியலாது என்று யூகிப்பதெப்படி ? எதாவது ஒரு மந்திர நூலின் மொழிபெயர்ப்பாக சிவஞானபோதத்தைக் கூற முடியுமா ? சிவாகமங்கள் பல மெய்கண்டார் நூலுக்கு முன் னிருந்தமையாலே அவற்றோடு ஒத்த கருத்தை யுடைய சிவஞானபோதத்தை அவற்றின் மொழிபெயர்ப்பு என்று எவ்வாறு கூற முடியும்? ஆங்கிலத்தில் ஒருவர் இந்துதேச சரித்திரத்தை முதன்முதல் எழுதினால் அவர்கூறுஞ் செய்திகள் இந்திய நாட்டில் நிகழ்ந்தன எனலாமே யொழிய முதன் முதற் செய்யும் ஆங்கில சரித்திரத்திற்கு இந்திய நாட்டி லுள்ள வடமொழியில் மூலமிருக்க வேண்டுமென்று சொல் லுவதெவ்வாறு பொருந்தும்? ஆனால் முதலியாரது மனப் போக்குள்ளவர்கள் பின்னுள்ள யாவும் முன்னுள்ளவற்றின் மொழிபெயர்ப்பென்று கூறத்தொடங்குவார்கள். அங்ஙன மாயின் மொழிபெயர்ப்பு இலக்கணம் யாதுதானென்பது தெளிய விடமில்லை. கண்ணனது கீதை மொழிபெயர்ப்பு கிறிஸ்துவின் மலைப்பிரசங்கமென்றும், வடமொழி நீதிசாரத்தின் மொழிபெயர்ப்பு தமிழ் ஆத்திசூடி கொன்றைவேந்தன் முதலியவென்றும், கோரானின் (Quoran) மொழிபெயர்ப்பு விவிலியநூல் (Bible) என்றும், திருவள்ளுவரின் மொழி பெயர்ப்பு உரோமாபுரியிலிருந்த மார்க்கஸ் அரீலியஸ் (Marcus Aurelius) என்பவர் கட்டளையென்றுங் கூறதோரும்.

முதலியாரது திரிபுணர்ச்சி இதனோடும் நிற்கவில்லை. எனெனில், 'சிவஞானபோதத்தை இறைவன் ஆகமங்களுட் புகட்டினைத்திலனேல் அது அவர் காருண்ணியத்திற்குப் பெருங்குறைவு நாட்டினிடும்' என்று குழறுகிறார். இவர்

தேவார திருவாசகங்களுக்கு மூலநூல் ஒன்றினை வட மொழி வேதத்துள்ளே சிவபெருமான் புகுத்திவையாத தற்கு அக்கடவுளை குறைகூறத் துணியாத காரண மென்னை விளங்கவில்லை. சிவஞானபோதக் கருத்துக்கள் தேவார திருவாசகத்துள்ளுங் காணப்படுகின்றன. கருத் துக்கள் உலகில் நிலவுமாயின் அவற்றை நூலுள் வகுத் தமைத்த பெருமை கூட ஆசிரியர் மெய்கண்டார்க்கு உள்ள தென்று ஒப்புக்கொள்ள மனக்கோட்டமுடைய முதலி யார்க்கு முடியாத தொன்றே. ஆகமத்தில் சிவஞானபோதத் தைச் சிவபெருமான் அமைக்காவிட்டால் மொழிபெயர்ப்பு மாத்திரஞ் செய்ய ஆற்றலுடைய ஸ்ரீ மெய்கண்டார் தமது நூலியற்றத் திண்டாடித் திகைத்திருப்பர் போலும். இஃது எவ்வளவோர் அறியாமை! இப்படிப்பட்ட அபிப்பிராயங் கள் நகைத்தற்கிடந்தருமே யன்றிப் பிறிதென்னும்.

இனி, ஆசிரியர் ஸ்ரீ மெய்கண்டார் இருவகைப் பாச் செய்யுட்களாலும் உரைச்செய்யுளாலும் நூலியற்றினமை யால் அது மொழி பெயர்ப்பா மென்பது முதலியாருடைய அடித்தபோலிக் காரணமாகும். பல்வகை யாப்பாலும் ஒரு நூல்செய்யப் படலாமென்பதற்குப் போதிய எடுத்துக்காட் டுக்கள் உள்ளன. உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்பது ஒருவகைத் தமிழிலக்கிய விசேட மென்பதனை இவர் உணர்ந்திலர் போலும். இதனை ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்களும் நன்கு விளக்கி முதலியாரை மறுத் திருக்கின்றார்கள். சிலப்பதிகார முதலிய பெருங்காப்பியங் களையும் நால்வர் நான்மணி மாலை முதலிய பிரபந்தங்களை

யும் உற்று நோக்குவார் முதலியாரது போலிக்காரணத் தைத் கள்ளி ஓதுக்குவாரென்பது திண்ணம்.

சிவஞான சித்தியாருள் நூல் வழி கூறும் திருப்பாட் டைத் தமக்கு ஆதாரமாகப் பொருள் படுத்துகின்றார் முத லியார். அது தவறென்பதை முன்னே காட்டியேனும். இவண் விரிக்கவேண்டிய தில்லை. அஃதன்றி எல்லா நூல் களும் 'அருமறை ஆகமத்தே அடங்கு' மென்று சொன்ன வாக்கியத்தை எடுத்துக்கொண்டு அதனுல் சிவஞானபோத மும் மொழி பெயர்ப்பே என்கின்றார். அருமறை யாகமங்க ளனைத்திற்கும் மூலநூல்கள் தமிழிலே இருந்தன வென் றும் அவையெல்லாம் உளவாதற்குக் காரணமாகிய ஓங்காரம் தமிழென்பதுங்கூறி அதனுலே சிவஞானபோதம் தமிழி லேயே யுள்ளது என்று பதில் விடுத்தலே முதலியார் கடாவிற்குத் தக்க விடையாகும்.

இறுதியாக, முதலியார் கூறுவதாவது தமிழிலே சிவ ஞானபோத மிருந்திருந்தால் மெய்கண்டார் காலத்திற்கு முன்னேயே அது தமிழ் இலக்கியத்தில் ஒன்றாக விருக்க வேண்டுமென்கிறார். நந்தி பெருமான் கைலையி லுள்ளவர். அவரிடமிருந்து சிவஞானபோதம் மெய்கண்டதேவருக்கு வந்ததென்று விளக்குவான் தாம் எடுத்துக்காட்டிய மேற் போந்த செய்யுட்களை நம்புவாராயின், அந் நூல் நிலவுலகத் திலே தமிழ் நாட்டிலே தமிழிலக்கியத்தோடு ஒன்றுயிருந் தல் வேண்டுமென்று குழறுவதற்கு என்ன நியாயம் புகல்வார்? இதனுல் இவருக்குத் தாமெடுத்துக் காட்டிய செய்யுட்கள் கூறும் வரலாற்றில் நம்பிக்கையில்லை யென் பதே தெளிவாகும்.

தன் கண்ணிலே இருக்கின்ற உத்தரத்தை எடுக்க முயலாமல் அயலார் கண்ணிலேயுள்ள துரும்பைப் பார்த்து இளங்குவதுபோல அறியாமையைப்பற்றி வந்த தனது அபிமானக் கொள்கையைக் கைவிடாது தமிழாராய்ச்சி வல்லோரைத் துரபிமானிகளென்று முதலியார் இகழ்வது மிக அழகாயிருக்கிறது. ஆசிரியர் சிவாக்கிரயோகிகளது வாக்கியத்தையும் அவர்க்குப் பின்வந்த உரையாசிரியர்கள் கூறிய வாக்கியங்களையும் கடவுண்மா முனிவர் கூறியவற்றையும் காலஞ்சென்ற சேந்திநாதய்யர் வசனத்தையும் பிரமாணமாக எடுத்துக்கொண்டு தன் கொள்கையை நாட்ட முயல்கின்றார். அவற்றிற்கெல்லாம் முன்னமே விடைகூறினும். வடமொழியில் சிவஞானபோத மிருத்தலை ஒரு காரணமாகக் கூறுவது எட்டிணையும் பொருந்துவதன்றென்பதையும் முதற்கண் காட்டினும். இதுகாறுங் கூறியவாற்றால் சபாரத்தினமுதலியார் எடுத்துக்கூறிய காரணங்கள் யாவும் அவரது கொள்கையை நிலை நாட்டும் வலியுடையன வல்லவென்பது போதரும். ஈண்டுக் கூறியனயாவும் முதலியாரோடு ஒத்த கொள்கையையுடைய திருவாளர் பொ. முத்தைய பிள்ளை அவர்கள் விடுத்த போலிக் காரணங்களையுங் கண்டித்தொதுக்கப் பயன்படும்.

மெய்கண்டசாத்திரம்

திருவுந்தியார்

வ

திருச்சிற்றம்பலம்

திருவுந்தியார்

அகளமா யாரு மறிவரி தப்பொருள்
சகளமாய் வந்தெதன் றுந்தீபற
காணுகத் தந்தெதன் றுந்தீபற.

பழக்கந் தவிரப் பழகுவ தன்றி
யுழப்புவ தென்பெணே யுந்தீபற
வொருபொரு ளாலேயென் றுந்தீபற.

கண்டதைக் கொண்டு கருமம் முடித்தவர்
பிண்டத்தில் வாராரென் றுந்தீபற
பிறப்பிறப் பில்லையென் றுந்தீபற.

எங்ங னிருந்தெதன் றெவ்வண்ணஞ் சொல்லுகே
ணங்ங னிருந்தெதன் றுந்தீபற
வறியு மறிவதன் றுந்தீபற.

ஏகனு மாகி யநேகனு மானவ
னேகனு மானானென் றுந்தீபற
நம்மையே யாண்டானென் றுந்தீபற.

நன்செய லற்றிக்த காமற்ற பின்னென்னை
நன்செய நூனெயென் றுந்தீபற
தன்னையே தந்தானென் றுந்தீபற.

உள்ள முருகி லுடனுவ ரல்லது
தெள்ள வரியவென் றுந்தீபற
சிற்பரச் செல்வவென் றுந்தீபற. எ

ஆதாரத் தாலே நிராதாரத் தேசென்று
மீதானத் தேசெல்க வுந்தீபற
விமலற் கிடமதென் றுந்தீபற. அ

ஆக்கிலங் கேயுண்டா யல்லதங் கில்லையாய்ப்
பார்க்கிற் *பரமதென் றுந்தீபற
பாவனைக் கெய்தாதென் றுந்தீபற. கூ

அஞ்சேயஞ் சாக வறிவே யறிவாகத்
துஞ்சா துணர்ந்திருந் துந்தீபற
துய்ய பொருளீதென் றுந்தீபற. ஙி

தாக்கியே தாக்காது நின்றதோர் தற்பர
நோக்கிற் குழையுமென் றுந்தீபற
நோக்காம லேக்கவென் றுந்தீபற. ஙிக

மூலை யிருந்தாரை முற்றத்தே விட்டவர்
சாலப் பெரியவென் றுந்தீபற
தவத்திற் றலைவவென் றுந்தீபற. ஙிஉ

ஓட்டற்று நின்ற வுணர்வு பதிமுட்டித்
தேட்டற் றிடஞ்சிவ முந்தீபற
தேடு மிடமதன் றுந்தீபற. ஙிஊ

பற்றை யறுப்பதோர் பற்றினைப் பற்றிலப்
பற்றை யறுப்பவொன் றுந்தீபற
பாவிக்க வாராவென் றுந்தீபற. ஙி

---

* பரமதன்று என்பதும் பாடம்.

கிடந்த கிழவினைக் கிள்ளி யெழுப்பி
யுடந்தை யுடனேநின் றுந்தீபற
வுன்னையே கண்டதென் றுந்தீபற. ๑๕

உழவா துணர்கின்ற யோகிக ளொன்றேடும்
தழுவாம னிற்பதொன் றுந்தீபற
தாழ்மணி நாவேபோ லுந்தீபற. ๑๖

திருச்சிலம் போசை யொலிவழி யேசென்று
நிருத்தனைக் கும்பிடென் றுந்தீபற
நேர்பட வங்கேநின் றுந்தீபற. ๑๗

மருளுந் தெருளு மறக்கு மவன்க
ணருளா மறவாதே யுந்தீபற
வதுவேயிங் குள்ளதென் றுந்தீபற. ๑๘

கருது வதன்முன் கருத்தழியப் பாயு
மொருமகள் கேள்வனென் றுந்தீபற
வுன்ன வரியனென் றுந்தீபற. ๑๙

இரவு பகலில்லா வின்ப வெளியூடே
விரவி விரவின் றுந்தீபற
விளைய விளையநின் றுந்தீபற. ๒๐

சொல்லும் பொருள்களுஞ் சொல்லா தனவுமங்
கல்லனு யானெனன் றுந்தீபற
வம்பிகை பாகனென் றுந்தீபற. ๒๑

காற்றினை மாற்றிக் கருத்தைக் கருத்தினு
ளாற்றுவ தாற்றலென் றுந்தீபற
வல்லாத தல்லலென் றுந்தீபற. ๒๒

கள்ளமோ டில்ல முண்டையார் கலந்திடில்
வெள்ள வெளியாமென் றுந்தீபற
வீடு மெளிதாமென் றுந்தீபற. உந

எட்டுக்கொண் டார்தமைத் தொட்டுக்கொண் டேநின்ரூர்
விட்டா ருலகமென் றுந்தீபற
வீடேவீ டாகுமென் றுந்தீபற. உசு

சித்தமுந் தீய காணமுஞ் சித்திலே
யொத்தமே யொத்ததென் றுந்தீபற
வொவ்வாத தொவ்வாதென் றுந்தீபற. உஞ

உள்ளும் புறம்பு நினைப்பறி னுண்ணுள்ளே
மொள்ளா வழுதாமென் றுந்தீபற
மூளையா தும்பந்தமென் றுந்தீபற. உசு

அவிழ விருக்கு மறிவுட னின்றவர்க்
கவிழுமிவ் வல்லலென் றுந்தீபற
வன்றி யவிழாதென் றுந்தீபற. உஎ

வித்தினைத் தேடி முளையைக்கை விட்டவர்
பித்தேதறி ஞர்களென் றுந்தீபற
பெறுவதங் கென்பெணே யுந்தீபற. உஅ

சொல்லு மிடமன்று சொல்லப் புகுமிட
மெல்லை சிவனுக்கென் றுந்தீபற
வென்ரு ரு மென்செய்கோ மூந்தீபற. உக

வீட்டி லிருக்கிலென் னுட்டிலே போகிலென்
கூட்டில்வாட் சாத்திநின் றுந்தீபற
கூடப் படாததென் றுந்தீபற. கூ

சாவிபோ மற்றச் சமயங்கள் புக்குநின்
ரூவி யரூதேயென் றுந்தீபற
வவ்வுரை கேளாதே யுந்தீபற. ஙக

தூரியங் கடந்தவித் தொண்டர்க்குச் சாக்கிரந்
தூரியமாய் நின்றதென் றுந்தீபற
துறந்தா ரவர்களென் றுந்தீபற. ஙஉ

பெற்றசிற் றின்பமே பேரின்ப மாமங்கே
முற்ற வரும்பரி சுந்தீபற
முளையாது மாயையென் றுந்தீபற. ஙஙஉ

பேரின்ப மான பிரமக் கிழத்தியோ
டோரின்பத் துள்ளாவென் றுந்தீபற
வுன்னையே யாண்டா னென்றுந்தீபற. ஙச

பெண்டிர் பிடிபோல வாண்மக்கள் பேய்போலக்
கண்டாரோ கண்டாரொன் றுந்தீபற
காணுதார் காணுரொன் றுந்தீபற. ஙஞ

நாலாய பூதமு நாதமு மொன்றிடை
னுலா நிலையாமென் றுந்தீபற
நாதற் கிடமதென் றுந்தீபற. ஙட

சென்ற நெறியெல்லாஞ் செந்நெறி யாம்படி
நின்ற பரிசறிந் துந்தீபற
நீசெயல் செய்யாதே யுந்தீபற. ஙண

பொற்கொழுக் கொண்டு வாகுக் குழுவதை
னக்கொழு நீயறிந் துந்தீபற
வறிந்தறி யாவண்ண முந்தீபற. ஙத

அதுவித வென்ன வினைத்தறி வாகு
மதுவித வென்றறிந் துந்தீபற
வவிழ்ந்த சடையாரென் றுந்தீபற. ௬

அவனீவ னெனை தவனருளா லல்ல
திவனவ னுகானென்ன் றுந்தீபற
வென்று மிவனேயென் றுந்தீபற. ௭

முத்தி முதலுக்கே மோகக் கொடிபடர்ந்
தத்தி பழுத்ததென் றுந்தீபற
வப்பழ முண்ணுதே யுந்தீபற. ௮

அண்ட முதலா மினைத்தையு முட்கொண்டு
கொண்டத்தைக் கொள்ளாதே யுந்தீபற
குறைவற்ற செல்வமென் றுந்தீபற. ௯

காயத்துண் மெய்ஞ்ஞானக் கள்ளுண்ண மாட்டாதே
மாயக்கள் ளுண்டாரென் றுந்தீபற
வறட்டுப் பசுக்களென் றுந்தீபற. ௰

சிந்தையி னுள்ளுமென் சென்னியி னுஞ்சேர
வந்தவர் வாழ்கவென் றுந்தீபற
மடவா ளுடனேயென் றுந்தீபற. ௰௧

வைய முழுது மலக்கயங் கண்டிடு
மும்மலவர் தானுனை யுந்தீபற
வுண்மை யுணர்ந்தாரென் றுந்தீபற. ௰௨

மெய்கண்ட சாத்திரம்-2

திருக்களிற்றுப்படியார்

திருக்கடவூர்

உய்யவந்த தேவநாயனார்

திருக்களிற்றுப்படியார்

அம்மையப்ப ரேயுலகுக் கம்மையப்ப ரென்றறிக
வம்மையப்ப ரப்பரிசே வந்தளிப்ப-ரம்மையப்ப
ரெல்லா வுலகுக்கு மப்புறத்தா ரிப்புறத்து
மல்லார்போ னிற்பா ரவர். ௧

தம்மிற் றலைப்பட்டார் பாலே தலைப்பட்டுத்
தம்மிற் றலைப்படுத ருமுணரிற்-றம்மி
னிலைப்படுவ ரோரிருவர் நீக்கிநிலை யாக்கித்
தலைப்படுவர் தாமத் தலை. ௨

என்னறிவு சென்றளவில் யானின் றறிந்தபடி
யென்னறிவி லாறறிக வென்றிருவன்-சொன்னபடி
சொல்லக்கே ளென்றிருவன் சொன்ன னெனக்கதனைச்
சொல்லக்கே ளுனுனக்கச் சொல். ௩

அகளமய மாய்நின்ற வம்பலத்தெந் கூத்தன்
சகளமயம் போலுலகிற் றங்கி-நிகளமா
மாணவ மூல மலமகல வாண்டனன்காண்
மாணவக வென்னுடனாய் வந்து. ௪

ஆகமங்க ளெங்கே யறுசமயந் தானெங்கே
யோகங்க ளெங்கே யுணர்வெங்கே-பாகத்
தருள்வடிவுந் தாணுமா யாண்டலனே லந்தப்
பெருவடிவை யாரறிவார் பேசு. ந

சாத்திரத்தை யோதினர்க்குச் சற்குருவின் றன்வசன
மாத்திரத்தே *வாய்க்குநலம் வந்துறுமே-யார்த்தகடற்
றண்ணீர் குடித்தவர்க்குத் தாகந் தணிந்திடுமோ
தெண்ணீர்மை யாயிதனைச் செப்பு. சு

இன்று பசுவின் மலமன்றே யிவ்வுலகி
னின்ற மலமனைத்து நீக்குவதிங்-கென்று
ளுருவுடையா னன்றே யுருவழியப் பாயு
முருவருள வல்லா னுரை. எ

கண்டத்தைக் கொண்டு கருமமுடித்தவரே
யண்டத்த தப்புறத்த தென்னுதே-யண்டத்தி
னப்புறமு மிப்புறமு மாறிவுஞ் சென்றறியு
மெப்புறமுங் கண்டவர்க ளின்று. அ

அன்றுமுத லாரோனு மாளா யுடனுகிச்
சென்றவர்க்கு மின்னதெனச் சென்றதில்லை-யின்றினை
யெவ்வா றிருந்தவென் றெவ்வண்ணஞ் சொல்லுகே
னவ்வா றிருந்த தது. கூ

ஒன்றுங் குறியே குறியாத லாலதனுக்
கொன்றுங் குறியொன் றிலாமையிலு-லொன்றே
டுவமிக்க லாவதுவுந் தானில்லை யொவ்வாத்
தவமிக்கா ரேயிதற்குச் சான்று. ய

---

* வாய்த்தவளம் என்பதும் பாடம்.

ஆற்ரு லலைகடற்கே பாய்ந்தநீ ரந்நீர்மை
மாற்றியவ் வாற்ரூன் மறித்தாற்போற்-ரூற்றிப்
புலன்களெனப் போதம் புறம்பொழியி னந்த
மலங்களற மாற்றுவிக்கும் வந்து. ஙக

பாலெநெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதுங்
காலனையன் ரேவிக் காராங்கொண்ட-பாலன்
மரணந் தவிர்த்ததுவு மற்றவர்க்கு நந்தங்
காணம்போ லல்லாமை காண். ஙஉ

தூங்கினைதத் தூய சயனத்தே விட்டதற்பின்
ரூங்களே சட்ட வுறங்குவர்க-ளாங்கதுபோ
லைய னருட்கடைக்க ணண்டதற்பி னப்பொருளாய்ப்
பைய விளையுமெனப் பார். ஙஙூ

உள்ள முதலினத்து மொன்ற வொருவவரி
லுள்ள முருகவந் துன்னுடனந்-தெள்ளி
யுணருமவர் தாங்க ளுளராக வென்றும்
புணருவா னில்லாப் பொருள். ஙச

நல்லசிவ தன்மத்தா னல்லசிவ யோகத்தா
னல்லசிவ ஞானத்தா ணுனழியும்-வல்லதனு
லாரோனு மன்புசெயி னங்கே தலைப்படுங்கா
ணுரோனுங் காணு வான். ஙஞ

மெல்வினையே யென்ன வியனுலகு ளோர்க்கரிய
வல்வினையே யென்ன வருமிரண்டுஞ்-சொல்லிற்
சிவதன்ம மாமவற்றிற் சென்றதிலே *செல்வார்
பவகன்ம நீங்கும் பரி. ஙட

---

* செல்வாய் என்பதும் பாடம்.

ஆதியை யர்ச்சித்தற் கங்கமும் மங்கங்கே
தீதி றிறம்பலவுஞ் செய்வனவும்-வேதியனே
நல்வினையா மென்றே நமக்குமெளி தானவற்றை
மெல்வினையே யென்றதுநாம் வேறு. ய எ

வரங்கடருஞ் செய்ய வயிரவர்க்குத் தங்கள்
காங்களிரு லன்றுகறி யாக்க-விரங்காதே
கொல்வினையே செய்யுங் கொடுவினையே யானவற்றை
வல்வினையே யென்றதுநா மற்று. ய அ

செய்யி லுகுத்த திருப்படி மாற்றதனை
யைய விதுவமுது செய்கென்று-பையவிருந்
தூட்டி யறுத்தவற்கே பூட்டி யறுத்தவரை
நாட்டியுரை செய்வதென்றே நாம். ய கூ

பாதக மென்றும் பழியென்றும் பாராதே
தாதையை வேதியனைத் தாளிரண்டுஞ்-சேதிப்பக்
கண்டூசர் தாமாம் பரிச்சளித்தார் கண்டாயே
தண்டூசர் தஞ்செயலாற் ரூன். உ ய

செய்யுஞ் செயலே செயலாகச் சென்றுதமைப்
பையக் கொடுத்தார் பரங்கெட்டா-ரையா
வுழவுந் தனிசு மொருமுகமே யாரு
விழவுண்டோ சொல்லா யிது. உ க

ஆதார யோக நிராதார யோகமென
மீதானத் தெய்தும் விதியிரண்டே-யாதாரத்
தாக்கும் பொருளாலே யாக்கும் பொருளாமொன்
ரூக்காப் பொருளேயொன் ரும். உ உ

ஆக்கி யொருபொருளை யாதாரத் தப்பொருளை
நோக்கி யணுவி லணுவெனிழப்-பார்க்கி
லிவனுகை தாவெனுழிந்திட் டேகமா மேகத்
தவனுகை யாதார மாம். உங

கொண்ட தொருபொருளைக் கோடிபடக் கூறுசெயிற்
கொண்டதுவு மப்பரிசே கூறுபடுங்-கொண்ட
விருபொருளு மன்றியே யின்னதிது வென்ற
தொருபொருளே யாயிருக்கு முற்று. உச

அஞ்செழுத்து மேயம்மை யப்பர்தமைக் காட்டுதலா
லஞ்செழுத்தை யாருகப் பெற்றறிந்த-யஞ்செழுத்தை
யோதப்புக் குள்ள மதியுங் கெடிலுமைகோன்
கேதமற வந்தளிக்குங் கேள். உஞ

ஆக்கப் படாத பொருளாய்யனைத்தினிலுங்
தாக்கித்தா னென்றேறுங் தாக்காத-நீக்கியுட
னிற்கும் பொருளுடனே நிற்கும் பொருளுடனுய்
நிற்கை நிராதார மாம். உசு

காண்கின்ற தோர்பொருளைக் காண்கின்ற யோகிகளே
காண்கின்றூர் காட்சியறக் கண்ணுதலைக்-கர்ண்கின்றூர்
காண்பானுங் காணப் படும்பொருளு மன்றியே
காண்கையினுற் கண்டனரோ காண். உஎ

பேசாமை பெற்றதனிற் பேசாமை கண்டனரைப்
பேசாமை செய்யும் பெரும்பெருமான்-பேசாதே
யெண்ணென்றும் வண்ண மிருக்கின்ற யோகிகள்பா
லுண்ணின்றும் போகா வுளன். உஅ

ஓட்டற்று நின்ற வுணர்வு பதிமுட்டித்
தேட்டற்று நின்ற விடஞ்சிவமா-நாட்டுற்று
நாடும் பொருளனைத்து நாலு விதமாகத்
தேடுமிட மன்று சிவம். உக

பற்றினுட் பற்றைத் துடைப்பதொரு பற்றறிந்து
பற்றைப் பரிந்திருந்து பார்க்கின்ற-பற்றதனைப்
பற்றுவிடி லந்நிலையே தானே பரமாகு
*மற்றமிது சொன்னே னறி. நூ

உணராதே யாது முறங்காதே யுன்னிற்
புணராதே நீபொதுவே நிற்கி-லுணர்வரிய
காலங்கள் செல்லாத காத லுடனிருத்தி
காலங்கண் மூன்றினையுங் கண்டு. நூ

அறிவறிவாய் நிற்கி லறிவுபல வாமென்
றறிவி னறிவவிழ்த்துக் கொண்ட-லறிவினராய்
வாழ்ந்திருப்பர் நீத்தேதாகண் மாணுடரின் மாணவகா
தாழ்ந்தமணி நாவேபோற் றூன். நூ

ஓசையெலா மற்று லொலிக்குந் திருச்சிலம்பி
லோசை வழியேசென் றொத்தொதுங்கி-லோசையினி
லந்தத்தா னத்தா னரிவையுட னம்பலத்தே
வந்தொத்தா னத்தான் மகிழ்ந்து. நூ

†சார்புணர்ந்து சார்பு கெடவொழுகி னென்றமையாற்
‡சார்புணர்த றூனே தியானமுமாஞ்-சார்பு
கெடவொழுகி னல்ல சமாதியுமாங் கேதப்
படவருவ தில்லவினைப் பற்று. நூ

---

* மற்றுமிது சொன்னேன் மதி என்பதும் பாடம்.
† குறள். மெய்யுணர்தல். கூ. ‡ சார்புணர்வு தானே எ-ம் பாடம்.

அன்றிவரு மைம்புலனு நீயு மசையாதே
நின்றபடி யேநிற்க முன்னிற்குஞ்-சென்று
கருதுவதன் முன்னங் கருத்தழியப் பாயு
மொருமகடன் கேள்வ னுனக்கு. கஅ

உண்டெனி லுண்டாகு மில்லாமை யில்லையெனி
னுண்டாகு மானமையி லோரிரண்டா-முண்டில்லை
யென்னு மிவைதவிர்ந்த வின்பத்தை யெய்தும்வகை
யுன்னிலவ னுன்னுடனே யாம். கக

தூல வுடம்பாய மூப்பத்தோர் தத்துவமு
மூல வுடம்பா முதனுண்கு-மேலைச்
சிவமாம் பரிசினையுந் தேர்ந்துணர்ந்தார் சேர்ந்த
பவமாந் துரிசறுப்பார் பார். கஉ

எத்தனையோ தத்துவங்க ளெவ்வெவகோட் பாடையை
வத்தனையுஞ் சென்றங் களவாதே-சித்தமெனுந்
தூதுதனைப் போக்கிப்போய்த் தூக்கற்ற சோதிதனிற்
பாதிதனைக் கும்பிடலாம் பார். கங

சாம்பொழுதி லேதுஞ் சலமில்லை செத்தாற்போ
லாம்பொழுதி லேயடைய வாசையறிற்-சோம்பிதற்குச்
சொல்லுந் துணையாகுஞ் சொல்லாத தூய்நெறிக்கட்
செல்லுந் துணையாகுஞ் சென்று. கச

* வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை யென்றமையால்
வேண்டினஃ தொன்றுமே வேண்டுவது-வேண்டினது
* வேண்டாமை வேண்டவரு மென்றமையால் வேண்டுதிக
வேண்டாமை வேண்டுமவன் பால். சல

---

* திருக்குறள். அவாவறுத்தல். உ

அரண வுணர்வுதனி லவ்வுணர்வை மாற்றிற்
காணமுங் காலுங்கை கூடும்-புராணமது
கூடாமை யுங்கூடுங் கூடுதலுங் கூட்டினுக்கு
வாடாமை யுங்கூடும் வந்து. சக

இன்றிங் கசேதனமா மிவ்வினைக ளோரிரண்டுஞ்
சென்று தொடருமவன் சென்றிடத்தே-யென்றுந்தான்
நீதுறுவ ளுறுற் * சிவபதிதான் கைவிடுமோ
மாதொருகூ றல்லளே மற்று. சஉ

அநாதி சிவனுடைமை யாலெவையு மாங்கே
யநாதியெனப் பெற்ற வணுவை-யநாதியே
யார்த்த துயாகல வம்பிகையோ டெவ்விடத்துங்
காத்த லவன்கடனே காண். சக

தம்மிற் சிவலிங்கங் கண்டதனைத் தாம்வணங்கித்
தம்மன்பான் மஞ்சனநீர் தாமாட்டித்-தம்மையொரு
பூவாக்கிப் பூவழியா மற்கொடுத்துப் பூசித்தா
லோவாமை யன்றே யுளன். சச

தன்னைப் பெறுவதன்மேற் பேறில்லை தானென்றுந்
தன்னைத்தான் பெற்றவன்று ளொன்னிற்-றன்னிலே
யெல்லாந்த னுட்கொண்டு:கொண்டதனைக் கொள்ளாதே
யெல்லாமாய் நிற்கு மிவன். சஎ

துன்பமாம் மெல்லாம் பாவசுளுய்த் தான்றுவளி
லின்பமாந் தன்வசனு யேயிருக்கி-லென்பதனு
னின்வசனு யேயிருக்கி னின்னுடனு நேரிழையா
டன்வசனு யேயிருப்பன் றான். சஅ

---

* சிவாபதி என்பதும் பாடம்.

செத்தாரே கெட்டார் கரணங்கள் சேர்ந்ததனை
டொத்தாரே யோகபர ராணவர்க-ளெத்தாலு
மாராத வக்காணத் தார்ப்புண்டிங் கல்லாதார்
போராமற் செல்வாதன் பின். ௫

கண்ணுங் கருத்துங் கடந்ததொரு பேறெய்தி
கண்ணுங் கருத்துங் களிகூர-நண்ணி
வடமடக்கி நிற்கும் வடவித்தை போல
வுடனடக்கி நிற்பர்கள்கா ணுற்று. ௫அ

வானகமு மண்ணகமு மாய்நிறைந்த வான்பொருளை
யூனகத்தே யுண்ணுமதெ னென்றனையே-லெனகத்து
வாதனையை மாற்றும் வகையதுவே மண்முதலா
வாதனமே யன்றோ வதற்கு. ௫௫

கல்லிற் கமரிற் கதிர்வாளிற் சாணையினில்
வல்லுப் பலகையினில் வாதனையைச்-சொல்லு
மகமார்க்கத் தாலவர்கண் மாற்றினர்கா ணையா
சகமார்க்கத் தாலன்றே தான். ௫ஆ

உள்ளும் புறம்பு நினைப்பொழியி லுன்னிடையே
வள்ள லெழுந்தருளு மாதிலைடங்-கெள்ளி
யறிந்தொழிவா யன்றியே யன்புடையை யாயிற்
செறிந்தொழிவா யேதனுஞ் செய். ௫இ

* கண்ணப்ப னெப்பதோ ரன்பின்மை யென்றமையாற்
கண்ணப்ப னெப்பதோ ரன்பதனைக்-கண்ணப்பர்
தாமறிதல் காளத்தி யாறிதல் லல்லதுமற்
றியாமறியு மன்பன் றது. ௫ஈ

---

* திருவாசகம். திருக்கோத்தும்பி. ௮.

அவிழ்ந்த துணியி லவிழ்ந்த வவிழை
யவிழ்ந்த மனத்தா லவிழ்க்க-வவிழ்ந்தசடை
வேந்தனுக்கி ன்னமுத மாயிற்றே மெய்யன்பிற்
சேந்தனுஞ் செய்த செயல். ஙஉ

சுரந்த திருமுலைக்கே தூய்ய*சிவ ஞானஞ்
சுரந்துண்டார் பிள்ளையெனச் சொல்லச்-சுரந்த
தனமுடையா டென்பாண்டி மாதேவி தாழ்ந்த
மனமுடையா ளன்பிருந்த வாறு. ஙச

அன்பேயென் னன்பேயென் றன்பா லழுதாற்றி
யன்பேயன் பாக வறிவழியு-மன்பன்றித்
தீர்த்தந் தியானஞ் சிவார்ச்சனைகள் செய்வதெல்லாஞ்
சாற்றும் பழமன்றே தான். ஙஞ

எல்லா ரறிவுகளின் ளூற்பரிய மென்னறிவு
சொல்லு மிடத்தளவுஞ் சென்றறிந்தே தன்-வல்லபடி
வாதனையை மாற்றும் வகையிதுவே மற்றவற்று
ளேதமறக் கண்ட திது. ஙஅ

வித்துமத னங்குராமும் போன்றிருக்கு மெய்ஞ்ஞானம்
வித்துமத னங்குராமு மெய்யுணரில்-வித்ததனிற்
காணுமை யாலதனைக் கைவிடுவர் கண்டவர்கள்
பேணுமை யாலற்றூர் பேறு. ஙஎ

ஒன்றன் றிரண்டன் றுளதன் றிலதன்று
நன்றன்று தீதன்று நானென்று-நின்ற
நிலையன்று நீயன்று நின்னறிவு மன்று
தலையன் றடியன்று தான். ஙஅ

---

* திருஞானம் என்பதும் பாடம்.

செய்யாச் செயலெலையவண் செய்யாமற் செய்ததனைச்
செய்யாச் செயலிற் செலுத்தினு-லெய்யாதே
மாணவக வப்பொழுதே வாஞ்சைக் கொடிவளர்க்கு
மாணவழு மற்ற தறி. ஏ

ஏதேனுங் காலமுமா மேதேனுந் தேசமுமா
மேதேனுந் திக்கா சனமுமா-மேதேனுஞ்
செய்தா லொருவலுமாஞ் செய்யாச் செயலதனைச்
செய்யாமற் செய்யும் பொழுது. ஐ

செய்தற் கரிய செயல்பலவுஞ் செய்துபல
ரொய்தற் கரியதனை யெய்தினர்க-ளேயோநாஞ்
செய்யாமை செய்து செயலறுக்க லாயிருக்கச்
செய்யாமை செய்யாத வாறு. ஒ

இப்பொருள்க ளியாதேனு மேதேனு மொன்றுசெய்த
லெப்பொருளுஞ் செய்யா தொழிந்திருத்தன்-மெய்ப்பொருளைக்
கண்டிருத்தல் செய்யாதே கண்ட மனிதரெலா
மூண்டிருப்ப தென்னே வுலை. ஓ

வீட்டிலே சென்று வினையொழிந்து நின்றாலு
நாட்டிலே நல்வினைகள் செய்தாலுங்-கூட்டில்வாட்
சாத்தியே நின்றியலேயேற் றக்கனர் வேள்விசெய்த
மாத்திரமே யாங்கண்டாய் வந்து. ஔ

சிவஞ்முதலே யன்றி முதல்வ லென்றுஞ்
சிவனுடைய தென்னறிவ தென்றுஞ்-சிவனவன
தென்செயல தாகின்ற தென்று மிவையிற்றைத்
தன்செயலாக் கொள்ளாமை தான். க

இன்றிச் சமயத்தி னல்லதுமற் றேறழையுட
னென்றுசொலி மன்றத்து நின்றவரா-ரின்றிங்கே
யங்க முயிர்பெறவே பாடு மடியவரா
ரொங்குமிலை கண்டா யிது. சுருஇ

விரிந்துங் குவிந்தும் விழுங்குவர்கண் மீண்டுந்
தெரிந்துந் தெரியாது நிற்பர்-தெரிந்துந்
தெரியாது நிற்கின்ற சேயிழைபா லென்றும்
பிரியாது நின்றவனைப் பெற்று. சுருஈ

ஆதனுமா தனியு மாய்நிறைந்து நின்றவனைச்
சேதனனைக் கொண்டே தெளிவுற்றுச்-சேதனனைச்
சேதனனி லேசெலுத்திச் சிற்பாத்த ராயிருப்ப
ரோதமறக் கண்டவர்க ளின்று. சுருஉ

தாமடங்க விந்தத் தலமடங்குந் தாபதர்க
டாமுணரி லிந்தத் தலமுணருந்-தாமுனியிற்
பூமடந்தை தங்காள் புகழ்மடந்தை போயகலு
நாமடந்தை நில்லா ணையந்து. சுருஅ

துரியங் கடந்தசுடர்த் தோகையுட னென்றும்
பிரியாதே நிற்கின்ற பெம்மான்-றுரியத்தைச்
சாக்கிரத்தே செய்தருளித் தான்செய்யுந் தன்மைகளு
மாக்குவிப்ப னன்பர்க் கவன். சுருஊ

ஓடஞ் சிவிகை யுலவாக் கிழியடைக்கப்
பாடல் பனைதாளம் பாலெநெய்த-லேடதிர்வெப்
பென்புக் குயிர்கொடுத்த லீங்கிவைதா மோங்குபுகழ்த்
தென்புகலி வேந்தன் செயல். எய

கொல்காரியி னீற்றறையி னஞ்சிற் கொலைதவிர்தல்
கல்லே மிதப்பாய்க் கடனீந்த-னல்ல
மருவார் மறைக்காட்டின் வாசறிறப் பித்த
*நிருவாலூ ராளி செயல். எக

மோக மறுத்திடலு முத்தி கொடுப்பதென
வாகமங்கள் சொன்ன வவர்தம்மைத்-தாகையர்பாற்
றூதாகப் போகவிடும் வன்றொண்டன் றொண்டுதனை
யேதாகச் சொல்வே னியான். எஉ

பாய்பரியோன் றந்த பரமானந் தப்பயனைத்
தூயதிரு வாய்மலராற் சொற்செய்து-மாயக்
கருவாலை யாமறியா வாறுசெய்தான் கண்டாய்
திருவாத வூரானுந் தென். எஙூ

அம்மையிலு மிம்மையிலு மச்சந் தவிர்த்திடியா
ரெம்மையுமா யெங்கு மியங்குதலான்-மெய்ம்மைச்
சிவமோக மேயோக மல்லாத யோக
மவமோக மென்றே யறி. எச

மன்னனரு ளெவ்வண்ண மாளுடர்பான் மாணவக
வண்ண வகைய தானருளு-முன்னி
லடியவரே யெல்லாரு மாங்கவர்தா மொப்பி
லடியவரே யெல்லா மறி. எஞ

உடம்புடைய யோகிகடா மூற்றசிற் றின்ப
மடங்கத்தம் போன்பத் தாக்கத்-தொடங்கி
மூளைப்பதுமொன் றில்லை மூடிவதுமொன் றில்லை
யிளைப்பதுமொன் றில்லை யிவர். எசு

---

* திருவாகீ சன்றன் செயல் என்பதும் பாடம்.

போன்ப மான பிரமக் கிழத்தியுட
னேனின்பத் துள்ளானே யுள்ளபடி-போன்பங்
கண்டவதே கண்டார் கடலுயிர்த்த வின்னமுத
முண்டவதே யுண்டார் சுவை. எஎ

நங்கையினு ணமனைத்துங் செய்தாற்போ னுடனைத்து
நங்கையினுற் செய்தளிக்கு நாயகனு - நங்கையினு
கம்பியாய்த் தானடுவே நாட்டப் பெறுமிதுகா
ணெம்பெருமா னர்த மியல்பு. எஅ

பொன்னிறங் கட்டியினும் பூணினு நின்றுற்போ
லந்நிற மண்ணலு மம்பிகையுங் - செந்நிறத்த
னெந்நிறத்த னாயிருப்ப னெங்கள் சிவபதியு
மந்நிறத்த னையிருப்ப ரங்கு. எக

தாரத்தோ டொன்றுவர் தாரத்தோர் கூறுவர்
தாரத்தோ டெங்குந் தலைநிற்பர் - தாரத்தி
னுதாந்தத் தேயிருப்பர் *நற்றுனத் தேயிருப்பர்
வேதாந்தத் தேயிருப்பர் வேறு. அய

ஒன்றுரைத்த தொன்றுரையாச் சாத்திரங்க ளொன்றுக
நின்றுரைத்து நிச்சயிக்க மாட்டாவா - வின்றுரைக்க
வென்ன லியன்றிடுமோ வென்போல்வா ரேதனுஞ்
சொன்னற்று னேறுமோ சொல். அக

யாதேனுங் காரணத்தா லெவ்வுலகி லெத்திறமு
மாதேயும் பாக னிலச்சினையே - யாதலிற்
பேதமே செய்வா யபேதமே செய்திடுவாய்
பேதாபே தஞ்செய்வாய் பின். அஉ

---

* நாற்றுனத்தே யிருப்பர் என்பதும் பாடம்.

நின்றபடி நின்றவர்கட் கன்றி நிறந்தெரியா
மன்றிணுணின் முடன் மகிழ்ந்தாணுஞ்-சென்றுடனே
யெண்ணுறுமைம் பூதமுத லெட்டுருவாய் நின்முணும்
பெண்ணுறநின் முடும் பிரான். அக

சிவமே சிவமாக யாணினைந்தாற் போலச்
சிவமாகி யேயிருப்ப தன்றிச்-சிவமென்
றுணர்வாரு மங்கே யுணர்வழியச் சென்று
புணர்வாரு முண்டோ புவி. அச

அதுவித வென்று மவணுனே யென்று
மதுநீயே யாகின்ரு யென்று-மதுவானே
னென்றுந் தமையுணர்ந்தா லெல்லா மிாண்டாக
வொன்ருகச் சொல்வதோ வுற்று. அஞ

* ஈருகி யங்கே முதலொன்ரு யீங்கிாண்டாய்
மாருத வெண்வகையாய் மற்றிவற்றின்-வேரு
யுடனை யிருக்கு முருவுடைமை யென்றுங்
கடனை யிருக்கின்ரு ன் காண். அசு

உன்னுதாத் தேகிடந்த கிட முறுவதெல்லா
முன்னுடைய தென்னுநீ யுற்றனையோ - மன்னுயிர்க
ளவ்வகையே காணிங் கழிவதுவு மாவதுவுஞ்
செவ்வகையே நின்றசிவன் பால். அள

அவனே யவனி முதலாயி ணுணு
மவனே யறிவாய்நின் ரு ணு - மவனேகா
ணுணுகிப் பெண்ணு யலியாகி நின்ரு ணுங்
காணுமை நின்ரு ணுங் கண்டு. அஅ

---

* திருஞான. தேவாரம். திருவீழிமிழலை. பண் நட்டபாடை. உ.

இன்றுதா னீயென்னைக் கண்டிருந்துங் கண்டாயோ
வன்றித்தா னுனுன்னைக் கண்டேனே-வென்று
லருமாயை யீன்றவடன் பங்கனையார் காண்பார்
பெருமாயச் சூழல் பிழைத்து. அசு

கடலலைத்தே யாடுதற்குக் கைவந்து நின்றுங்
கடலளக்க வாராதாற் போலப்-படியி
லருத்திசெய்த வன்பரைவந் தாண்டதுவு மெல்லாங்
கருத்துக்குச் சேயனைக் காண். கூ

*சிவனெனவே தேறினன்யா னென்றமையா லின்றுஞ்
சிவனவனி வந்தபடி செப்பி-லவனிதனி
லுப்பெனவே கூர்மை யுருச்செய்யக் கண்டமையா
லப்படியே கண்டா யவன். கூக

அவனிவனுய் நின்ற தவனருளா லல்ல
தவனவனுய் நிற்கின்ற தேழா-யவனிதனிற்
றோன்றுமாப் புல்லாரி தொல்லுலகி லம்மாமா
யீன்றிடுமோ சொல்லா யிது. கூஉ

மூத்தி முதற்கொடிக்கே மோகக் கொடிபடர்ந்
தத்தி பழுத்த தருளென்னுங்-கத்தியினன்
மோகக் கொடியறுக்க முத்திப் பழம்பழுக்கு
மேகக் கொடியெழுங்கா ணின்று. கூங

அகளத்தி லானந்தத் தானந்தி யாயே
சகளத்திற் றையலுடன் றோன்றி-நிகளத்தைப்
போக்குவதுஞ் செய்தான்றன் பொன்னடியென் புன்றலைமே
லாக்குவதுஞ் செய்தா னவன். கூச

---

* திருவாசகம். திருவண்டப்பகுதி. அடி. சுஉ.

குற்றமறுத் தென்னையாட் கொண்டருளித் தொண்டனென
னுற்ற தியானத் துடனுறைவர்-முற்றவரின்
மாட்சியுமாய் நிற்பரியான் மற்றொன்றைக் கண்டிடினக்
காட்சியுமாய் நிற்பார் கலந்து. கூடு

ஆருடையா னெந்தாரு மாருடையா னெயறியுந்
தாருடையான் றொண்டர் தலைக்காவ-லுருந்
திருவியலூ ராருஞ் சிவயோகி யின்றென்
வருவிசையை மாற்றிருன் வந்து. கசு

தூலத் திடித்த பளிங்கின் றூளக்கமெனத்
தூலத்தே நின்று துளங்காமற்-காலத்தாற்
ரூலத்தந் தென்பிறவித் தாள யறவிழித்தார்க்
காளன்றி யென்மா றதற்கு. கள

இக்கணமே முத்தியினை யெய்திடினு மியானினைந்த
வக்கணமே யானந்தந் தந்திடினு-நற்கணத்தார்
நாயகற்கு நாயகிக்கு நானடிமை யெப்பொழுது
மாயிருத்த லன்றியிலே னியான். கஅ

என்னை யுடையவன்வந் தென்னுடனை யென்னளவி
லென்னையுந்தன் ரூளாகக் கொள்ளுதலா-லென்னை
யறியப்பெற் றேனறிந்த வன்பருக்கே யாளாய்ச்
செறியப்பெற் றேன்குழுவிற் சென்று. கக

சிந்தையிலு மென்றன் சிரத்தினிலுஞ் சேரும்வகை
வந்தவனை மண்ணிடைநாம் வாராமற்-றந்தவனை
மாதினுட னெத்திறமும் வாழ்ந்திருக்க வென்பதலா
லேதுசெர்லி வாழ்த்துவே னின்று.

மெய்கண்ட சாத்திரம்-ஈ

சிவஞானபோதம்

திருவெண்ணெய்நல்லூர்

மெய்கண்டதேவர்

உ

திருச்சிற்றம்பலம்

சிறப்புப் பாயிரம்

நேரிசை யாசிரியப்பா

மலர்தலை யுலகின் மாயிரு டுமியப்
பலர்புகழ் ஞாயிறு படரி னல்லதைக்
காண்டல் செல்லாக் கண்போ லீண்டிய
பெரும்பெயர்க் கடவுளிற் கண்டுகண் ணிருடூர்ந
தருந்துயர்க் குரம்பையி ணன்மா நாடி
மயர்வற நந்தி முனிகணத் தளித்த
வுயர்சிவ ஞான போத முரைத்தோன்
பெண்ணணைப் புனல்சூழ் வெண்ணெய்ச் சுவேதவனன்
பொய்கண் டகன்ற மெய்கண்ட தேவன்
பவநனி வன்பகை கடந்த
தவாடி புணைந்த தலைமை யோனே.

உ

திருச்சிற்றம்பலம்

சிவஞான போதம்

மங்கல வாழ்த்து

கல்லா னிழன்மலி
வில்லா ரருளிய
பொல்லா நிணைமலர்
நல்லார் புணைவதே.

அவையடக்கம்

தம்மை யுணர்ந்து தமையுடைய தன்னுணர்வா
லெம்மை யுடைமை யெமையிகழார்—தம்மை
யுணரா ருணரா ருடங்கியைந்து தம்மிற்
புணரானமை கேளாம் புறன்.

க. பொதுவதிகாரம்

க. பிரமாணவியல்

முதற் சூத்திரம்

அவனவ னதுவெனு மவைமூ வினைமையிற்
மேற்றிய திதியே யொடுங்கிமலத் துளதா
மந்த மாதி யென்மனோர் புலவர்

என்பது சூத்திரம்.

வார்த்திகப் பொழிப்பு

கருத்துரை:—என்னுதலிற்றோவெனின், சங்கார காரணனையுள்ள முதலேயே முதலாக வுடைத்து இவ்வுலகம் என்பதுணர்த்துத னுதலிற்று.

உரை வகை:—இதன் பொழிப்பு உரைத்துக் கொள்க.

முதலதிகாரணம்

மேற்கோள்:—ஈண்டு, உளதாய் ஒருவனொருத்தியொன் றென்று சுட்டப்பட்ட பிரபஞ்சம் உற்பத்தி திதி நாசமுடைத் தென்றது.

எது:—தோற்றமும் மீறும் உள்ளதன்பாலே கிடத்தலின்.

உதாரணம்:—

பூதாதி யீறு முதலுக் துணையாகப்
பேதாய் திதியாகும் பெற்றிமையி—னேதாமோ
வொன்றொன்றிற் றோன்றி யுளதா யிறக்கண்டு
மன்றென்று முண்டென்ன வாய்ந்து.

இரண்டாமதிகரணம்

மேற்கோள்:—இனி, ஒடுங்கின சக்காரத்தினல்லது உற்பத்தி யில்லை யென்றது.

ஏது:—இல்லதற்குத் தோற்ற மின்மையின், உள்ளதற்குச் செய் வோரின்றிச் செய்வினை யின்மையின்.

உதாரணம்:—

இலயித்த தன்னிலை யித்தாம லத்தா
லிலயித்த வாறுளதா வேண்டிற்—இலயித்த
தத்திதியி லென்னி னழியா தனைவழிவ
தத்திதியு மாதியுமா மற்கு.

வித்துண்டா மூல முளைத்தவா காரகமா
மத்தன்றி னிற்ற லெவ்வினையால்—வித்தகமாம்
வேட்டுவனு மப்புழுப்போல் வேண்டுருவந் தான்கொடுத்துக்
கூட்டானே மண்போற் குளிர்ந்து.

நோக்காது நோக்கி னொடித்தன்றே காலத்திற்
றாக்காது நின்றுளத்திற் கண்டிறைவ—னேக்காதே
கண்ட னனவுணர்விற் கண்ட கனவுணரக்
கண்டவனி லிற்றின்றாங் கட்டு.

மூன்றாமதிகரணம்

மேற்கோள்:—இனி, சங்காரமே முதலென்றது.

ஏது:—சுட்டுணர்வாகிய பிரபஞ்சம் சுட்டுணர்வின்றி நின்ற சங்கா
ரத்தின் வழியல்லது சுதந்திரமின்றி நிற்றலான்.

உதாரணம்:—

ஒன்றலா வொன்று லுளதாகி நின்றவா
றொன்றலா வொன்றிலவை யீறு த—லொன்றலா
வீறே முதலதனி னீறலா வொன்றுபல
வாறே தொழும்பாகு மங்கு.

இரண்டாஞ் சூத்திரம்

அவையே தானே யாயிரு விணையிற்
போக்கு வரவு புரிய வாணையி
னீக்க மின்றி நிற்கு மன்றே

என்பது சூத்திரம்.

வார்த்திகப் பொழிப்பு

கருத்துரை —என்னுதலிற்றோ வெனின், புனருற்பவம் வருமா
றுணர்த்துத னுதலிற்று.

முதலதிகரணம்

மேற்கோள்:—ஈண்டு, இவ்வான்மாக்கள் பலவும் முதல்வன்றானே
யாய் நிற்குமென்றது.

ஏது:—அத்துவிதமென்ற சொல்லானே ஏகமெனில், ஏகமென்று
சுட்டுவதுண்மையின் அத்துவித மென்ற சொல்லே அந்நிய
நாத்தியை யுணர்த்துமாயிட்டு.

உதாரணம்:—

கட்டு முறுப்புங் காரணமுங் கொண்டுள்ள
மிட்டதொரு போரைழக்க வென்னென்றும்—கொட்டி
யவனுளமா கில்லா னுளமவனு மாட்டா
தவனுளமா யல்லனுமா மங்கு.

ஒன்றென்ற தொன்றேறகா வுணென்றே பதிபசுவா
மொன்றென்ற நீபாசத் தோடுளகா—ணென்றின்று
லக்காரங்க ளின்று மகா வுயிரின்றே
லிக்கிரமத் தென்னு மிருக்கு.

பண்ணையு மோசையும் போலப் பழமதுவு
மெண்ணுஞ் சுவையும்போ லெங்குமா— மண்ணுறு
ளத்துவித மாத லருமறைக ளொன்றென்று
தத்துவித மென்றறையு மாங்கு.

அரக்கொடு சேர்த்தி யணைத்தவக் கற்போ
லுருக்கி யுடங்கியைந்து நின்று—பிரிப்பின்றித்
தானே யுலகாந் தமியே னுளம்புகுதல்
யானே யுலகென்ப னின்று.

இரண்டாமதிகரணம்

மேற்கோள்:—இனி, இவ்வான்மாக்களுக்கு இருவினை முதல்வ
னணையின் வருமென்றது.

ஏது:—ஒரு நகரியைக் காப்பான் பாடிகாவலிட்டாங்கு அவை
அவனதாக்கினை யாகலான்.

உதாரணம்:—

உள்ளதே தோற்ற வுயிரணையு மவ்வுடலி
னுள்ளதா முற்செய்வினை யுள்ளடைவே—வள்ளலவன்
செய்பவர் செய்திப் பயன்விளக்குஞ் செய்யேபோற்
செய்வன் செயலணையா சென்று.

அவ்வினையைச் செய்வதனி லவ்வினைஞர் தாஞ்சென்றங்
கவ்வினையைக் காந்த பசாசம்போ—லவ்வினையைப்
போமா லூட்டும் பிராணி னுகராதோ
லார்தா மறிந்தணைப்பா ராங்கு.

நெல்லிற் குமியு நிகழ்செம்பி னிற்களிம்புஞ்
சொல்லிற் புதிதன்று தொன்மையே—வல்லி
மலகன்ம மன்றுளவாம் வள்ளலாற் பொன்வா
ளலர்சோகஞ் செய்கமலத் தாம்.

மூன்றுமதிகரணம்

மேற்கோள்:—இனி, இவ்வான்மாக்கள் மாறிப் பிறந்து வருமென்றது.

ஏது:—தோற்றமு மீறும் உள்ளதற் கல்லது உளதாதலின்மையான்.

உதாரணம்:—

கண்ட நனவைக் கனவுணர்விற் றான்மறந்து
விண்படர்ந்தத் தூடு விணையிறற்—கண்செவிகெட்
டுள்ளே தோற்ற வுளமணுவாய்ச் சென்றுமனந்
தள்ள விழுங்கருவிற் றான்.

அரவுதன் சோலுரிவு மக்கனவும் வேறு
பாகாயம் போய்வருமப் பண்பும்—பாவிற்
குடாகாய வாகாயக் கூத்தாட்டா மென்ப
தடாதுள்ளம் போமா றது.

நான்காமதிகரணம்

மேற்கோள்:—இனி, நீக்கமின்றி நிற்குமன்றே யென்றது.

ஏது:—அவன் எகாநேக மிரண்டு மின்றிச் சருவவியாபியாய் நிற்றலான்.

உதாரணம்:—

எங்குமுள னென்றளவை யொன்றன் றிரண்டென்னி
லெங்கு முளனன் றெவற்றெறவணு—மங்க
ணவையவ னன்றில்லப் பொன்னெனினீ போலீச
னவையுடைமை யாளாஞ் மங்கு.

மூன்றாஞ் சூத்திரம்

உளதில தென்றலி னனதுட லென்றலி
னீம்புல னெடுக்க மறிதலிற் கண்படி
லுண்டிலினை பின்மையி லுணர்த்த வுணர்தலின்
மாயா வியந்திர தனுவினு ளான்மா

என்பது சூத்திரம்.

வார்த்திகப் பொழிப்பு

கருத்துரை:—என்னுதலிற்றோ வெனின், ஆன்மப் பிரகாச முணர்த்துத னுதலிற்று.

முதலதிகரணம்

மேற்கோளும் ஏதுவும்:—ஈண்டு, *இலதென்றலின் ஆன்மா வுளதென்றது.

பொழிப்புரை:—எவற்றினையும் அன்றன் றெனவிட்டு ஆன்மா இலதென்று நிற்பதுளதாகலின் அதுவே அவ்வான்மாவா மென்றது.

---

* "ஈண்டு மேற்கோளொன்றுயினும் எழுவகை மதங்களை வேறுவேறு மறுக்கும் ஏதுக்க ளெழாகலான், ஆன்மா வுளதென்று

உதாரணம்:—

அன்றன் றெனநின் றனைத்தும்விட் டஞ்செழுத்தாய்
நின்றொன் றுளததுவே நீயனைத்து—நின்றின்று
தர்ப்பணம்போற் காட்டலாற் சார்மாயை நீயல்லை
தற்பாழு மல்லை தனி.

இரண்டாமதிகரணம்

மேற்கோளும் ஏதுவும்:—இனி, எனதுடலென்றவின் ஆன்மா வுள தென்றது.

போழிப்புரை:—என்பதி என்மனை யென்றுற்போல என்கை என்காலென நிற்பதுளதாகலின் அதுவே அவ்வான்மாவா மென்றது.

உதாரணம்:—

எனதென்ற மாட்டி னெனதலா தென்னு
துனதலா துன்கைகால் யாக்கை—யெனதென்று
மென்னறிவ தென்று முரைத்துநீ நிற்றிகா
ணுன்னிலவை வேறு முணர்.

மூன்றாமதிகரணம்

மேற்கோளும் ஏதுவும்:— இனி, அம்புலனறிதலின் ஆன்மாவுள தென்றது.

மேற்கோள் அவற்றொடு தனித்தனி கூட்டியுரைக்கப்பட்டு எழுதி காணமாயிற்று இச்சூத்திரமென் றுணர்க. இச்சூத்திரத்திற்கூறிய ஏதுவே ஏது மேற்கோளு மதுவே யாகலின், ஏனைச் சூத்திரங் களுட் போல வேறை ஏதுக்கூறவேண்டாமையின் இவை ஏது வாமாறும் இவற்றுன் மேற்கோளைச் சாதிக்குமாறும் விளங்க வுணர்த்தி வலியுறுத்துதன் மாத்திரையே இவ்வதிகரணங்களுட் கூறப்படுவதென்க"—என்பது ஸ்ரீ பாஷ்யம்.

பொழிப்புரை :—ஐம்புலனுகிய சத்த பரிச ரூப ரச கந்தங்களை இந்திரியங்கள் ஒன்றறிந்த தொன்றறியாமையின் இவ் வைந்திலுலும் ஐம்பயனு மறிவதுளதாகலின் அதுவே அவ் வான்மாவாமென்றது.

உதாரணம் :—

ஒன்றறிந்த தொன்றறியா தாகி யுடன்மன்னி
யன்றும் புலனுய வஞ்செழுத்தை—யொன்றறித
லுள்ளதே யாகி லதுநீ தனித்தனிகண்
டுள்ளலவை யொன்றல்லை யோர்.

நான்காமதிகரணம்

மேற்கோளும் ஏதுவும் :—இனி, ஒடுக்கமறிதலின் ஆன்மாவுள தென்றது.

பொழிப்புரை :—கனவின்கட் கனவு கண்டாமென்றுங் கண்டில மென்றும் நிற்பதுளதாகலின் அதுவே அவ்வான்மாவா மென்றது.

உதாரணம் :—

அவ்வுடலி னின்றுயிர்ப்ப வைம்பொறிக டாங்கிடப்பச்
செவ்விதி னவ்வுடலிற் சென்றடங்கி—யவ்வுடலின்
வேறுன்று கொண்டு விளையாடி மீண்டதனை
மாறலுட னீயல்லை மற்று.

ஐந்தாமதிகரணம்

மேற்கோளும் ஏதுவும்:—இனிக் கண்படில் உண்டிவினையின்மை யின் ஆன்மாவுள தென்றது.

பொழிப்புரை :—ஒடுங்கினவிடத்து இன்பத்துன்பஞ் சீவனம் பிரகிருதிக் கின்மையின் ஒடுங்காதவிடத்து துன்பஞ் சீவியா நிற்பதுள தாகவின் அதுவே அவ்வான்மாவா மென்றது.

உதாரணம் :—

கண்டறியு மிவ்வுடலே காட்டெடொடுங்கக் காணுதெ
யுண்டிவினை யின்றி யுயிர்த்தலாற்—கண்டறியு
முள்ளம்வே றுண்டா யொடுங்கா துடனண்ணி
லுள்ளதா முண்டிவினை யூன்.

ஆருமதிகரணம்

மேற்கோளுமீ ஏதுவும் :—இனி, உணர்த்தவுணர்தலின் ஆன்மா வுளதென்றது.

பொழிப்புரை:—அவன் அறிந்தாங் கறிவனென் றறிவிக்க வறிந்து உபதேசியாய் நிற்பதுளதாகலின் அதுவே அவ்வான் மாவா மென்றது.

உதாரணம் :—

அறிந்து மறிவமே தாயு மறியா
தறிந்ததையம் விட்டங் கடங்கி—யறிந்த
தெதுவறியு மன்றுகு மெய்கண்டா வெனன்றி
னதுவதுதா னென்னு மகம்.

ஏழாமதிகரணம்

மேற்கோளுமீ ஏதுவும் :—இனி, மாயா வியந்திர தநுவினுள் ஆன்மாவுஉ தென்றது.

வேறும் ஓர் ஏது :—அவைதாம் வெவ்வேறு பெயர்பெற்று நிற்றலான்.

உதாரணம் :—

கலையாதி மண்ணந்தங் காணிலவை மாயை
நிலையாவாங் தீபமே போல—வலையாமன்
ஞானத்தை முன்னுணர்ந்து நாடி லதுதநுவாந்
தானத்தின் வேறுகுந் தான்.

உ. இலக்கணவியல்

நான்காஞ் சூத்திரம்

அந்தக் கரண மவற்றினுன் றன்றனை
சந்தித்த தான்மாச் சகசமலத் துணரா
தமைச்சர சேப்ப்பனின் றஞ்சவத் தைத்தே

என்பது சூத்திரம்.

வார்த்திகப் பொழிப்பு

கருத்துரை :—என் னுதலிற்றே வெனின், இதுவு மது.

முதலதிகரணம்

மேற்கோள் :—ஈண்டு, இவ்வான்மாவாவது அந்தக்கரணங்களா
யுள்ள மனே புத்தி யகங்கார சித்தங்களி லொன்றன் றென்
றது.

ஏது :—அவைதாம் பிரகாசமாய் நின்றே அப்பிரகாசமாய் நிற்ற
லான்.

உதாரணம் :—

மனமாதி யாலுணர்தன் மன்னு புலன்களன்
மனமாதி மன்புலனி னல்லன்—மனமே
லுதித்தெதான்றை யுள்ள முணர்த லதனி
லுதிக்குங் கடற்றிரையை யொத்து.

சிந்தித்தாய்ச் சித்தந் தெளியாதா யாங்காரம்
புந்தியா யாய்ந்து மனமாகிப்—பந்தித்து
வெவ்வேறு தானே துணிந்துள்ள மிவ்வேறு
மவ்வேறும் போதுபோ லாங்கு.

அகார வுகார மகங்காரம் புத்தி
மகார மனஞ்சித்தம் விந்து—பகாதிவத்தை
நாத மூளவடிவா நாடிற் பிரணவமாம்
போதங் கடற்றிரையே போன்று.

எண்ணில வோங்காரத் தீசர் சதாசிவமா
நண்ணிய விந்துவொடு நாதத்துக்—கண்ணிற்
பகரயன்மா லோடு பரம னதிதெய்வ
மகரவுக ரம்மகரத் தாம்.

இரண்டாமதிகரணம்

மேற்கோள் :—இனி, இவ்வான்மாச் சகச மலத்திரை லுணர்வின் றென்றது.

ஏது :—அதுதான் ஞானதிரோதகமாய் மறைத்துக்கொடு நிற்றலான்.

உதாரணம்:—

மாயா தநுவிளக்கா மற்றுள்ளங் காணுமே த
லாயாதா மொன்றை யதுவதுவாய்—வீயாத
வன்னிதனைத் தன்னுண் மறைத்தான்றூங் காட்டம்போற்
றன்னைமல மன்றனைத ருண்.

மூன்றாமதிகரணம்

மேற்கோள் :—இனி, இவ்வான்மாச் சாக்கிரஞ் சொப்பனஞ் சுழுத்தி துரியங் துரியாதீதமாயுள்ள பஞ்சாவத்திதனைய் நிற்கு மென்றது.

ஏது :—அதுதான் மல தொடுபத்தின் மறைந்து அருப சொரூபி யாய் நிற்றலான்.

உதாரணம் :—

ஒன்றணையா மூலத் துயிரணையு நாபியினிற்
சென்றணையுஞ் சித்த மிதயத்து—மன்றவே
யையைந்தா நன்னுதலிற் கண்டத்து வாக்காதி
மெய்யாதி விட்டகன்று வேறு.

இலாடத்தே சாக்கிரத்தை யெய்திய வுள்ள
மிலாடத்தே யைந்தவத்தை யெய்து—மிலாடத்தே
யவ்வவ விந்திரியத் தத்துறைகள் கண்டதுவே
யவ்வவற்றி னீங்கலது வாங்கு.

ஐந்தாஞ் சூத்திரம்

விளம்பிய வுள்ளத்து மெய்வாய் கண்மூக்
களந்தறிந் தறியா வாங்கவை போலத்
தாந்த மூணர்வின் றமியருள்
காந்தங் கண்ட பசாசத் தவையே

என்பது சூத்திரம்.

வார்த்திகப் பொழிப்பு

கருத்துரை :—என்னுதலிற்றே வெனின், இவ்வான்மாக்களிடத்
தித் தமது முதலுபகார மூணர்த்துத னுதலிற்று.

முதலதிகரணம்

மேற்கோள் :—ஈண்டு, ஐயுணர்வுகள் ஆன்மாவா லுணருமென்
றது.

ஏது :—அவற்றினென் ஆன்மா ஒற்றித்துக் காணினல்லது அவை
ஒன்றையும் விடயியாவாகலான்.

உதாரணம் :—

ஐம்பொறியை யாண்டங் கரசா யுளநிற்ப
வைம்பொறிக ளுள்ள மறியாதா—மைம்பொறியிற்
காணுதேற் காணுது காணுமுளக் காணுதேற்
காணுகண் கேளா செவி.

இரண்டாமதிகரணம்

மேற்கோள் :—இனி, இதுவுந் தமது முதலாலே யுணருமென்றது.

ஏது :—இவ்வான்மாத் தன்னுதலி யுணரு மிந்திரியங்களைப் போலத் தானுந் தன்னை யுணராது நிற்றலான்.

உதாரணம் :—

மன்னுசிவன் சந்நிதியின் மற்றுலகஞ் சேட்டித்த
தென்னு மறையி னியன்மறந்தாய்—சொன்னசிவன்
கண்ணே வுளம்வினையாற் கண்டறிந்து நிற்குங்கா
லெனன்னுனென் சிவனசத்தை யின்று.

வெய்யோ னொளியி லொடுங்கி விளங்காது
வெய்யோனை யாகாத மீன்போல—மெய்யவனிற்
கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனைக்
கண்டுடனுய் மன்னுதலைக் காண்.

அருளுண்டா மீசற் கதுசக்தி யன்றே
யருளு மவனன்றி யில்லை—யருளின்
றவனன்றே யில்லை யருட்கண்ணுர் கண்ணுக்
கிவிபோ னிற்குமா னெய்ந்து.

ஆருஞ் சூத்திரம்

உணருரு வசத்தினி னுணரா தின்மைமே
னிருதிற னல்லது சிவசத் தாமென
விரண்டு வகையி னிசைக்குமன் னுலகே
என்பது சூத்திரம்.

வார்த்திகப் பொழிப்பு

கருத்துரை :—சத்து மசத்தும் வரைசெய் துணர்த்துத னுதலிற்று.

முதலதிகரணம்

மேற்கோள் :—ஈண்டு, அறிவினு லறியப்பட்ட சுட்டு தசத்தென்றது.

ஏது :—அவைதாம் பிரகாசமாய் நின்றே அப்பிரகாசமாய் நிற்றலான்.

உதாரணம் :—

அசத்தறியாய் கேணீ யறிவறிந்த வெல்லா
மசத்தாகு மெய்கண்டா னுயின்—அசத்தலாய்
நீரி லெழுத்து நிகழ்கனவும் பேய்த்தேரு
மோரினவை யின்றுமா றெப்பு.

இரண்டாமதிகரணம்

மேற்கோள் :—இனி, இவ்விரண்டு தன்மையுமின்றி வாக்கு மனுதீத கோசரமாய் நின்ற அதுவே சத்தாயுள்ள சிவமென்று உணரற்பாற்று.

ஏது :—பிரகாசத்தினுக்குப் பிரகாசிக்கவேண்டுவ தின்மையானும் அப்பிரகாசத்தினுக்குப் பிரகாச மின்மையானும்.

உதாரணம் :—

எண்ணிய சத்தன் றசத்தன்ரு மென்ரு லென்
கண்ணி யுளதென்றன் மெய்கண்டா—னெண்ணி
யறிய விரண்டா மசத்தாதல் சத்தா
மறிவறியா மெய்சிவன்ரு ளாம்.

உணர்ப வசத்தாத லொன்றுணரா தொன்றை
யுணருமீ தாலுணரா யாயி—லுணருமுனிற்
ரூனிரண்டா மெய்கண்டான் றன்னு லுணர்தலாற்
ரூனிரண்டாய்க் காணுன் றமி.

பாவகமேற் ரூனசத்தாம் பாவநா தீதமெனிற்
பாவகமா மன்றென்னிற் பாழதுவாம்—பாவகத்தைப்
பாவித்த ரூனென்னிற் பாவகமாந் தன்னருளாற்
பாவிப் பதுபாமில் பாழ்.

அறிய விரண்டல்ல ரூங்கறிவு தன்னு
லறியப் படானறிவி லுள்ளா—னறிவுக்குக்
காட்டாகி நின்ரூனைக் கண்ணறியா மெய்யென்னைக்
காட்டா தறிவறிந்து கண்டு.

அதுவென்னு மொன்றன் றதுவன்றி வேறே
யதுவென் றறியறிவு முண்டே—யதுவென்
றறிய விரண்டல்ல ரூங்கறிவு ணிற்ற
லறியுமறி வேசிவமு மாம்.

உ. உண்மை யதிகாரம்

க. சாதனவியல்

ஏழாஞ் சூத்திரம்

யாவையுஞ் சூனியஞ் சத்தெதி ராகலிற்
சத்தே யறியா தசத்தில தறியா
திருதிற னறிவுள திரண்டலா வான்மா

என்பது சூத்திரம்.

வார்த்திகப் பொழிப்பு

கருத்துரை:—என்னுதலிற்றோ வெனின், மேலதற்கோர் புற னடை யுணர்த்துத னுதலிற்று.

முதலதிகரணம்

மேற்கோள்:—ஈண்டுச், சத்தினிடத் தசத்துப் பிராகாயை தென்றது.

ஏது:—மெய்யினிடத்துப் பொய் அப்பிராகாச்மாய் நிற்றலான்.

உதாரணம்:—

அந்தியமி லானைய தற்கொன் றுணர்வின்சூ
மந்தியமி லானைசத்தைக் காண்குவனே—லந்தியமாக்
காணை னவன்முன் கதிர்முன் னிருள்போல
மாணை வசத்தின்மை மற்று.

உதாரணம்:—

தவஞ்செய்தா ரென்றுந் தவலோகஞ் சார்ந்து
பவஞ்செய்து பற்றறுப்பா ராகத்—தவஞ்செய்த
நற்சார்பில் வந்துதித்து ஞானத்தை நண்ணுதலுக்
கற்ரூர்சூழ் சொல்லுமாங் கண்டு.

பசித்துண்டு பின்னும் பசிப்பானை யொக்கு
மிசைத்து வருவினையி லின்ப—மிசைத்த
விருவினை யொப்பி லிறப்பி றவத்தான்
மருவுவரு ஞானத்தை வந்து.

இரண்டாமதிகரணம்

மேற்கோள்:— இனி, இவ்வான்மாக்களுக்குத் தமது முதரூே
குருவுமாயுணர்த்து மென்றது.

ஏது:— அவன் அந்நியமின்றிச் சைதன்னிய சொரூபியாய
நிற்றலான்.

உதாரணம்:—

மெய்ஞ்ஞானந் தானே விளையும்விஞ் ஞானகலர்க்
கஞ்ஞான வச்சகலர்க் கக்குருவாய்—மெய்ஞ்ஞானம்
பின்னுணர்த்து மன்றிப் பிரளயா கலருக்கு
முன்னுணர்த்துந் தான்குருவாய் முன்.

அறிவிக்க வன்றி யறியா வுளங்கள்
செறியுமா முன்பின் குறைக—ணெறியிற்
குறையுடைய சொற்கொள்ளார் கொள்பவத்தின் வீடன்
குறைவில்சகன் சூழ்கொள் பவர்க்கு.

இல்லா முலைப்பாலுங் கண்ணீரு மேந்திழைபா
னல்லா யுளவாமா னீர்நிழல்போ—லில்லா
வருவாகி நின்றரனை யாரறிவார் தானே
யுருவாகித் தோன்றரனே லுற்று.

மூன்றுமதிகரணம்

மேற்கோள்:—இனி, இவ்வான்மாக்கள் ஐயுணர்வுகளான் மயங்கித் தம்மையுணராவென்றது.

ஏது:—அவைதாம் பளிங்கிலிட்ட வண்ணம்போற் காட்டிற்றைக் காட்டி நிற்றலான்.

உதாரணம்:—

பன்னிறங் காட்டும் படிகம்போ லிந்திரியந்
தன்னிறமே காட்டுந் தகைநினைந்து—பன்னிறத்துப்
பொய்ப்புலனே வேறுணர்ந்து பொய்பொய்யா மெய்கண்டான்
மெய்ப்பொருட்குத் தைவமாம் வேறு.

நான்காமதிகரணம்

மேற்கோள்:—இனி, இவ்வான்மாத் தன்னை இந்திரியத்தின் வேறுவான் காணலே தமது முதல் சீபாதத்தை யணையு மென்றது.

ஏது:—ஊசல் கயிறற்றூற் றூய்தலையேயாந் துணையான்.

உதாரணம்:—

சிறைசெய்ய நின்ற செழும்புனலி னுள்ளுஞ்
சிறைசெய் புலனுணர்விற் றீர்ந்து—சிறைவிட்
டுலகடவிற் சென்றடங்கு மாறுபோன் மீளா
துலவிலரன் பாதத்தை யுற்று.

எவ்வுருவுந் தானென்னி லெய்துவா னில்லாதா
ளிவ்வுருவின் வேறே யிறையல்ல—னெவ்வுருவுங்
கண்போ லவயவங்கள் காணுவகக் கண்ணில்லார்
கண்போறே காணக் கழுவ்.

ஐம்பொறியி னல்லையெனு மந்த தாசிவனை
யைம்பொறியை விட்டங்க ணேசகல—னைம்பொறியி
னீங்கானீர்ப் பாசிபோ னீங்குமல கன்மம்வரி
னீங்காணை நீங்கு நினைந்து.

ஒன்பதாஞ் சூத்திரம்

ஊனக்கண் பாச மூனராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி
யுராத்துனைத் தோர்த்தெனப் பாச மொருவத்
தண்ணிழலாம் பதிவிதி யெண்ணுமஞ் செழுத்தே

என்பது சூத்திரம்.

வார்த்திகப் பொழிப்பு

கருத்துரை:—என்னுதலிற்றே வெனின், ஆன்மசுத்தி பண்ணு மா றுணர்த்துத னுதலிற்று.

மூதலதிகரணம்

மேற்கோள்:—ஈண்டு, அம்மூதலை ஞானக் கண்ணிலுலே காண்க வென்றது.

ஏது:—அவன் வாக்குமனுதீத கோசரமாய் நிற்றலான்.

உதாணம்:—

நாடியோ வென்போ நாம்புகீக் கோழையோ
தேடி யெனையறியேன் தேர்ந்தவகை—நாடியான்
றண்ணலே தன்னையுங் கண்டு தமைக்காணு
ரென்ன மெனவறிவா ரின்று.

காட்டிய கண்ணே தனைக்காணு கண்ணுக்குக்
காட்டாய வுள்ளத்தைக் கண்காணு—காட்டிய
வுள்ளந் தலைக்காணு வுள்ளத்தின் கண்ணுய
கள்வன்ரு ணுள்ளத்திற் காண்.

இரண்டாமதிகரணம்

மேற்கோள்:— இனி, * அசத்தாயுள்ள வன்னபேதங்களை! அசத்
தென்றுகாண உளதாய் நிற்பது ஞானசொரூபமென் றுணாற்
பாற்று.

உதாரணம்:—

நிர்க்குணனுய் நின்மலனுய் நித்தியா நந்தனுய்த்
தற்பரமாய் நின்ற தனிமுதல்வ—னற்புதம்போ
லாரு வறிவா யளவிறந்து தோன்ரு னே
வானே முதல்களையின் வந்து.

சுட்டி யுணர்வதனைச் சுட்டி யசத்தென்னச்
சட்ட வினியுளது சத்தேதகாண்—சுட்டி
யுணர்ந்தநீ சத்தல்ல வுண்மையைத் தைவம்
புணர்ந்ததனுற் பொய்விட்டுப் போம்.

கண்டதை யன்றன் றெனவிட்டுக் கண்டசத்தா
யண்டனை யான்மாவி லாய்ந்துணரப்—பண்டனைந்த
ஞானத்தைத் தான்விடுமா றுத்தமனி னெண்கருட
சானத்திற் நீர்விடம்போற் ரூன்.

---

* இதனுள் எது சொற்பல்காமைப் பொருட்டு எகதேச
வுருவகமாக வைத்து உடம்பொடு புணர்த்து ஓதப்பட்டது. ஸ்ரீ
பாஷ்யம் பார்க்க.

மூன்றுமதிகரணம்

மேற்கோள்:—இனி, இவ்விடத்து ஸ்ரீபஞ்சாக்கரத்தை விதிப்படி யுச்சரிக்க வென்றது.

ஏது:—இவ்வான்மாக்களுக்கு ஞானம் பிரகாசித்தும் அஞ்ஞானத்தை வேம்பு தின்ற புழுப்போல நோக்கிற்றை நோக்கி நிற்கு மாகலின் அது நீக்குதற்கெனக் கொள்க.

உதாரணம்:—

அஞ்செழுத்தா லுள்ள மாணுடைமை கண்டாரினை
யஞ்செழுத்தா லர்ச்சித் திதயத்தி—லஞ்செழுத்தாற்
குண்டலியிற் செய்தோமங் கோதண்டஞ் சானிக்கி
லண்டலஞ் சேடனு மங்கு.

இந்துவிற் பாநுவில் ராகுவைக் கண்டாங்குச்
சிந்தையிற் காணிற் சிவன்கண்ணு—முந்தவே
காட்டாக்கிற் ரோன்றிக் கனல்சே ரிரும்பென்ன
வாட்டாரு மோதஞ் செழுத்து.

மண்முத லைமலர் வித்தை கலாரூப
மெண்ணிய வீசர் சதாசிவமு—நண்ணிற்
கலையுருவா நாதமாஞ் சத்தியதன் கண்ணு
நிலையதிலா மச்சிவன்ரு ணேர்.

சு. பயனியல்

பத்தாஞ் சூத்திரம்

அவனே தானே யாகிய வந்நெறி
யேக ஞகி வினைபணி நிற்க
மலமாயை தன்னெடு வல்வினை யின்றே

என்பது சூத்திரம்.

வார்த்திகப் பொழிப்பு

கருத்துரை:—என்னுதவிற்றே வெனின், பாசக்ஷயம் பண்ணுமா றுணர்த்துத னுதவிற்று.

முதலதிகரணம்

மேற்கோள்:—சண்டேப், பரமேசுரன் இவ்வான்மாவாய் நின்ற முறைமையான் அவனிடத்தேதகுதி நிற்க வென்றது.

ஏது:—அவ்வாறு நிற்கவே யானென தென்னுஞ் செருக்கற்று அவனது சீபாதத்தை யணையு மாகலான்.

உதாரணம்:—

கானவனென் றெண்ணினர்க்கு காடுமுள முண்டாத
ருனெனவொன் றின்றியே தானதுவாய்—காணெனவொன்
றில்லென்று தானே யெனுமவனைத் தன்னிடமைவத்
திலென்று தாரு மிறை.

இரண்டாமதிகரணம்

மேற்கோள்:—இனி, இறைபணி வழுவாது நிற்க வென்றது.

ஏது:—அவனருளாலல்லது ஒன்றையுஞ் செய்யாதகவே அஞ் ஞானகன்மம் பிரவேசியாவாகலான்.

உதாரணம்:—

நாமல்ல விந்திரிய நம்வழியி னல்லவழி
நாமல்ல நாமு மாணுடைமை—யாமென்னி
னெத்தநுவி னின்று மிறைபணியார்க் கில்லவினை
மூற்செய்வினை யுந்தருவான் முன்.

சார்ந்தாரைக் காத்த றலைவர் கடனுதல்
சார்ந்தாரைக் காத்துஞ் சலமிலனைச்—சார்ந்தடியார்
தாந்தாளைச் செய்துபிறர் தங்கள்வினை தான்கொடுத்த
லாய்ந்தார்முன் செய்வினையு மாங்கு.

இங்குளி வாங்குங் கலம்போல ஞானிபான்
முன்செய் வினைமாயை மூண்டிடினும்—பின்செய்வினை
மாயையுட னில்லாது மற்றவன்றன் மெய்ப்பொருளே
யாயவத னலுணரு மச்சு.

நண்ணனல் வேவாத நற்றவர் தம்மினும்
பண்ணமர மாச்செலுத்தும் பாகரினு—மெண்ணி
யானடி யோர்பவ ரைம்புலனிற் சென்று
மவர்திற நீங்கா ரதற்கு.

சதசத்தா மெய்கண்டான் சத்தருளிற் காணி
னிதமித்தல் பாசத்தி லின்றிக்—கதமிக்
கெரிகதிரின் முன்னிருள்போ லேலா வசத்தி
னருகணையார் சத்தணைவா ராங்கு.

பதினோராஞ் சூத்திரம்

காணுங் கண்ணுக்குக் காட்டு முளம்போற்
காணு வுள்ளத்தைக் கண்டு காட்டலி
னயரா வன்பி னரன்கழல் செலுமே

என்பது சூத்திரம்.

வார்த்திகப் பொழிப்பு

கருத்துரை:—என்னுதலிற்றே வெனின், பரமேசுரனது சீபாதங்
களை யணையுமா றுணர்த்துத னுதலிற்று.

முதலதிகரணம்

மேற்கோள்:—ஈண்டு, அவனும் அவற்றது விடயத்தை யுணரு
மென்றது.

ஏது:—இவ்வான்மாக்கள் அவனியின்றி யமைந்தொன்றையும்
விடயியாவாகலான்.

உதாரணம்:—

ஐந்தையு மொக்க வுணரா தவற்றுணர்வ
தைந்தையும்போ னின்றுணரு மாகலா—னைந்தினையு
மொன்றென்றுப் பார்த்துணர்வ துள்ளமே யெவ்வுலகு
மொன்றென்றுப் பார்க்கு முணர்ந்து.

ஏகமாய் நின்றே யிணையடிக ளொன்றுணரப்
போகமாய்த் தான்விளைந்த பொற்பிலை—னேகமா
யுள்ளத்தின் கண்ணுளை னுள்குவா ருள்கிற்றை
யுள்ளத்தாற் காணுளே வுற்று.

இரண்டாமதிகரணம்

மேற்கோள்:—இனிப், பத்தியினன் மறவாதேத்த அவனது சீபாதத்தை யணையுமென்றது.

ஏது:—அவன் அந்நியமின்றிச் செய்வோர் செய்திப்பயன் விளைத்து நிற்றலான்.

உதாரணம்:—

அருக்கனேர் நிற்பினு மல்லிருளே காணர்க்
கிருட்கண்ணே பாசத்தார்க் கீச—னருட்கண்ணற்
பாசத்தை நீக்கும் பகலலர்த்துந் தாமரைபோ
னேசத்திற் றன்னுணர்ந்தார் நேர்.

மன்னு மிருளை மதிதுரந்த வாறன்பின்
மன்னு மானை மலந்துரந்து—தன்னின்
வலித்திரும்பைக் காந்தம் வசஞ்செய்வான் செய்தல்
சலிப்பில் விகாரியலன் ரூன்.

நசித்தொன்றி னுள்ள நசித்தலா லொன்ரு
நசித்திலதே லொன்ரு வதில்லை—நசித்துமல
மப்பணைந்த வுப்பி னுளமணைந்து சேடமாங்
கப்பின்ரு மீசன் கழல்.

பொன்வாண்முன் கொண்மூவிற் புக்கொடுங்கிப் போயகலத்
தன்வானே யெங்குமாந் தன்மைபோன்—முன்வாண்
மலத்தின் மறைந்துள்ள மற்றுலகை யுண்ணு
மலத்திரித்துச் செல்லும் வாத்து.

பன்னிரண்டாஞ் சூத்திரம்

செம்மலர் நோன்றூள் சேர லொட்டா
வம்மலங் கழீஇ யன்பதொடு மரீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமு
மாலயற் தானு மானெனத் தொழுமே

என்பது சூத்திரம்.

வார்த்திகப் பொழிப்பு

கருத்துரை:—என்னுதலிற்றே வெனின், அசிந்திதனுய் நின்ற பதியைச் சிந்திதனுகக் கண்டு வழிபடுமா றுணர்த்துத னுதலிற்று.

முதலதிகரணம்

மேற்கோள்:—ஈண்டு, ஆணவ மாயை கான்மிய மென்னு மலங் களைக் களைக வென்றது.

ஏது:—அவைதாம் ஞானத்தையுணர்த்தாது அஞ்ஞானத்தை யுணர் த்து மாகலான்.

உதாரணம்:—

புண்ணிய பாவம் பொருந்துமிக் கான்மியமு
மண்முதன் மாயைகாண் மாயையுங்—கண்ணிய
வஞ்ஞானங் காட்டுமிவ் வாணவமு மிம்மூன்று
மெய்ஞ்ஞானிக் காகா விடு.

இரண்டாமதிகரணம்

மேற்கோள்:—இனிச், சிவபத்தர்களோ டிணங்குக வென்றது.

ஏது:—அல்லாதார் அஞ்ஞானத்தை யுணர்த்துவாகலான்.

உதாரணம்:—

மறப்பித்துத் தம்மை மலங்களின் வீழ்க்குஞ்
சிறப்பிலார் தந்திறத்துச் சேர்வை—யறப்பித்துப்
பத்த ரினத்தணைப் பாலுணர்வி லுலுணரு
மெய்த்தவரை மேவா வினை.

மூன்றுமதிகரணம்

மேற்கோள்:—இனிப், பத்தராது திருவேடத்தையுஞ் சிவாலயத்தையும் பாமேசுரனெனக் கண்டு வழிபடுக வென்றது.

ஏது:—அவன்மற் றிவ்விடங்களிற் பிரகாசமாய் நின்றே அல்லாத விடத் தப்பிரகாசமாய் நிற்றலான்.

உதாரணம்:—

தன்னுணரா வெண்டித் தன்னுருவைத் தான்கொடுத்துத்
தன்னுணரத் தன்னு ளிருத்தலாற்—றன்னுணரு
நேசத்தர் தம்பா னிகழுந் ததிநெய்போற்
பாசத்தாற் கின்றும் பதி.

கண்டதொரு மந்திரத்தாற் காட்டத்தி லங்கிவே
றுண்டல்போ னின்றங் குளதாமாற்—கண்டவுருத்
தானதுவா யன்றுணன் றுனதுவாய்த் தோன்றுமே
தானதுவாய்க் காணுந் தவர்க்கு.

நான்காமதிகரணம்

மேற்கோள்:—இனி, இவ்விடங்களின் வழிபடுக வென்றது.

ஏது:—நரம்பு நாடி முதலானவற்றைத் தானதுவாய் வரும்புருடன் அவையாகாவாறு அப்புருடனு மாகலான்.

உதாரணம்:—

அதுவிது வென்ற தறிவல்லான் கண்டார்க்
கதுவிது வென்றதையு மல்லான்—பொதுவதனி
லத்துவித மாத லகண்டமுந் தானேயே
யத்துவிதி யன்பிற் றெழு.

வினையா லசத்து விளைதலான் ஞானம்
வினைதீரி னன்றி விளையா—வினைதீர
ஞானத்தை நாடித் தொழுவே யதுநிகழு
மானத்தா லன்பிற் றெழு.

தன்னை யறிவித்துத் தான்றானாச் செய்தானைப்
பின்னை மறத்தல் பிழையலது—முன்னவனே
தானேதா னாச்செய்துந் தானேயென்றுந் தானேமே
மானே தொழுகை வலி.

நூற்கு அதிகாரிகள்

சிவமென்னு மந்தரச் சிந்தைதேர் சேர்க்கப்
பவமின்றுங் கண்வா சகத்திற்—சிவமுண்டா
மென்று மிரண்டு மலத்தார்க்கிங் கொண்குருவா
யின்றிந்நூன் மும்மை மலர்க்கு.

சிறப்புப்பாயிரம்

எந்தை சனற்குமா னேத்திக் தொழுவியல்பாய்
நந்தி யுரைத்தருளு ஞான நூல்—சிந்தைசெய்து
தாணுரைத்தான் மெய்கண்டான் ரூணியோர்ர் தாமுணர
வேதுதிருட் டாந்தத்தா லின்று.

சிவஞானசித்தியார்
பரபக்கம்

அருணந்தி சிவாசாரியர்

உ

திருச்சிற்றம்பலம்

சிவஞானசித்தியார்

பரபக்கம்

கணபதி வணக்கம்

ஒருகோட்ட னிருசெவியன் மும்மதத்த
னைவ்வாயைங் காத்த லறு
தருகோட்டம் பிறையிதழித் தாழ்சடையான்
றருமொருவா ரணத்தின் ருள்க
ளருகோட்டன் பொடும்வணங்கி யோவாதே
யிரவுபக லுணர்வோர் சிந்தைத்
திருகோட்டி மயன்றிருமால் செல்வமுமென்
ரூவென்னச் செய்யுந் தேவே.

பாயிரம்

சிவவணக்கம்

ஆதிநடு வந்தமிலா வளவில் சோதி
யருண்ஞான மூர்த்தியா யகில மீன்ற
மாதினையு மொருபாகத் தடக்கி வாழ்ஞர்
மகுடசூ ளாமணியாய் வையம் போற்றப்
பாதிமதி யணிபவளச் சடைக டாழப்
படரொளியம் பலத்தாடும் பரஞர் பாதத்
தாதுமலி தாமரைகள் சிரத்தே வைத்துத்
தளராத பேரன்பு வளரா நிற்பாம்.

சத்திவணக்கம்

சனைரு ளிச்சைசயறி வியற்ற லின்ப
மிலயமொடு போகமதி கார மாகித்
தேசருவ மருவுருவ முருவ மாகித்
தேவியுமாய்த் தேசமொடு செல்வ மாகிப்
பேசரிய வுயிரையெலாம் பெற்று நோக்கிப்
பெரும்போக மவையளித்துப் பிறப்பினையு மொழித்திட்
டாசகலு மடியருளத் தப்பலுட னிருக்கு
மன்னையருட் பாதமலர் சென்னி வைப்பாம். உ

விநாயகர்வணக்கம்

இயம்பநூ லிருந்தமிழின் செய்யு ளாற்ற
லிடையூறு தீர்ந்தினிது முடிய வேண்டித்
தயங்குபே ரொளியாகி யெங்கு நின்ற
தலைவனுர் மலைமாது தன்னே டாடிப்
பயந்தவைங் கரநாற்றோ ளண் முக்கணிரு பாதப்
பரியவொரு நீள்கோட்டுப் பெரிய பண்டிக்
கயந்தனடிக் கமலங்க ணையந்து போற்றிக்
கருத்திலுற விருத்திமிகக் காதல் செய்வாம். ஊ

சுமாரக்கடவுள் வணக்கம்

அருமறையா கமமங்க மருங்கலனு றெரிந்த
வகத்தியனுக் கோத்துரைக்கு மருட்குருவாங் குருவள
திருமறைமா முனிவர்முனி தேவர்கடங் தேவன்
சிவணருள்சேர் திருமதலை தவநிலையோர் தெய்வம்
பொருமறையார் கழல்வீரர் வீரன் கையிற்
பூங்கொண் டோவாது போற்றுமடி யவர்கள்
கருமறையா வகையருளிக் கதிவழங்குங் கந்தன்
கழலிணைக ளெஞ்சிரத்திற் கருத்தில் வைப்பாம். சு

குருவணக்கம்

பண்டையமலர் வண்டோற்றப் பசுந்தேன் ஞானம்
பரிந்தொழுகச் சிவகந்தம் பரந்து சாறக்
கண்டவிரு தயகமல முகைக ளெல்லாங்
கண்டறப்பக் காசினிமேல் வந்தவருட் கதிரோன்
விண்டமலர்ப் பொழில்புடைசூழ் வெண்ணெய் மேவு
மெய்கண்ட தேவன்மிகு சைவ நாதன்
புண்டரிக மலர்தாழுச் சிரத்தே வாழும்
பொற்பாத மெப்போதும் போற்றல் செய்வாம். ச

அவையடக்கம்

மாலயன்மா மறையறியா வாதி மார்க்கம்
வையகத்தா கமவேத மற்று மூள்ள
நூலெலையெலா முணர்ந்திறைவன் கழலே சோக்கு
நோன்மையருந் தவர்முன்யா னுரைசெ யாதே
வேலைபுலா வுந்திரைகள் வீசி யேறி
வேறுழு மொன்றுகி ன்ற தோதை
சாலவுமான் குளப்பழியிற் றக்கி ன்ற
சலமதுதா னெனென்னுந் தன்மைத் தாலா. சு

நிதுவுமதி

நீடுபுக ழுலகுதனின் மைந்தர் மாதர்
நேயமொடு தாம்பயந்த புதல்வர் வாயிற்
கூடுமொழி மழலையொடு குழறி யொன்றுங்
குறிப்பரிதா யிடனுமிகக் குலவிப் போற்றி
மாடுநமக் கிதுவென்று கொண்டு வாழ்வ
ரதுபோல மன்னுதமிழ்ப் புலமை யோரென்
பாடுகவிக் குற்றங்கள் பாரா நிந்நூல்
பாராட்டா நிற்பாருட் பரிசி லிலை. எ

நூற்சிறப்பு

சுத்தவடி வியல்பாக வுடைய சோதி
சொல்லியவா கமங்களெலாஞ் சூழப் போயு
மொத்துமுடி யுங்கூட வோரி டத்தே
யொருபதிக்குப் பலநெறிக ளுளவா றற்போற்
பித்தர்குண மதுபோல வொருகா லுண்டாய்ப்
பின்னொருகா லறிவின்றிப் பேதை யோராய்க்
கத்திடுமான் மாக்களுரைக் கட்டிற் பட்டோர்
கனகவரை குறித்துப்போய்க் கடற்கே வீழ்வார். ஏ

நூற்கதிகாரியும் - நூல்வழியும் - நூற்பெயரும்

போதமிகுத் தோர்தொகுத்த பேதை மைக்கே
யொருந்திமே ரிவர்க்கன்றிக் கதிப்பாற் செல்ல
வேதநெறி யெனுமவர்கட் கறிய முன்னு
ளிறைவனரு ணந்திதனக் கியம்ப நந்தி
கோதிலருட் சனற்குமா ரர்க்குக் கூறக்
குவலயத்தி னவ்வழியெங் குருநாதன் கொண்டு
தீதகல வெமக்களித்த ஞான நூலைத்
தேர்ந்துரைப்பன் சிவஞான சித்தி யென்றே. கூ

நூற்கருத்து

இறைவனையு மிறைவனரு வியம்பு நூலு
மீண்டளவும் பொருளியல்பும் வேண்டுஞ் செய்தி
முறைமைகளும் பெத்தமொடு முத்தி யெல்லா
மூதுவகி லெமக்கியன்ற முயற்சி யாலே
சிறையுலவும் புனனிலவத் தோன்றும் பேய்த்தேர்ச்
செய்கைபோ லுண்டாய பொய்கொண் மார்க்கத்
துறைபலவுங் கடாவிடையாற் சொல்லிப் போக்கித்
துகடீர விந்நூலிற் சொல்ல றிற்பாம். ஐ

நூல்

உலகாயதன்மதம்

இந்திர புரோகித னியம்புமொரு நூலின்
நந்திர மெனுதனி வ்வினைடரு ளிலமமற்
சந்தனை புயத்துமண மாலைக டயங்க
வந்தியுல கத்திலுல காயத னுரைப்பான். க

சண்டளனை காட்சிமன மாதியிரு மூன்றுய்
வெண்டுமனு மானமுத லானபல வெண்டா
பூண்டபொருள் பூதமனை புகழ்கடின சீதந்
தீண்டாரிய வெம்மைசல னத்திலெறு தேசன்மே. உ

சாற்றுபெய ரானனை தலம்புனல் கனற்பின்
காற்றுமென வாமினை கலந்தகுண மோதி
லுற்றமிரு தம்முருவ நற்பரிச மாகும்
போற்றுமினை நித்தவியல் பாமினை புணர்ப்பே. ங

ஒத்துறு புணர்ச்சியி னுருக்கள்பல வாகும்
வைத்துறு கடாதிபல மண்ணின்வரு மர்போற்
புத்திகுண நற்விபாறி புலன்களினை யெல்லா
மித்தில்வரு நீரினி லெழுங்குமிழி யொத்தே. ச

பூதமதி லொன்றுபிரி யப்புல னிறக்கு
நீதியினி னிற்பன கடப்பனவு முற்போ
லோதும்வகை யாகியுறு காரிய முலந்தா
லாதியலை யாமிதனை யறிவதறி வாமே. ஞ

வேறு

இப்படி யன்றிக் கன்ம முயிரிறை வெறுண் டென்று
செப்பிடு மவர்க்கு மண்ணேர் செய்திடுக் குற்ற மென்னே
வொப்பிலா மலடி பெற்ற மகவெரு முயற்கொம் பேறித்
தப்பிலா காயப் பூவைப் பறித்தமை சாற்றி னரோ. க

செய்திடுங் கன்ம மெல்லாஞ் செய்தகர் தம்மைப் பற்றி
யெய்திடு மென்னி னிங்கே மாய்ந்திடு மேய்வ தெங்ஙன்
மெய்தரு தூலங் கெட்டுச் சூக்கமாய் மேவு மென்னி
லெயனே தீபம் போலு லதவெளி யாவ துண்டோ. எ

மாய்ந்துபின் வயலி லிட்ட வைதனை பலிக்கு மாபோ
லெய்ந்திடுங் கன்ம மென்னி லிட்டிடத் திசையு மேனி
யோய்ந்துவந் தவரை யுண்ணப் பண்ணுஞ்சா றுதாத் தற்றால்
வாய்ந்திடும் பலம்வ யிற்றிற் கொண்டிடும் வழக்கு வைத்தாய். அ

உருவமு முணர்வுஞ் செய்தி யொத்திரா கன்ம மென்னின்
மருவுகை விரல்க டம்மின் வளர்வுடன் குறைவுண் டாகி
வருவதிங் கென்ன கன்மஞ் செய்துமுன் மதியி லாதாய்
பெருகுபூ தங்க டம்மின் மிகுகுணப் பெற்றி யாமே. க

இன்பொடு துன்ப மெல்லா மெய்துவ கன்ம மென்னி
னன்புனல் சந்தனாதி நனைகவு மனுக வொண்ணை
மின்பொலி யழலி னேடு மேவவு நன்மை தீமை
யென்செய்த தியம்பி டாய்கீ யிவையெலா மியல்ப தாமே. ஐ

காயத்தின் குணம தன்றிக் கண்டதான் மாவுண் டாயின்
மாயத்திற் சொல்லி டாதே மனமுத லாறி னுக்கு
நேயத்த தாக வேண்டு மன்றியே நிகழ்த்து முண்மை
தேயத்தின் முயற்கொம் பெல்லை செப்புவோர் செய்தி யாமே. ஙக

அருவமே யிறைவ னாகி லறிவின்ரு காட மாகு
முருவமே யென்னிற் பூதக் கூட்டத்தி னிறைவ னாகு
மருவிய விரண்டுங் கூடி நிற்பவ னென்னினன் மண்மே
விருவிசும் பொருசூல் வேந்தி நிற்குமோ வியம்பி டாயே. ஙஉ

பூதத்தே யன்ன மாகி யன்னத்தா லுடம்பு பத்தி
பேதித்தே மனமு மாகிப் பிரிந்தமை திருந்த வின்று
வேதத்தே யுரைத்த வென்றே மேதினி தோர்க்க னல்லாச்
சேதத்தே வீழ்ந்து வேறு தெறியல சேட்கு மாதோ. ஙக

போகத்தை மண்ணிற் கண்டு விட்டிட்போய் விண்ணிற் கொள்ள
மோகத்த ராகி யல்லன் முயன்றுழன் மூட ரல்லாச்
சாகத்திற் றண்ணீர் கண்டு விட்டுப்போய்த் தண்ணீர் சேட்டிச்
சோகித்தே யுண்ண வெண்ணித் துயருறு வார்க ளன்றோ. ஙச

வாழுவே வல்லே வாமி வலத்தைதா வென்று யிர்க்குத்
தோழனே யுன்னை யொப்பார் சொல்லிடி னில்லை கண்டாய்
கோழைமா னுடர்தீ தென்னுங் கொலைகள வாதி கொண்டே
சூழும்வார் குழலார் மொய்ப்பச் சுடரெனத் தோன்றி னையே. ஙஇ

சகல ரயனர் மாலொ டிந்திரன் றெரிவை மார்பாற்
பேசொணா வகைக ளெல்லாஞ் செய்தன்றே பெரியோ ரானை
சாகையா லவர்போ னமு மாகமே வெண்டு மாயின்
வாசமார் குழலா ரோடும் வல்லவா கூடி வாழ்மின். ஙசு

தையலா ரூட லாடத் தாமவ ரோடுங் கூடிச்
செய்யதா மனையை வென்ற சீறடி செம்பஞ் சூட்டி
மெய்யெலாம் பாதஞ் சூடும் வேடத்தார் மெய்யிற் கூடா
மையன்மா னுடர்பொய்ம் மார்க்க வேடத்தே மாய்கின் றீரோ. ஙள

வாசமார் குழலி னுள்கண் மணியல்குற் றடத்தே மூழ்கி
நேசமார் குமுதச் செவ்வா யமுதினை நிறைய வுண்டு
தேசுலா மணிமென் னூண்மேற் சேர்ந்துலீற் றிருந்தி டாதே
மாசுலா மனத்தே ரல்லா மறுமைகொண் டழிவர் மன்னோ. எஎ

மதிநிலா நுதலா ரோடு மணிநிலா முன்றி லேறி
முதிர்நிலா வெறிப்பச் செவ்வா யிளநிலா முகிழ்ப்ப மொய்த்த
கதிர்நிலா வடங்கொள் கொங்கைக் கண்கண்மார் பகல மூழ்கும்
புதுநிலா வியலன் போகம் விடுவர்புன் சமயத் தோரே. எக.

ஊடுவ துணர்வ தூற்ற கலவிமங் கையரை யுள்கி
வாடுவ தடியில் வீழ்ந்து வருந்துவ தருந்த வம்பின்
கூடுவ துணர்வு கெட்டுக் குணமெலாம் வேட்கை யேயாய்
நீடுவ தின்ப முத்தி யித்தினின் றுர்கண் முத்தர். எய

வீட்டினை யுளதென் றோடி மெலிவதிங் கென்னை வீடு
காட்டுவோர் கண்டோர் கேட்டோர் காரியவை யுண்டோற் காட்டீர்
நாட்டினி லாச னுணைக் கிசையமே நடந்து நாளு
மீட்டிய பொருள்கொண் டிங்கே யின்பத்து ளிசைந்தி டாதே. உக

உலகாயதன்மதமறுத்தல்

உன்ன தாவது கண்ட தென்றனை
கொண்ட தென்னுல கத்துநீ
பின்னை யாய்வனக் கின்ற னாளுனைப்
படைத்த தாபொடு தந்தையைக்
கன்ன தேபுரி கால மருயி
நுண்ண வின்றெரு காளை யாய்
மென்ன தேவுள தென்று கொண்டு
விளம்ப மாறு விளம்பிடே. ச

இடித்து மின்னி யிருண்டு மேக
மெழுந்த போதிது பெய்யுமென்
றடுத்த தும்மகில் சந்த முந்தி
யலைத்து வாய்புன லாறுகொண்
டடுத்து வந்திட மால்வ ரைக்க
ணிரைத்து கொண்டல் விளாரித்த தென்று
முடித்த தும்மிவை காட்சி யன்றது
மான மென்ற மொழிந்திடே. ஞ

காண்ட லேயது மான மாவதுங்
காட்சி முன்னதுங் காட்சிபேற்
பூண்ட பூத வுடம்பி னுள்ளெழு
போத மென்கொடு கண்டனை
மாண்ட வாயின் மனங்கொண் ஞான
முணர்ந்த தும்மனு மானமன்
றீண்டு பூத மியைந்த திவ்வுட
லென்ப தென்பிர மாணமே. ட

டழுதி லாமறை கண்ட நூல்பழு
தின்றி யுண்டது பாரின்மேன்
மொழிவர் சோதிட முன்னி யின்னது
முடியு மென்பது முன்னமே
யழிவி லாதது கண்ட னம்மவை
யன்றி யுஞ்சில வாக மங்களி
னெழுதி யோர்படி யென்று கொண்டரு
தியெ டுப்பது மென்னிடே. ச

பூத மானவை தித்த மென்று
டுகன்ற தென்னை யுருக்களா
யாத லொடழி வாகு மாதலி
னைக்கு வோர்வர வேண்டிடுங்
காத லோடு கடாதி மண்கொ
டியற்று வோருளர் கண்டனஞ்
சீத நீரி லெழுந்த கொப்பு
ணிகழ்ந்த மாருதச் செய்கையெ. ஞ

நீரின் வந்தெழு கொப்பு ணீரது
வாயெ ழுந்நிகழ் பூதமு
மோரின் வேறுணர் வாயெ ழுவாவலை
பூத மாகி யுதித்திடுந்
தோரி னூறடை காய்செ றிந்தவை
சோர வேறு சிவப்பெழும்
பாரி னிற்பரி யாது புந்தி
பழிப்பு டம்பு கிடக்கவே. ட

கூறு சேர்வையின் வந்த போதது
கிவப்ப வொங்குண மொன்றுமே
வேறு வேறு புலன்கு ணங்க
ளுடற்கண் வந்து விளைந்ததெ

ஞாறு காயனை கூகிம் வெறுரு
வன்ற ஞிலென நெருக்கிச்
தேறு பூத செயற்கும் வெண்டி
னொருத்த னென்று தெளிந்திடை. எ

ஆண வைம்பொறி யுண்டி த்திரை
யச்ச மைதுன மாதியா
ஞானின் வந்திடு மூன்பி லாதனை
யென்று ரைக்கி ஞுலூாதைதோ வல்
வானின் வந்திடு மாத ராணவ்
யாகி மாஞுட ராதியா
யோனி பன்மையு மின்று பூத
மூடம்ப ணாச்சியொர் தன்மையே. அ

இத்த னண்டகா ருன்றி ரண்டு—
ளொன்ற தாயுட லங்களின்
வந்து டோவணர் விந்து யங்களும்
வன்ன பன்மையு மின்மையாம்
புந்தி போடிய வன்ன போக
நுணங்கள் பூத புணர்ச்சி தான்
றந்தி டாதிணை பேத மாயிட
வந்த வாவினை தந்தவா. ஈ

அறிவ பூதமெ தென்னின் வேறு
புறத்த றிந்தமை கண்டிலஞ்
செறிவு தாணுட லத்தெ னிற்சிவ
மான போதுட நேருமோ
குறிகொ ளாதுடல் வாயு வானது
கூடி டாமையி னென்னினீ
பிறித தாதுயிர் நிற்க ஞான
மூறக்க மென்பிற வாததே. உ

அறிவு டற்குண மென்னி லானைய
தாதி யந்த மெறும்பதா
முறுமு டற்பொரி தான வற்றி
னுதித்தி டும்பொரி தாகவே
றிறவு டற்செறி ஞான முஞ்சிறி
தாயி டும்பரி ணமமும்
பெறுமு டற்சிறி தாவ தென்பொரி
தாவ தென்சில பேசிடே. எக

போத மும்மெலி வாகி யும்மலி
பூத மானவை கூடலிற்
பேத மோடு பெருத்து டற்கள்
சிறுத்த பெற்றிமை யென்றிடி
னேது டற்பொரி தான வுஞ்சிறி
தாயி டாசிறி தானவு
நீதி யிற்பெரி தாயி டாமுன
முள்ள தன்மையி னீடுமே. எஉ

இயல்பு காணிலை யென்னின் வேறிலை
பெண்ணெ ணாணிரு தன்மையாஞ்
செயல்கொ ளாவிவர் செய்தி காரண
மாக வந்து செனிப்பதெ
னியல்ப தாமுடல் பூத காரிய
மாவ தும்மிலை யாகுமான்
மயல தாம்வினை யாலொ ருத்தன்
வருத்த தன்மையின் வந்தே. எஊ

காண மும்மலை யென்ற தென்னை
கடாதி போனிகழ் காரிய
கோ வைகுந்து சமைந்து நின்றிவி
னென்ப தும்மது நேர்கிலேம்

போ ணைந்திடு மொன்றெ டொன்று
பொருந்து மாயின் வருந்தியு
நீ ணைந்தொரு தீயி னின்றது
கண்ட தாயி னிகழ்த்திடே. ஙசு

பூத மேவு புணர்ச்சி யேபுரி
காய காரண மாகுமேற்
காத லாணெடு பெண்ணு மேவு
புணர்ச்சி காரண மாவதெ
ஞதி யேயுல கத்தி லாணெடு
பெண்ணு மாயணை காரிய
காத ணையதி யோடு கூடி
நயந்த காரண மென்பரே. யஅ

கந்தம் வெம்மை கலந்தி டும்புனல்
கன்ம மென்செய்த தென்றனை
சந்த னந்தழல் சாரு நீரிரு
தன்மை யுற்றிடு மாறதோர்
தந்த கன்ம மிரண்ட ணைந்து
தருஞ்சு கத்தொடு துக்கமுஞ்
சிந்தி யாவெழு சீவ ணுற்றிடும்
வேறு டற்கிலை தேறிடே. ஙசு

இன்ப மெய்தி யிருந்து நீவினை
யில்லை யிக்கியல் பென்றிடிற்
றுன்ப மெய்திடு வானென் மற்றிது
சொல்லி டாய்சொல வில்லையேன்
மூன்பு செய்திடு கன்ம மென்றனி
கன்ம மும்முதல் வன்ணநீக்
தன்பி னுறுது விக்குயிர்ப்பு
நுங்க ணைப்பொ டுணர்திலே.

அநாதி யேலைம வின்றெ னின்மல
மாயை கன்ம மணுச்சிவ
னாநாதி கன்ம மணுக்கள் செய்ய
வறிந்து கன்ம மூடற்செயா
வநாதி காரிய மாமூ டல்க
ளசேத னம்மணை யாவறிந்
தநாதி யாதி யமைக்க வேண்டு
மமைப்பி னேது மநாதியே. ய அ

காரணை ணைகா ணங்க ளுக்குயிர்
கண்டி டாமையி னின்றெனிற்
காணு மோகடங் கண்ட கண்ணினைக்
கண்டி ருப்பதுங் கண்ணதே
காரணை ணைதுயிர் காணு மிப்படி
கண்டி டுங்கா ணங்களைக்
காரணை ணைகா ணங்க ளுக்குயி
ருண்மை யாவதுங் கண்டிடே. ய கூ

அங்கி யானது தானு மொன்றை
யணைந்து நின்று நிகழ்ந்திடும்
பங்கி யாதுயிர் தானு மிப்படி
பற்றி யல்லது நின்றிடா
தெங்கு மார்தயி லத்தை யுண்டெழு
தீப மான தெரிந்திடு
மங்க தாமுட னின்று கன்ம
மருந்தி யாருயி ராவதே. உ

அறிவு தானுட லத்தின் வேறது
வாயி றந்து பிறந்திடி
னறிவு முண்புன திங்கு வந்து
மறிந்தி டாமைய தென்னெனி

ணறிவை யோகன வத்து நீஙன
வத்தை யன்றுத ரத்திருந்
தறியு மவ்வறி வோம யக்கறி
வாத லாலறி யாதுகாண். உக

இறந்தி டும்மறி வேபி றந்திடு
மென்ப திங்கிசை யாதெனி
னுறங்கி டும்பொழு தின்றி நின்றுணர்
விங்கு தித்திடு மாறதோர்
பிறந்த விவ்வுடல் போக வேறுடல்
பின்பு வந்தமை பேசிடின்
மறந்தி டுங்கண வத்தில் வேறுடல்
வந்த வாறு மதித்திடே. உஉ

காணம் வாயு விடத்த டங்க
வடங்கி வந்தெழு காரிய
மரண மான விடத்து மற்றிவை
மாய்ந்து பின்பு வருஞ்செயல்
காண மார்கலை கெட்டு திப்ப
விறப்பி னோடு பிறப்பையுந்
தாணி யோர்கண் மதிக்கு ரைப்ப
ருயிர்க்கு மிப்படிச் சாற்றிடே. உங

பூத மானவை காரி யங்கள்
பொலிந்து மன்னி யழிந்திடு
மாத லாலொரு நாத னிங்குள
னென்ற றிந்துகொ ளையனே
பேத மான கடாதி மண்ணினில்
வந்த வாறு பிடித்திடிற்
கோதி லாத குலால னல்வரு
செய்கை யென்று குறிப்பரே. உச

வேத ஞான ஞா ணம்மறி
யாவி ழுப்பொருள் பேதைபாற்
றாத ஞெயிரு கான டந்திடு
தோழன் வண்மைசெய் தொண்டனுக்
காத லாலடி யார்க ளுக்கெளி
யான டிக்கம லங்கணீ
காத லாலணை யீண்டன் வேண்டின
விம்மை யேதருங் கண்டீடே. உஇ

பொன்கு லாவு மணிக்க லன்கண்
மலம்பு கிற்கை பொருந்திடார்
மின்கு லாமிடை யார்க டாழுல
கத்தின் வேட்கை விடும்பொருள்
புன்பு லான்மல மூத்தி ராதி
பொசிந்து நாறு புலைக்கல
மென்கொ லாமிவர் மேல்வி ழுந்த
திவற்றி னென்பெற வெண்ணியே. உஈ

தோலி ரத்த மிறைச்சி மேதை
யெலும்பு மச்சை சுவேதநீ
ராலெ டுத்த மூடைக்கு ரம்பை
யழுக்கி லேடு புழுக்குழா
நூலெ ழுக்கிடு கோழை பீர
ஞரைக்கு மூத்திர பாத்திரஞ்
சேல டர்த்தகண் ணார்க ளென்பது
தேர்ம லத்திர டிண்ணமே. உஎ.

ஆசை யுற்றுழல் சூக ரங்க
ளசுத்த மேவி யலைந்துதின்
றேசு கித்தன வாயி டுஞ்சுக
மேழை யோடுறு மின்பமீ

மாச் தற்ரூளிர் நித்த சுத்த
வளந்த ருஞ்சுக வாரிகா
ணீச னுக்கடி மைத்தி றத்தி
னியைந்து நாம்பெறு மின்பமே. உஅ

ரோத மேகுண மாயி ருந்தவர்
சாந்தி நன்மை குறிக்கொளா
ராக மேயணை வார்க ளாசை
யறுத்த வின்ப மறிந்திடார்
ப்ராவு தேவர் பாவு தூய
பாப ரன்னடி பற்றிநீ
விராவு மெய்யில் விடாத வின்பம்
விளைந்தி டும்மித மெய்மையே. உக

காம மாதி குணங்க ளச்சுக
மென்று கொண்டனை காதலாற்
றூம மாழு லங்கி சித
மலிந்த போது சுகந்தரு
நாம மார்தரு சீதம் வெம்மை
நலிந்த போது தருஞ்சுகஞ்
சேம மாகிய வின்ப மாமிகு
தெய்வ நன்னெறி சேரவே. உய

படிக்கு நூல்கள் சிவாக மம்பசு
பாசமோடு பதித்திற
மெடுத்தி யம்புவ தீசன் வாய்கழ
லேத்தி டுந்தொழி லென்றுமே
விடுத்தி டும்பொருள் காம மாதிகள்
வேண்டி டும்பொரு ளீண்டருள்
முடித்து மும்மலம் விட்டு நின்மல
னேடு நின்றிடன் முத்தியே. உக

பௌத்தரிற் சௌத்திராந்திகன்மதம்

நீதியார் வேத நூலி னெறியலா வறங்க ணுரு
மோதியோ ரைந்து சில மூடையா யுடல மூடிப்
போதிநீண் மரத்தின் மேவு புத்தர்நால் வரினும் வைத்துச்
சாதிதா னிலாத கொள்கைச் சௌத்திராந் திகன்முன் சாற்றும். க

முழுதுணர்ந் துலகிற் கோறன் முதற்செயன் முனிந்து மற்றும்
பழுதிலா வருளி னலே பாதுக்க துக்க ணுகித்
தொழுதுவா னவரும் போற்றத் தொல்பிட கங்க ளான
வழுவிலா கமங்கள் சொன்ன மாதவ னுத ணுவான். உ

மருவிய வளவை காட்சி மானமென் றிரண்டி வற்ணுற்
கருதிய பொருள்கண் ஞான ணேயமாய்க் கணத்திற் பங்கம்
வருமுரு வருவம் வீடு வழுக்கென நான்க தாகித்
தருமவை யொன்றி ரண்டாய்த் தாம்விரிந் தெட்டி ணுமே. ங

உருவியல் பூத மோடங் *குபாதான ரூப மாகு
மருவியல் சித்தங் கன்ம மென்றிரண் டாகும் வீட்டின்
மருவியல் குற்றங் கந்த மெனவழங் கிடும்வ ழக்கி
னிருவிய லுள்ள தோடங் கில்லதா மியம்புங் காலே. ச

மண்புன லனல்கால் பூதம் வலிகந்த மிராத வன்ன
மெண்டரு மூபாதா னந்தா னிவையிரு நான்குங் கூடி
யுண்டொரு பொருளு ரூப முருபுல ணுபாங்க மோடக்
கண்டது சித்தங் கன்ம நன்றுதீ தென்றல் காணே. ஞ

குற்றவீ டாக மாதி குணங்களைக் குறைத்த லாகு
மற்றவீ டுருவ மாதி யையந்தையு மாய்த்த லாகுஞ்
சொற்றருந் தொகைதொ டர்ச்சி மிகுத்துரை யென்று மூன்று
யுற்றிடும் வழக்கி ரண்டு மொன்றுமூன் ருகி யாறும். ட

* உபாதாயம் என்பதும் பாடம்.

ஒருவனென் றோதப் பட்டா னுருவாதி யைந்துங் கூடி
வருபவ னென்று ரைத்த லொகையுண்மை வழக்க தாகு
முருவமங் காதி யாய வைந்தையு மொருவ னின்று
தருவது தொகையி னின்மை வழக்கதாஞ் சாற்றுங் காலே. எ

காரண காரி யத்தின் றொடர்ச்சியாய்க் கால மூன்றின்
சோர்வறத் தோன்றுங் கெட்டு வழியென்கை தொடர்ச்சி யுண்மை
யோர்தரி லொருவ னேயெக் காலத்து முள்ளா னென்று
தேர்வது தொடர்ச்சி யின்மை வழக்கதாஞ் செப்புங் காலே. அ

தோற்றிய பொருள்க ளெல்லா நாசமா மென்று சொல்லு
மாற்றமுன் னுரைத்தன் மற்றை மிகுத்துரை வழக்கி னுண்மை
போற்றிய பொருள்கண் கட்குப் போனது போன்மு திர்ந்து
வேற்றுமைப் பட்ட தென்கை மிகுத்துரை யில்வ ழக்கே. க

உள்வழக் கில்வ ழக்குள் ளதுசார்ந்த வுள்வ ழக்கோ
டுள்ளது சார்ந்த வின்மை வழக்குட னின்மை சார்ந்த
வுள்வழக் கின்மை சார்ந்த வில்வழக் கென்றோ ராறு
*முள்வழக் குளதுண் டென்கை முயற்கோடின் றில்வ ழக்கே. ங

உணர்வுசார்ந் துணர்வு திக்கை யுள்ளது சார்ந்த வுண்மை
யுணர்வுபி னின்று மென்கை யுள்ளது சார்ந்த வின்மை
யுணர்வுமுன் பின்றித் தோன்ற வில்லது சார்ந்த வுண்மை
யுணரினில் லதுசா ரின்மை யுள்ளங்கை யுரோம நாணே. ச

சொன்னநால் வகையு மன்றிச் சொல்லிடும் பொருள்க ளெல்லா
மென்னையோ வறிகி லோம்பித் தேறியோ வான மான்மா
மன்னுகா லங்க டிக்கு மனமொடு வாக்கி றந்திட்
டின்னுமோ ரிறையு முண்டென் றுரைப்பது சித்த மன்றே. ஞ

---

* உள்வழக் குணர்வுண் டென்கை எனபதும் பாடம்.

ஈங்குவான் செயற்கு வாரா தியம்பிய பொருள்க ளெல்லாந்
தாங்குவா னுளதே யென்னிற் றரித்திடா தருவ மாத
லோங்குவா ணிலைசக் காதி யெனிலதங் குருவின் கூட்ட
நீங்குவா னின்றி யெங்கு நின்றதே லெங்கு மின்றே. ஙஉ

போதமுண் டுயிர்கட் கென்னில் வாயிலும் புலனு நூலு
மாய்தலின் றொட்டுத் தீட்டுக் கலப்பினி லறியு மென்னி
லேதமுண் டிரவிற் பச்சை சிவப்புட னேய்ந்த போது
கேதனின் றென்றே வென்னு மையமுன் கிடத்த லாலே. ஙக

அறிந்திடா வாயி லின்றே லறிவின்று மைந்தும் பற்றி
யறிந்திடு மறிவுண் டென்னி லுலந்திறு மறிவொன் றுக
வறிந்திட வேண்டுஞ் சார்பி னறிந்திடு மென்னி லுன்னை
யுறிந்திலோம் புத்த னென்றிங் கழகிது சொன்ன வாறே. ஙஇ

ஞானமே யங்க ளன்றி ஞாதுரு வென்று சொல்ல
வானதிங் கறிவோ வன்றே றன்றெனி லவனி போலுந்
தானதிங் கறிவே யென்னிற் சமைத்திடு நன்ப ருப்புப்
போனகந் தனக்குத் தானே கறியெனப் புகன்ற தாமே. ஙங

உயிரினை யருவ தென்னி னுருவுட னுற்று நில்லா
துயிரினை யுருவ தென்னி லுடலினி லுடல டங்கா
துயிரினை யணுவ தென்னி லுடல்பல தவார மோடு
முயிரினை நித்த மென்னி லுணர்வுத யாந்த மின்றே. ஙச

எங்குமாய் நின்ற தான்மா வென்றிடி னெங்கு மின்றுந்
தங்கிடு நிறைவு தத்தஞ் சரீரங்க டோறு மென்னின்
மங்கிடு முடனீத் தோடே வடிவினி லோரி டத்தே
யங்கது நின்ற தென்னி லடிமுடி யறிவின் றுமே. ஙஅ

சாற்றிய காலங் கிங்குத் தங்கிய வாறி தென்னை
தோற்றுவித் தளித்துப் போக்குந் தொழிலிவை கால மென்னிற்
போற்றிய பொருளிற் புக்குப் பிணங்கிடும் பொருட்பி னின்றுக்
தேற்றிய வில்வ முக்குத் திரவியத் தியல்பி னுமே. ய

எனக்குநீ கிழக்கி ருந்தா யாகின்மேற் கென்று யென்பா
லெனக்குமேற் கிருந்தா னென்பாற் கிழக்கென வியம்புந் திக்குத்
தனக்குநாந் கொள்வ தெப்பாற் சாற்றிடா யில்வ முக்குத்
தனக்குள தாகு முண்மை தானில தாகு மன்றே. உ

உலகினைப் படைத்தா னென்று யொருவனிங் குள்ள தாகி
சினமருவு திரோதாயி கருணை யாகித்
திருந்தியசத் திநிபாதந் நிகழு மன்றே. கூ

ஈடுடசத் திநிபாத நாலு பாத
நன்னுறுவகை யெண்ணரிய ஞான பாதம்
கூடுமவர் தமக்குணர்வாய் நின்ற ஞானக்
கூத்தனெரு மூர்த்திகொடு தறுகி மோக
நீடியசே கூஉசகல நிகழா வாறு
நிறுத்திமல மறுக்குமிது நிலையார் சுத்தம்
சேடில்புகத் தருஞ்சரியை கிரியா யோகக்
கேண்மையரோ லிவையுணர்த்தக் கிளக்கு நூலே. கூக

முத்தி பேதங்களதியல்பு

அரிவைபரின் புறுமுத்தி கந்த மைந்து
மறுமுத்தி நிரிகுணமு மடங்கு முத்தி
விரிவுவினை கெடுமுத்தி மலம்போ முத்தி
விக்கிரக நித்தமுத்தி விவேக முத்தி
பரவுமுயிர் கெடுமுத்தி சித்தி முத்தி
பாடாண முத்தியிவை பதிசேர் முத்தி
நிரிமலமு மகலவுயி ரருண்சேர் முத்தி
நிகழ்முத்தி யிதுமுத்திந் நிறந்த தாமே. கூஉ

உண்மையதிகாரம்

இங்கிவை பொதுவி யம்பு மென்பர்க ளிதன்மே லான்மாத்
தங்கிய வஞ்ச வத்தை தன்னுண்மை யுணர்த்துந் தன்மை
பொங்கொளி ஞான வாய்மை யதன்பயன் புனித ணும
மங்கதி லணைந்தோர் தன்மை யறைகுவ னருளி னலே. க

மூன்றுஞ் சூத்திரம்

ஆன்ம வியல்பு

செறிந்திடு முடலுண் மன்னிச் சேர்புலன் வாயில் பற்றி
யறிந்ததி லழுந்து மொன்று மறிந்திடா தறியுந் தன்மை
பிறிந்தடை யஞ்ச வத்தை பெருகிய மலத்தாற் பேணி
யுறுந்தனி யதீத முண்மை யுயிர்க்கென வுணர்த்து மன்றே. உ

உருவுணர் விலாமை யானு மோரொரு புலன்க ளாக
மருவினின் றறித லானு மறுதிக டம்மின் மன்னித்
தருபய னுகர்த லானு முயிர்சட மாத லானு
மருவினை யுடலு ளாவி யறிவிறு வறியு மன்றே. ங

அறிவெனில் வாயில் வேண்டா வன்றெனி லவைதா மென்னை
யறிவதை யுதவு மென்னி லதீசதன மவைதா மெல்லா
மறிபவ னறியுந் தன்மை யருளுவ னென்னி லான்மா
வறிவில தாகு மீச னதீசதனத் தளித்தி டானே. ஞ

அறிவிறு லறிந்த யாவு மசத்தாத லறிதி யென்று
மறிவிறு லறியொ ணுதே லாவதான் றின்மை தொன்மை
யறிவுதா னென்னை முந்தி யதுவது வாகக் காணு
மறிவுகா ணசத்து மற்ற தறிவினுக் கறியொ ணுதே. ட

எவ்வறி வசத்த றிந்த தெனிலுயி ரறியா தீச
னவ்வறி வறியா னல்ல சதசதன மறியா தாவி
செவ்விய கருவி கூடித் தெரிவரு தருளிற் சேரா
தொவ்விரு வகைய தென்னி லொளியிரு ளொருங்கு ரூதெவ. ச

சத்திது வென்ற சத்துத் தானறி யாத சத்தைச்
சத்தறிந் தகல வேண்டா வசத்திது சத்தி தென்றோர்
சத்திரு ளொளிய லாக்கண் டன்மைய தாம சத்தைச்
சத்துட னின்று நீக்குந் தன்மையாற் சதசத் தாமே. எ

கண்ணெளி விளக்க ளித்துக் காட்டிடு மென்னின் முன்னர்
கண்ணெளி யொன்று மின்றும் விளக்கொளி கலந்த வற்றைக்
கண்ணெளி யகல தின்றே கண்டிடும் வேறு தானே
கண்ணெளி விளக்கின் சோதி கலந்திடு கருத்தொன் றன்றே. அ

ஓரிடத் திருத்தன் மாயா வுருவைநத் திருந்த வொன்றும்
போரிடத் துறைத ருனே பிறக்கறி வாகி நிற்றல்
சோர்வுடைச் சடநி கழ்த்த லெனுமிவை சொல்லார் நல்லோ
சோர்விடத் தணரு முண்மை யொளிதரு முபலம் போலும். க

நான்காஞ் சூத்திரம்

அஞ்சவத்தை

எண்ணவொன் றிலாத தித மெய்திய தூரியத் தொன்று
நண்ணிடுஞ் சுழுத்தி தன்னி னையந்தூள தொன்று பின்னு
மண்ணிநிங் கனவு தன்னி லாதிறழாஞ் சாக்கி ரத்திற்
கண்ணுறு மஞ்சா ரூய கருவிகள் காணுந் தானே. க

இவ்வகை யவத்தை தன்னி லெய்திடுங் காண மெல்லா
மெய்வகை யிடத்தி லுற்று மேவுமா கண்டு மிக்க
பொய்வகைப் பவம கற்றப் புரிந்திடி லருளா லாங்கே
யைவகை யவத்தை யுய்க்கு மறிவினு லறிந்து கொள்ளே. உ

நீக்கமி லதீத மாசு நிறைந்தகே வலமா நீர்மை
சாக்கிரங் கலாதி சேர்ந்த சகலமாந் தன்மை யாகு
மூக்கமி லிாண்டுங் கூடா தொழியவோர் நிலையி னீடுஞ்
சாக்கிர வதீதஞ் சுத்தத் தகைமைய தாகுந் தானே. க

ஐந்தாஞ் சூத்திரம்

உணர்த்து முறைமை

மருவிய பொறியி லொன்று மாபூத மைந்தி லொன்றுங்
கருவிக ணைந்கு நீங்காக் கலாதிக ளைந்துங் கூடி
யொருபுல னுகரு மிந்த வொழுங்கொழிந் துயிரு மொன்றைத்
தெரிவுறு தவறெ ழிந்தத் திரள்களுஞ் செயலி லாவே. க

தனக்கென வறிவி லாதான் ருனிவை யறிந்து சாரான்
றனக்கென வறிவி லாத வாயிரு னறியா சாரத்
தனக்கென வறிவி லாதான் றத்துவ வன்ன ருபன்
றனக்கென வறிவா லுலிச் சகலமு நுகருந் தானே. உ

கண்டறி புலன்கள் காணுங் கருத்திலை லொருத்தன் ஞானங்
கொண்டுள மறியு மென்னிற் கொள்பவன் முதலி யாகு
மண்டிய வுணர்வு யிர்க்கா மன்னிநின் றறியு மென்னி
லுண்டிட வேண்டு வானுக் கொருவண்வே றுண்ட லாமே. கூ

இருணனி யிாவி தான்வந் திரித்தலு மிாவி லெண்ணும்
பொருணிலை கண்டு மாந்தர் பொருந்திடு மாறு போல
மருணிலை யெங்கு நீங்க மகிழ்ந்துயிர் தன்னுண் மன்னு
ருவாயு மொழிய ஞாலத் தறிந்தவா றறியு மன்றே. ச

அறிந்திடு மறுதி வாயி லானவை யவன்ற ஞலே
யறிந்திடு மென்ற மொன்று மறிந்திடா வவைபோ லியாவு
மறிந்திடு மறியுந் தன்மை யறிந்திடா கன்மத் தொன்மை
யறிந்தவை நுகரு மாறு மருளுவ ணமலன் ருனே. ஞ

ஆறாஞ் சூத்திரம்

தன்னுண்மை யுணர்த்துந் தன்மை

காட்டிடுங் காண மொன்று மில்லையேற் காவெண ணைதா
ளட்டிய விவற்றுன் ஞான நலனுகவு மொண்ணு முன்ன
மீட்டிய தவத்தி னுலே யீண்டையரு ளுருவாய் வந்து
கூட்டிடு மிவற்றை நீக்கிக் குணைகழல் குறுகு மாறே. க

ஏழாஞ் சூத்திரம்

ஞான வாய்மை

பன்னிறங் கவருந் தன்மைப் படிகநீ டொளியும் பண்பை
மன்னிலங் கியல்புந் தந்த வளவொளி போல வையந்
தன்னகம் பயிலு நற்சித் சடங்களின் றன்மை தாவா
நன்னலம் பெறநி னறந்த ஞானமே ஞான மென்பர். க

மாயைமா மாயை மாயா வருவிரு வினையின் வாய்மை
யாயவா ருயிரின் மேவு மருளெனி லிருளாய் நிற்கு
மாயையமா மாயை மாயா வருவிரு வினையின் வாய்மை
யாயவா ருயிரின் மேவு மருளெனி லொளியாய் நிற்கும். உ

எட்டாஞ் சூத்திரம்

ஞானவாய்மையின் பயன்

தேசுற மருவு மான்ம தெரிசன மான்ம சுத்தி
வாசிலா வான்ம லாப மாகமூன் ரூகு மூன்றும்
பாசம தகல ஞானம் பற்றறுன் பணியை நீத்த
லேசினே யத்த முந்த லெனுமிவற் றடங்கு மன்றே. ங

தன்னறி வதனு லேதுந் தனக்கறி வில்லை யேனுந்
தன்னறி வாக வெல்லாந் தனித்தனி பயன ருந்துந்
தன்னறி வறியுந் தன்மை தன்னுலே தனைய றிந்தாற்
றன்னையுந் தானே காணுந் தானது வாகி நின்றே. உ

தத்துவ மான வற்றின் றன்மைக ளுணருங் காலை
யுய்த்தறிந் திடவு திப்ப தொளிவளர் ஞான மாகு
மத்தன்மை யறியு மாறு மகன்றிட வதுவா யான்மா
சுத்தமாஞ் சுத்த ஞானத் தொருமுத லுரைன்று மன்றே. ஊ

உறைதரு முணர்வு மன்றி யதன்முத லுள்ள தென்றிங்
கறைவதெ னென்னி லண்ண லருளெனு மதுவே யன்றி
நிறையொளி முதல தன்றி நின்றிடா நிமல னெகு
மிறையவன் முதல வன்ற னிலங்கருள் சத்தி யாமே. எ

சுத்தமாஞ் சத்தி ஞானஞ் சுடராகுஞ் சிவமொ ழிந்தச்
சத்திதா னின்ரு முன்னைத் தகவிலா மலங்கள் வாட்டி
யத்தனை யருளு மெங்கு மடைந்திடு மிருள கற்றி
வைத்திடு மிரவி காட்டும் வளரொளி போன்ம திழ்ந்தே. ஏ

ஒன்பதாஞ் சூத்திரம்

புகலரு மசத்தர் தம்பாற் பொருந்திய வலகை யேபோ
லகிலமு முணரு மீச னருளுயிர் மேவ லாலே
சகலமு நிகழ வேண்டுந் தலைவனைந் தொழிலுந் தானே
யிகலற வியற்றல் வேண்டு மென்றது நன்றி யின்றே. ஐ

இன்றுநோக் குரைந டக்கு மியல்பிலோர்க் கினைய வாய்ந்து
நின்றதோ ரலகை நேர்ந்தா னிகழ்வதெ னதுபோ லுள்ளத்
தொன்றிய வுணர்வு தம்பா லுள்ளது நிகழ்த்து மீசன்
றன்னெழி னடத்து மேனி தனக்கெனக் கொண்டு தானே. ஒ

இந்திலை தன்னின் மன்னி யெப்திநிற் கலாதி போதந்
தன்னள வறிக்கு நிற்குந் தகவிலா மலக்க ணீத்த
வந்திலை காண மாகா வனைபதி லறிவ டங்கி
மன்னிட வியாபி யாய வான்பயன் றோன்று மன்றே. க

அடைபவர் சிவமே யாகு மதுவன்றித் தோன்று மென்ற
கடனதெ னென்னின் முன்னங் கண்டிடார் தம்மைப் பின்னுங்
தொடர்வரு மருளி னலுந் தோன்றுமா காண ராயி
னுடையவ னடிசேர் ஞான மூணர்தலின் றணைத லின்றே. ச

பத்தாஞ் சூத்திரம்

பொற்புறு கருவி யாவும் புணராமே யறிவ லாமைச்
சொற்பெறு மதிதம் வந்து தோன்றுமே தோன்றி னின்ற
சிற்பர மதனு ளுன்னச் செயலறுத் திடவ திக்குந்
தற்பர மாகி நிற்றல் சாக்கிரா தீதந் தானே. க

ஒடுங்கிடா காணந் தாமே யொடுங்குமா றுணர்ந்தொ டுக்க
வொடுங்கிடு மென்னி னின்ற தொடங்கிடா காண மெல்லா
மொடுங்கிட வொடுங்க வுள்ள வணர்வதா னெழுதி யும் வேறு
யொடுங்கிடு னன்றி மற்ற வுண்மைமை யுணரா ணுதே. உ

பற்றிடுங் கருவி யாவும் படர்ந்துண வளிக்குங் காலை
யுற்றறிந் திடுவ தொன்றி னுணர்வினி னுண்மை யாகு
மற்றது பகல்வி ளக்கின் மாய்ந்திட வருவ துண்டேற்
பெற்றிடு மதனை மாயப் பிறப்பினை யறுக்க லாமே. ங

மூந்திய வொருமை யாலே மொழிந்தவை கேட்டல் கேட்டல்
சிந்தனை செய்த லுண்மை தெளிந்திட லதுதா னுக
வந்தவா றெய்த னிட்டை மருவுத லென்று ணான்கா
யிந்தவா றடைந்தோர் முத்தி யெய்திய வியல்பி னோரே. ச

பாசமா ஞானத் தாலும் படர்பசு ஞானத் தாலு
மீசனை யறிய வொண்ணு திறையருண் ஞான நண்ணித்
தேசுறு மதனுன் முன்னைச் சிற்றறி வொழிந்து சேர்ந்து
நேசமோ டுயர்ப ரத்து நிற்பது ஞான நிட்டை. ச

விளம்பிய வகையி னிட்டை மேவிட லரிதென் முன்ன
மளந்தறி வளித்த வற்றி னளவுமற் றவற்றி னூலே
யுளங்கொளுந் தனையு முள்ள படியுமுற் றுணர்ந்து செவ்வே
தளர்ந்திடா துவப்ப மற்றத் தன்மைய தாகுந் தானே. ஈ

பாவிக்கின் மனுதி வேண்டும் பயனிலை கரண நீத்துப்
பாவிப்ப னென்னி லென்ன பழுதுள பாவ கத்தாற்
பாவிக்க வொண்ணு னென்று பாவிப்ப னென்னி னீயென்
பாவிக்க வேண்டா வரண்ட பரனருள் பற்றி னோர்க்கே. எ

ஒன்றிரண் டாகி யொன்றி லொருமையா மிருமை யாகி
யொன்றிலொன் றழியு மொன்று தென்னிலென் ருகா தியி
லென்றிரும் புறழி னின்று முயிரினைந் தொழிலும் வேண்டு [றே.
மொன்றினின் றுணரு முண்மைக் குவமையா னவத்தை டான்

அழிந்திடும் பாச மென்னி னித்தமென் றுரைத்தல் வேண்டா
வழிந்திடா தென்னின் ஞான மடைவது கருதல் வேண்டா
வழிந்திடுஞ் சத்தி நித்த மழிந்திடா வொளியின் முன்ன
ரழிந்திடு மிருளு நாச மடைந்திடா மிடைந்து டாமே. கூ

எல்லையில் பிறவி நல்கு மிருவினை யெரிசேர் வித்தி
லெல்லையி னகலு மேன்ற வுடற்பழ வினைக ளுநட்டந்
தொல்லையின் வருதல் போலத் தோன்றிரு வினைய துண்டே
லல்லலொளி புரையு ஞானத் தழலுற வழிந்து போமே. ஏ

புனிதணமம்

பக்தமா னவைய றுத்துப் பவுதிக முழலு மெல்லச்
சுத்தியா தொழியா நிற்குத் தன்மைபோல் வினையுஞ் சாரு

மந்தமா திகளி லாத வஞ்செழுத் தருளி னேலை
வந்தவா றுணரச்செய் வானை வாதியா பேதி யாலே. ஙக

திருவெழுத் தைந்தி லான்மா திரோதமா சருள்சி வஞ்சூழ்
தானடு நின்ற தொன்றுந் தன்மையுந் தொன்மை யாகி
வருமல மிருதி யாலே வாசியி லாசை யின்றிக்
கருவழிச் சுழலு மாறுங் காதலாக் கோத லாமே. ஙஉ

ஆசுறு திரோத மேவா தகலுமா சிவமுன் னுக
வோசைகொ ளதனி னம்மே லொழித்தரு ளோங்கு மீன
வாசியை யருளு மாயா மற்றது பற்று வற்றங்
ஙீசனி லேக மாகு மிதுதிரு வெழுத்தி னீடே. ஙஊ

பதினொன்றாஞ் சூத்திரம்

அனேகதார்தன்மை

தீங்குறு மாயை சோரா வகைவினை திரிவி தத்தா
னீங்கிட நீங்கா மூல நிறையிரு ளிரிய நேயத்
தோங்குணர் வகத்த டங்கி யுளத்துளின் பொடுக்க நேரே
தூங்குவர் தாங்கி யேகத் தொன்மையிற் றுகளி லோரே. க

குறிப்பிடங் காலந் திக்கா சனங்கொள்கை குலங்கு ணஞ்சீர்
சிறப்புறு வீரதஞ் சீலந் தபஞ்செபந் தியான மெல்லா
மறுத்தற வொழிதல் செய்தன் மருவிடா மன்னு செய்தி
யுறக்குறு பவர்போல் வாய்மை யொழிந்தவை யொழிந்து போமே

அகம்புற மென்றி ரண்டா லச்சனை புரியு மிந்தச்
சகந்தனி லிரண்டு மின்றித் தமோமய மாகி யெல்லா
நிகழ்ந்திட மகிழ்ந்து வாழு நீர்மையார் போல ஞானந்
திகழ்ந்தகம் புறமெ னுத செம்மையார் நன்மை யாமே. கக

அண்டமே விடவ னைத்து மனைத்தையு மண்ட மேவிக்
கொண்டல்போ லெவையு ஞானங் குறைவிலா நிறைத லாலே
கண்டதோர் பொருளை யந்தக் கருத்திறற் காணிற் றூனே
யண்டநா யகனு மேனி யர்னதே லைய மின்றே. ச

மண்முதல் கரண மெல்லா மறுவசத் தாக்கி ஞானக்
கண்ணினி லூன்றி யந்தக் கருத்திறு லெவையு நோக்கி
யெண்ணியஞ் செழுத்து மாறி யிறைநிறை யுணர்ந்து போற்றல்
புண்ணீயன் றனக்கு ஞான பூசையாய்ப் புகலு மன்றே. ஞ

பன்னிரண்டாஞ் சூத்திரம்

தொண்டர்க ளிடத்தும் வாழ்நர் தொழுந்திரு மேனி தானு
மண்டருங் கண்டி லாத வண்ணமே யெனவ ணங்கி
வெண்டரு ளங்கள் சிந்த விழிமொழி குழற மெய்யே
கண்டுகொண் டிருப்பர் ஞானக் கடலமு தருந்தி னோரே. க

நிலவுல காய தாதி நிகழ்சிவாத் துவிதாந் தத்துக்
குலவின ரவ ளாவாக் கொள்கைய தாகி வேதத்
தலைதரு பொருளா யின்பாய்த் தாவில்சற் காரி யத்தாய்
மலைவறு முணர்வாற் பெத்த முத்திகண் மதித்தா மன்றே. உ

திருவருள் கொடுத்து மற்றிச் சிவப்பிர காச நன்னூல்
விரிவது தெளியு மாற்றால் விளம்பிய வேது நோக்கிப்
பெருகிய வுவமை நான்கின் பெற்றியி னிறுவிப் பின்மூன்
றருமலை வொழியக் கொள்வோன் றன்மையிற் சாற்ற லாமே. ங

சிவப்பிரகாசம்

முற்றிற்று

மெய்கண்ட சாத்திரம் -அ.

திருவருட்பயன்

உமாபதி சிவாசாரியர்

திருச்சிற்றம்பலம்

உமாபதி சிவாசாரியர்

அருளிச்செய்த

திருவருட்பயன்

கணபதி வணக்கம்

நற்குஞ் சாக்கன்று நண்ணிற் கலைஞானம்
கற்குஞ் சாக்கன்று காண்.

க-வது. பதிமுதுநிலை

அகர வுயிர்போ லறிவாகி யெங்கு
நிகரிலை நிற்கு நிறைந்து. அ

தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்சத்தி
பின்னமிலா னெங்கள் பிரான். உ

பெருமைக்கு நுண்மைக்கும் போருட்கும் பேற்றி
னருமைக்கு மொப்பின்மை யான். ங

ஆக்கி யெவையு மளித்த சுடனடக்கப்
போக்குமவன் போகாப் புகல். ச

அருவு முருவ மறிஞர்க் கறிவா
முருவ முடையா னினன். ஞ

பல்லா ருயிருணரும் பான்மையென மேலொருவ
னில்லாதா னெங்க ளிறை. ச

ஆரு வறிவா யகலா னடியவர்க்கு
வாரூடர் காணுத மன். எ

எங்கு மெவையு மெரியுறுநீர் போலேகந்
தங்குமவன் ரூனே தனி. அ

நலமில னண்ணூர்க்கு நண்ணினர்க்கு நல்லன்
சலமிலன் பேச்சங் கரன். கூ

உன்னுமுள தையமிலதுணர்வா யோவாது
மன்னுபவந் தீர்க்கு மருந்து. ஐ

உ-வது. உயிரவைநிலை

பிறந்தநாண் மேலும் பிறக்குநாள் போலும்
துறந்தோர் துறப்போர் தொகை. க

திரிமலத்தா லொன்றதனிற் சென்ரூர்க ளன்றி
யொருமலத்தா ராயு முளர். உ

மூன்றுதிறத் துள்ளாரு மூலமலத் துள்ளார்க
டோன்றலர்தொத் துள்ளார் துணை. ங

கண்டவற்றை நாளுங் கனவிற் கலங்கியிடுந்
தின்டிறலுக் கென்றே செயல். ச

பொறியின்றி யொன்றும் புணராத புந்திக்
கறிவென்ற பேர்நன் றற. ஞ

ஒளியு மிருளு முலகு மலர்கட்
டெளிவி லெனிலென் செய. ட

சத்தசத்தைதச் சாரா தசத்தறியா தக்கணிலை
யுய்த்தல்சத சத்தா மூயிர். எ

இருளி லிருளாகி யெல்லிடத்தி னெல்லாம்
பொருள்க ளிலதோதா புவி. அ

ஊமன்கண் போல வொளியு மிகவிருளே
யாமன்கண் காணு தலை. க

அன்றளவு மாற்றுமூயி ராங்தோ வருடெளிவ
தென்றளவொன் றில்லா விடர். ங

ரு-வது. இருண்மலநிலை

தன்றும் பவத்துயரு மின்பந் தலைப்பொருளு
மின்றென்ப தெவ்வாறு மில். ச

இருளான தன்றி யிலதெலையு மேகப்
பொருளாகி நிற்கும் பொருள். ஞ

ஒருபொருளுங் காட்டா திருளுருவங் காட்டு
மிருபொருளுங் காட்டா திது. ட

அன்றளவி யுள்ளொளியோ டாவி யிடையடக்கி
யின்றளவு நின்ற திருள். ண

பலரைப் புணர்ந்துமிருட் பாலைக்குண் டென்றுங்
கணவர்க்குந் தோன்றுத கற்பு. த

பன்மொழிக ளென்னுணரும் பான்மை தெரியாத
தன்மையிரு ளாக்தக் தது. ந

இருளின்றேற் றுன்பே னுயிரியல்பேற் போக்கும்
பொருளுண்டே லொன்றுகப் போம். ப

ஆசாதி யேலணவ காரண்மென் மூத்திநிலை
பேசா தகவும் பிணி. அ

ஒன்று மிகினு மொளிகவா தேலுள்ள
மென்று மகலா திருள். கூ

விடிவா மளவும் விளக்கனைய மாயை
வடிவாதி கன்மத்து வந்து. ஙி

ச-வது. அருளதுநிலை

அருளிற் பெரிய தகிலத்து வேண்டும்
பொருளிற் றலையிலது போல். க

பெருக்க நுகர்வினை பேரொளியா யெங்கு
மருக்கனென நிற்கு மருள். உ

ஊனறியா தொன்று முயிரறியா தொன்று மிலை
தானறியா தாரறிவார் தான். ங

பாலாழி மீளுலும் பான்மைத் தருளுயிர்கண்
மாலாழி யாரு மறித்து. ச

அணுகு தணையறியா வாற்ரூனி லுந்து
முணர்வை யுணரா வுயிர். ஞ

தலையை யறியாது தாமே திரிவோர்
புலையை யுணரா புவி. ட

மலைகெடுத்தோர் மண்கெடுத்தோர் வான்கெடுத்தோர் ஞானம்
தலைகெடுத்தோர் தற்கேடர் தாம். ண

வெள்ளத்து ணைவற்றி யெங்கும் விடிந்திருளாங்
கள்ளத் திறைவர் கடன். அ

பாப்பமைந்து கேண்மினிது பார்க்கனன்மேற் பூனைரு
காப்பருந்த காடுங் கடன். ஈ

இற்றை வரையினைந்து மேதும் பழக்கமிலா
வெற்றியிர்க்கு வீடு மிகை. ஐ

ரு-வது. அருளுருநிலை

அறியாமை யுண்ணின் றளித்தமே காணுங்
குறியாகி நீங்காத கோ. க

அகத்துறுநோய்க் குள்ளின ரன்றி யதனைச்
சகத்தவருங் காண்பரோ தான். உ

அருளா வகையா லருள்புரிய வந்த
பொருளா ரறிவார் புவி. ங

பொய்யிருண்ட சிந்தைப் பொறியிலார் போதமா
மெய்யிரண்டுங் காணுர் மற்க. ச

பார்வையென மாக்களைப் பற்றிப் பிடித்தற்காம்
போர்வையெனக் காணுர் புவி. ஏ

எமக்கெ னெவனுக் கெவைதரியு மவ்வத்
தமக்கவனே வேண்டதத் தவிர். ஞ

விடநகுல மேவினுமெய்ப் பாவகனின் மீளுன்
கடனிலிருள் போவதிவன் கண். ட

அகலத் தருமருளை யாக்கும் வினைநீக்குஞ்
சகலர்க்கு வந்தருளுந் தான். அ

ஆரறிவா ரெல்லா மகன்ற நெறியருளும்
போரறிவான் வாராத பின். க

ஞான மிவ்வெழிய நண்ணியிடு நற்கலனல்
பாணு வொழியப் படின். ய

சூ-வது. அறியுநெறி

கீடு மிருவினையு நோராக நோராதல்
கூடுமிறை சத்தி கொளல். க

ஏக னனேக னிருள்கரும மாயையிரண்
டாகவிவை யாருதி யில். உ

செய்வானுஞ் செய்வினையுஞ் சேர்பயனுஞ் சேர்ப்பவனு
மூய்வா னுளனென் றுணர். ங

ஊனுயிரால் வாழு மொருமைத்தே யூனுயிர்
தானுணர்வோ டொன்றுந் தரம். ச

தன்னிறமும் பன்னிறமுந் தானுங்கற் றன்மைதரும்
பொன்னிறம்போன் மன்னிறமிப் பூ. ஞ

கண்டொல்லை காணுநெறி கண்ணுயிர் நாப்பணெளி
யுண்டில்லை யல்ல தொளி. ட

புன்செயலி லேடும் புலன்செயல்போ னின்செயலை
மன்செயல தாக மதி. ண

ஓதே யொன்றையுமுற் றுன்னுதே நீமுந்திப்
பாதாதி பார்த்ததனைப் பார். த

களியே மிகுபுல னக்கருதி ஞான
வெளியே யொளியா வெளி. ந

கண்டபடி யேகண்டு காணுமை காணுமை
கொண்டபடி யேகொண் டிரு. ப

எ-வது. உயிரிணைவிளக்கம்

தாய்முலாய் தற்காருத் தோல்லாச் செதாதுயிர்தோடாத்
ரூனதுவாய் நிற்குந் நயம். க

நித்திக்கும் பாருலுத் னைக்குந் திருநெறிநாட்
பித்தத்திற் ரூன்றவிர்ந்த பின். உ

சான்பா ரெளிரியிருளிற் காட்டிடமத் தான்கண்ட
வீண்பாவ மெய்நான் விழும். ங

ஒளியு மிருரு மொருமைத்துப் பன்னம
தெளிவு தெளியார் செயல். ச

நிடைக்கத் தருமேநற் நிகண்ணைடாச்சல்லா
லெநித்துச் சுமப்பானே யின்று. ஞ

வஞ்ச முடனெருவன் வைத்த நிதிகவர
தஞ்சினரே பேயினரே தோல். ட

தனக்குநீழ லின்று மொளிகவருச் நட்ட
மெனக்கவர நில்லா திருள். ண

உற்னகதரும் பொற்ன கடைடமச்சோ துன்னமப்பி
னிற்ன வருளார் நிலை. த

இம்பலனற் ரூன்கன் டகன்று வதுவொழிய
வைம்புலனுர் தாமா ரதற்கு. ந

தாமே தருமவனைத் தம்வலியி னற்கருத
லாமே யிவனை ரதற்கு. ப

ய-வது. இன்புறுநிலை

இன்புறுவார் துன்பா ரிருவி னெழுஞ்சுடரின்
பின்புகுவார் முன்புகுவார் பின். க

இருவர் மடன்தையருக் கென்பயனின் புண்டா
மொருவ னெருத்தி யுறின். உ

இன்பதனை யெய்துவார்க் கீயு மவர்க்குருவ
மின்பகன மாதலினு லில். ங

தாடலேபோற் கூடியவை தானிகழா வேற்றின்பக்
கூடலேநீ யேகமெனக் கொள். ச

ஒன்றுனு மொன்று திரண்டாலு மோசையெழா
தென்றுலு மோரிரண்டு மில். ஞ

உற்றுருரும் பெற்றுரு மோவா துரையொழியப்
பற்றுரு மற்றுர் பவம். ட

பேயொன்றுந் தன்மை பிறக்கு மளவுமே
நீயொன்றுஞ் செய்யாது நில். ண

ஒண்பொருட்க ணுற்று ருறுபயனே யல்லாது
கண்படுப்போர் கைப்பொருள்போற் காண். அ

மூன்றுய தன்மையவர் தம்மின் மிகமுயங்கித்
தோன்றுத வின்பமதென் சொல். க

இன்பி னினிதென்ற லின்புண்டே லின்புண்டா
மன்பு நிலையே யது. ம

கூ-வது. ஐந்தெழுத்தருணிலை

அருணூலு மாணமு மல்லாது மைந்தின்
பொருணூ லெறியப் புகின். க

இறைசத்தி பாச மெழின்மாயை யாவி
யுறைநிற்கு மோங்காரத் துள். உ

உளவ நடன மொருபா லொருபாலா
ளாணகடந் தாணடுமே நாடு. க

விரியமண மேவியவ்வை மீளவிடா சித்தம்
பெரியவினை தீரிற் பெறும். ச

மாலயர் திரோத மலமுதலாய் மாறுமோ
மேலாசு மீளா விடின். ஞ

ஆராதி யாதாரா மந்தோ வதுமீண்டு
பாராது மேலோதும் பற்று. ட

சிவமுதலே யாமாறு சேருமேற் றீரும்
பவமிதுச் யோதும் படி. ண

வாசி யருளியதை வாழ்விக்கு மற்றதுவே
யாசி லுருவமுமா மங்கு. த

ஆசினவா நாப்ப ணடைடூச தருளிலல்
வாசியிடை நிற்கை வழக்கு. ந

எல்லா வகையு மியம்பு மிவனகன்று
நில்லா வகையை நினைந்து. ப

ம-வது. அணைந்தோர்தன்மை

ஓங்குணர்வி லுள்ளடங்கி யுள்ளத்து ளின்பொடுங்கத்
தூங்குவர்மற் றேதுண்டு சொல். ம

ஐந்தொழிலுங் *காரணங்க ளாந்தொழிலும் போகதுகர்
வெந்தொழிலு மேவார் மிக. ய

எல்லா மறியு மறிவுறினு மீக்கிவொன்
றல்லா தறியா தற. ர

---

* காரணக்கள் என்பதும் பாடம்.

புலனடக்கித் தம்முதற்கட் புக்குறுவர் போதார்
தலனடக்கு மாமை தக. ச

அவினையகன் றெங்கின்ற மாக்கவ ரெய்த
மிவனெயொழிந் தண்டாத லில். ஞ

உள்ளும் புறம்பு மொருதன்மைக் காட்சியருக்
கெள்ளுந் திறமேது மில். ங

உறுந்தொழிற்குத் தக்க பயனுலகந் தந்தம்
வறுந்தொழிற்கு வாய்மை பயன். எ

என்ற வினையடலோ டேகுமன்னை யேறும்வினை
தோன்றி லருளே சுடும். அ

மும்மை தருமவினைகண் மூளாவா மூதறிவார்க்
கம்மையு மிம்மையே யாம். க

கள்ளத் தலைவர் துயர்கருதித் தங்கருணை
வெள்ளத் தலைவர் மிக. ல

விஞ்ஞாபனம்

உமாபதி சிவாசாரியர்

உ

திருச்சிற்றம்பலம்

உமாபதி சிவாசாரியர்

அருளிச்செய்த

விண்ணப்பம்

நேரிசை வெண்பா

கூடு மொளியு நிறையிருளு மோரிடத்துக்
கூட லரிது கொடுவினையேன்—பாடுதன்மு
னென்றவர்சே வல்லியர்மருதச் சம்பந்தா
நின்றவா றெவ்வாறு நீ. க

இருளி லொளிபுரையு மெப்பதங் கலாதி
மருளி னிலையருளு மாணவங்—கருவியிவை
நீங்கி லிருளா நிறைமருதச் சம்பந்தா
வீங்குனரு ளாலென் பெற. உ

புல்லறிவு நல்லுணர்வு தாகா பொதுஞான
மல்லதில துள்ளதெனி லண்ணியமாந்—தொல்லையிரு
ளுணமலே யாவா றுயர்மருதச் சம்பந்தா
ஞானமலே யாவாய் நவில். ங

கனவு கனவென்று காண்பரிதாங் காணி
னனவி லனைவசிறி துண்ணு—முனவனரு
டானவற்றி லொன்று தடமருதச் சம்பந்தா
யானவத்தை காணுமா றென். ஐ

அறிவறிந்த தெல்லா மசத்தாகு மாயின்
குறியிறந்த நின்னுணர்விற் கூடா—பெறிபுலன்க
டாமா வறியா தடமருதச் சம்பந்தா
யாமா றறிவா நினை. ஒ

சிற்றறிவு மூற்சைதயிற் சேர்வாரின் முற்சிறிது
மற்றதனி னிற்கிலருண் மன்னுவாந்—துற்றமுகின்
மின்கொண்ட சோலை வியன்மருதச் சம்பந்தா
வென்கொண்டு காண்பே னியான். ஓ

உன்னரிய நின்னுணர்வ தோங்கியகா லொண்கருவி
தன்னளவு நண்ணரிது தானகு—மென்னறிவு
தானறிய வாரா தடமருதச் சம்பந்தா
யானறிவ தெவ்வா நினை. எ

அருமே லுருவன் றுருமே லருவன்
நிருமேலு மொன்றிற் கிசையா—வருமோவாரிற்
, காணி லுயர்கடந்தைச் சம்பந்தா கண்டவுற்
பூணுமிறைக் கென்னும் புகல். அ

இருமலர்த்தார்க் கில்லை யுடல்வினையென் செய்யு
மொருமலர்த்தார்க் காரை யுரைப்பேன்—நிருமலத்தா
னொன்றாக வுள்ளா நுயர்மருதச் சம்பந்தா
வன்றாகி லாமா றருள். க

ஒன்றிரண்டாய்ந் தின்றொன்றி லொர்மையதா மொன்றுக
ளன்றிரண்டா மென்னிலுயிர் தேகமாகுந்—துன்றிருந்தாள்
சாகியமாழ் கண்கடந்தைதச் சம்பந்தா யாஞகி
யோகியமா றெவ்வா றுரை. ய

கான்பாலுங் காட்டுவதுங் காண்பதுவுந் தீதுண்மை
காண்பாகக் காண்டுதந்தி காணுர்கள்—காண்பாலுந்
தாம்பெறுதற் காண்பதுவுந் தண்கடந்தைதச் சம்பந்தன்
தாம்பெறுவே வாரா தகர். யக

தினைத் துகர்வதிட தோளை முறைதொழிலு
மென்று மிடையி லிடமில்லை—யொன்றித்
தொடா வருண்மருதச் சம்பந்தா சேர்ந்து
பிரியாமா றெவ்வாறு பேசு. யஉ

அருளா லுணர்வார்க் ககலாத செம்மைப்
பொருளாகி நிற்கும் பொருந்தித்—தெருளா
வ்ரமெண்பா வுண்மை விரவாதோ வூமன்
சரவெண்பா லெய்துவிக்குந் கான். நக

வினவெண்பா

மூற்றிற்று

மெய்கண்ட சாத்திரம் - ஐ.

போற்றிப்பஃறொகை

உமாபதி சிவாசாரியர்

திருச்சிற்றம்பலம்

உமாபதி சிவாசாரியர்

அருளிச்செய்த

போற்றிப்பஃறொடை

பூமன்னு நான்முகத்தி தான் புத்தளி ராங்கஎர்கோன்
மாமன்னு சோதி மணிமார்ப - ரமன்னும்
வேதம்வே தாந்தம் விளக்கஞ்செய் விந்தவுட
ரதநா தாந்த நடுவேதம் - போதத்தா

இ லாமனுவந் தேதட வளவிறந்த வப்பாலைச்
சேம வொளியெவருந் தேறம்வகை - மாமன்சூழ்
மன்று ணிறைந்து பிரவி வழக்கறுக்க
நின்ற நிருத்த நிலைபோற்றி - குன்றாத
பல்லுயிர்வெவ் வேறு படைடத்து மவைதாத்து

ஈ மெல்லி யிளப்பொழிய விட்டிவைத்துந் - தொல்லையுறு
மந்த மடிநடுவென் றெண்ண வளவிறந்து
வந்த பெரிய வழிபோற்றி - முந்தற்ற
நெல்லுக் குமிதவிடு நீடுசெம்பிற் கானிதமுக்
தொல்லைக் கடலேறுன்றத் தோன்றுவரு - மெல்லா

உ மொருபுடை யொப்பாய்த்தா னுள்ளவா நுண்டா
யருவமா யெவ்வுயிரு மாத்தே - யுருவுடைய
மாமணியை யுள்ளடக்கு மாகாசம் வன்னிதனைத்
தானடக்குங் காட்டத் தகுதியும்போன் - ஞானத்தின்

கண்ணை மறைத்த கடியதொழி லாணவத்தா
உ லெண்ணுஞ் செயன்மாண்ட வெவ்வுயிர்க்கு - முண்ணுடிக்
கட்புலனற் காணர்தங் கைக்கொடுத்த கோலேபோற்
பொற்புடைய மாயைப் புணர்ப்பின்கண் - முற்பாற்
றனுகரண மும்புவன முந்தந் தவற்றான்
மனமுதலால் வந்தவிகா ரத்தால் - வினையிரண்டுங்
உரு காட்டி யதனுற் பிறப்பாக்கிக் கைக்கொண்டு
மீட்டறிவு காட்டும் வினைபோற்றி - நாட்டுகின்ற
வெப்பிறப்பு முற்செ யிருவினையா னிச்சயித்துப்
பொற்புடைய தந்தைதாய் போகத்துட் - கர்ப்பமாய்ப்
புல்விற் பனிபோற் புகுந்திவலைக் குட்படுங்கா
கூ லெல்லைப் படாவுதரத் தீண்டியதீப் - பல்வகையா
லங்கே கிடந்த வநாதியுயிர் தம்பசியா
லெங்கேனு மாக வெடுக்குமென - வெங்கும்பிக்
காயக் கருக்குழியிற் காத்திருந்துங் காமியத்துக்
கேயக்கை கான்முதலா யெவ்வுறுப்பு - மாசறவே
கூரு செய்து திருத்திப்பின் பியோகிருத்தி முன்புக்க
வையவழி யேகொண் டுணைகின்ற - பொய்யாத
வல்லவமே போற்றியம் மாயக்கா ருன்மறைப்ப
நல்ல வறிவொழிந்து நன்குதீ - தொல்லையுரு
வக்காலந் தன்னிற் பசியையறி வித்தழுவித்
தூக்காவி சோரத்தா யுண்ணடுங்கி - மிக்கோங்குஞ்
சிந்தை யுருக முலையுருகுந் தீஞ்சுவைப்பால்
வந்தமடுப் பக்கண்டு வாழ்ந்திருப்பப் - பந்தித்த
பாசப் பெருங்கயிற்றாற் பல்லுயிரும் பாலிக்க
நேசத்தை வைத்த நெறிபோற்றி - யாசற்ற
சூ பாலைப் பசும்பதத்தும் பாலனை மப்பதத்து
காலுக்கு நாட்சகல ஞானத்து - மூன்வித்துக்
கொண்டாள வானக் கருவிகொடுத் தொக்கநின்று
பண்டானி யான படிபோற்றி - தண்டாத

புன்புலால் போர்த்த புழுக்குரம்பை மாமனையி
அ லண்புசேர் கின்றனகட் டைந்தாக்கி - முன்புள்ள
வுண்மை நிலைமை யொருகா லகலாது
திண்மை மலத்தாற் சிறையாக்கிக் - கண்மறைத்து
மூலவருங் கட்டிலுயிர் மூடமா யுட்கிடப்பக்
கால நியதி யதுகாட்டி - மேலோங்கு
ஙி முந்திவியன் கட்டிலுயிர் சேர்த்துக் கலவித்தை
யந்த வாக மவைமுன்பு - தந்த
தொழிலறி விச்சை துணையாக மானி
னெழிலுடைய மூக்குணரு மெய்தி - மருளோடு
மன்னு மிதயத்திற் சித்தத்தாற் கண்டபொரு
கூ ளின்ன பொருளென்றி யம்பவொண்ணை - வந்நிலமே பாய்க்
கண்டவியன் கட்டிற் கருவிகளீ ரைந்தொழியக்
கொண்டநிய மித்தற்றை நாட்கொடுப்பப் - பண்டை
யிருவினையான் முன்புள்ள விண்டத்துன் பங்கண்
மருவும்வகை யங்கே மருவி - யுருவுடனின்
கூ ருங்கு நுதலாய வோலக்க மண்டபத்திற்
போங்கருவி யெல்லாம் புகுந்தீண்டி - நீங்காத
மூன்னை மலத்திருளுண் மூடா வகையகத்துட்
டின்னுமிரு ணீக்குஞ் சுடரோபோ - லந்நிலையே
சூக்கஞ் சுடருருவிற் பெய்து தொழிற்குரிமை
எ ராக்கிப் பணித்த வறம்போற்றி - வேட்கைமிகு
மூண்டிப் பொருட்டா லொருகா லவியாது
மண்டியெரி யும்பெருந்தீ மாற்றுதற்குத் - தீண்டிதன்சேர்
வல்லார்கள் வல்ல வகையாற் றொழில்புரித
லெல்லா முடனே யொருங்கிசைத்து - சொல்காலே
எஙி மூட்டாமற் செய்வினைக்கு மூற்செய்வினைக் குஞ்செலவு
பட்டோலை தீட்டும் படிபோற்றி - வட்டோங்கு
மிந்நிலைமை மானுடருக் கேயன்றி யெண்ணிலா

மன்னுயிர்க்கு மிந்த வழக்கேயாய் - முன்னுடைய
நாணுள் வணாயி லுடல்பிரித்து நல்வினைக்கண்
அ வாணுளின் மாலா யயனுகி - நீணுகர்
வாணுடர் கோமுதலாய் வந்த பெரும்பதத்து
நாணு விதத்தா னலம்பெறுநா - டான்மாள
வெற்றிக் கடுந்தாதர் வேகத் துடன்வந்து
டற்றித்தம் வெங்குருவின் பாற்காட்ட - விற்றைக்கு
அ மில்லேயா பாவி பிறவாமை யென்றெடுத்து
நல்லதோ ரின்சொ ணடுவாகச் - சொல்லியிவர்
செய்திக்குத் தக்க செயலுறுத்து வீரென்று
வெய்துற் றுரைக்க விடைகொண்டு - மையறருஞ்
செக்கி னிடைத்திரித்துந் தீவாயி லிட்டெரித்துந்
அ தக்கநெருப் புத்தூண் டழுவுவித்து - மிக்கோங்கு
நாராசங் காய்ச்சிச் செவிமடுத்து நாவரிந்து
மீராவுன் னூனைத்தின் னென்றடித்தும் - பேராம
லங்காழ் நரகத் தழுத்துவித்தும் பின்னுந்தம்
வெங்கோப மாறுத வேட்கையரா - யிங்கொருநா
அ ளெண்ணிழுதற் காணுத வின்னற் கடுநரகம்
பன்னெடுநாட் செல்லும் பணிகொண்டு - முன்னுடிக்
கண்டு கடன்கழித்தல் காரியமா மென்றெண்ணிக்
கொண்டுவரு நோயின் குறிப்பறிவார் - மண்டெரியிற்
காய்ச்சிச் சுடவுறுக்கக் கண்ணுறுக்க நன்னிதிய
ர மீத்துரத்தாய் தந்தைதம ரின்புறுதல் - வாய்த்தநெறி
யோடியதே ரின்கீ ழுயிர்போன கன்றுலே
கீடுபெரும் பாவமின்றே நீங்குமென - நாடித்தன்
ணமைந்தனையு மூர்ந்தான் வழக்கே வழக்காக
கஞ்சனைய சிந்தை நமன்றூதர் - வெஞ்சினத்தா
ரஅ வல்ல லுறுத்து மருநாகங் கண்டிற்க
வல்ல கருணை மறம்போற்றி - பல்லுயிர்க்கு

டின்ன வணைபவா லிருவினைக்க ணின்றருத்தி
முன்னைமுத லெண்ண முதலில்லா - னல்வினைக்க
ணெல்லா வுலகு மெடுப்புண் டெடுப்புண்டு
சென்காலம் பின்னாகஞ் சோராமே - நல்லநெறி
யெய்துவதோர் காலந்தன் னண்பரைக்கண் டின்புறுத
லுய்ப்பு நெறிசிறிதே யுண்டாக்கிப் - பைம்மேவ
மட்டாய் மலராய் வருநாளின் முன்னைநான்
மொட்டா யுருவா முறைதோபாலக் - கிட்டியதோர்
காயி னல்ல பிறப்பிற் பிறப்பித்து நாடும்வினை
யெல்லை யிரண்டு மிடையொப்பிற் - பல்பிறவி
யத்தமதி லன்றோ வளவென்று பார்த்திருந்து
சத்தி பதிக்குந் தாம்போற்றி - முத்திதரு
நன்னெறிவிஞ் ஞானகலர் நாடுமல மொன்றினையு
காயு மந்தீலயே யுண்ணின் றறுத்தருளிப் - பின்னன்பு
மேவா விளக்கும் பிரளயா கலருக்குத்
தேவாய் மலதன்மந் தீர்த்தருளிப் - பூவலயந்
தன்னின்று நீங்காச் சகலர்க் கவர்போல
முன்னின்று மும்மலந்தீர்த் தாட்கொள்கை - யன்னவனுக்
காதி குணமாதலினு லாடுந் திருத்தொழிலுஞ்
சோதி மணிமிடற்றுச் சுந்தரமும் - பாதியாம்
பச்சை யிடமும் பவளத் திருச்சடைமேல்
வைச்ச நதியு மதிக்கொழுந்து - மச்சமற
வாடு மரவு மழகார் திருநுதன்மே
காயு னீடிருவ வன்னி நெடுங்கண்ணுங் - கேடிலயங்
கூட்டுந் தமருகமுங் கேர்ல வெரியகலும்
பூட்டாவக் கச்சும் புலியதளும் - வீட்டின்ப
வெள்ளத் தழுத்தி விடுந்தா ளினுமடியா
ருள்ளத் தினும்பிரியா வொண்சிலம்புங் - கள்ளவினை
காகு வென்று பிறப்பறுக்கச் சாத்தியவீ ரக்கழலு

மொன்று முருத் தோன்ற மை லுள்ளடக்கி - யென்று
மிறவாத வின்பத் தெமையிருத்த வேண்டிப்
பிறவா முதல்வன் பிறந்து - நறவாருந்
தாருலா வும்புயத்துச் சம்பந்த நாதனென்று
ஈசன் பேரிலா நாதனெரு வேர்புனைந்து - பாரோர்த
மூண்டி யுறக்கம் பயமின்ப மோத்தோழுகிக்
கொண்டு மகிழ்ந்த குணம்போற்றி - மிண்டாய
வாறு சமயப் பொருளுமறி வித்தவற்றிற்
பேறின்மை யெங்களுக்கே பேரூக்கித் - தேறுத
ஈசனே சித்தங் தெளியத் திருமேனி கொண்டுவரு
மத்தகைமை தானே யமையாமல் - வித்தகமாஞ்
சைவ நெறியிற் சமய முதலாக
வெய்து மபிடேக மெய்துவித்துச் - செய்யதிருக்
கண்ணருளா லேக்கிக் கடியபிறப் பாற்பட்ட
ஈனமில் புண்ணு மிருவினையும் வோயகல் - வண்ணமலர்க்
கைத்தலத்தை வைத்தருளிக் கல்லாய நெஞ்சுருக்கி
மெய்த்தகைமை யெல்லாம் விரித்தோதி - யொத்தொழுகுஞ்
சேணு நிருள்வடிவுஞ் சங்கதிரோன் பானிற்பக்
காணு தொழியுங் கணக்கேபோ - லாணவத்தி
னீனமில் குறையாம லென்பா லணுகாம
னீதி நிறுத்து நிலைபோற்றி - மேதக்கோர்
செய்யுஞ் சரியை திகழ்கிரியா யோகத்தா
லெய்துஞ்சீர் முத்திபத மெய்துவித்து - மெய்யன்பாற்
காணத் தகுவார்கள் கண்டாற் றமைப்பின்பு
ஈசனி நாணத் தகுஞான நன்னெறியை - வீணை
யெனக்குத் தாவேண்டி வேல்லாப் பொருட்கு
மனக்கு மலரயன்மால் வாரேனர் - நினைப்பினுக்குந்
தூரஞ்சேபோ லெயணிய சுந்தரத்தா லென்றலேம
லாகும் படிதந் தருள்செய்த - போளன்

ஈகூ றந்தபொரு ளெதென்னித் ருன்வேறு நான்வேறாய்
வந்து புணரா வழக்காக்கி - முந்தியென்ற
ஹுள்ளமென்று நீங்கா தொளித்திருந்து - தோன்றிநிற்குங்
கள்ளமின்று காட்டுங் கழல்போற்றி - வள்ளன்மையாற்
றன்னைத் தெரிவித்துத் தன்ருளி ஹுட்கிடந்த
ஈஎ வெண்னைத் தெரிவித்த வெல்லையின்கண் - மின்ஹரும்
வண்ண முருவ மருவுங் குணமயக்க
மெண்ணுங் கலைகால மெப்பொருளு - முண்ணமெனக்
கில்லாமை காட்டிப்பின் பெய்தியவா காட்டியினிச்
செல்லாமை காட்டுஞ் செயல்போற்றி - யெல்லாம்போய்த்
ஈஎஇ தம்மைத் தெளிந்தாராய்த் தாமே பொருளாகி
யெம்மைப் பறைகூறி யின்புற்றுச் - செம்மை
யவிகாரம் பேசு மகம்பிரமக் காரர்
வெளியா மிருளில் விடாதே - யொளியாய்நீ
நின்ற நிலையே நிகழ்த்தி யொருபொருள்வே
ஈஅய றின்றியமை யாமை யெடுத்தோதி - யொன்ருகச்
சாதித்துத் தம்மைச் சிவமாக்கி யிப்பிறவிப்
பேதந் தனிலின்பப் பேதமுளுப் - பாதகரோ
டேகமாய்ப் போகாம லெவ்விடத்துக் காட்சிதந்து
போகமாம் பொற்ருளி ஹுட்புணர்த்தி - யாதியுட
ஈஅஇ னிற்க வழியா நிலையிதுவே யென்றருளி
யொக்க வியாபகந்தன் ஹுட்காட்டி - மிக்கோங்கு
மாநீத்த மாக்கடலி லாரா வமுதளித்துத்
தான்வந்து செய்யுந் தகுதியினு - லூனுயிர்தான்
முன்கண்ட காலத்து நீங்காத முன்னேனை
ஈகூ யென்கொண்டு போற்றிசைப்பே னியான்.

போற்றி திருத்தில்லை போற்றி சிவபோகம்
போற்றியவன் மெய்ஞ்ஞானப் புண்ணியநூல்—போற்றியெங்கள்
வெம்பந்த வாழ்க்கைவிட வேரறுப்வந் தண்ணின்ற
சம்பந்த மாமுனிபொற் சூள்.

போற்றிப்பஃறொடை

முற்றிற்று

மெய்கண்ட சாத்திரம் - 06.

உண்மை நெறி விளக்கம்

உமாபதி சிவாசாரியர்

உ

திருச்சிற்றம்பலம்

உமாபதி சிவாசாரியர்

அருளிச்செய்த

உண்மை நெறி விளக்கம்

மண்முதற் சிவம தீறாய் வடிவுகாண் பதுவே ரூப
மண்முதற் சிவம தீறாய் மலஞ்சட மென்றல் காட்சி
மண்முதற் சிவம தீறாய் வகையதிற் ரூனி லாது
கண்ணுத லருளால் நீக்கல் சுத்தியாய்க் கருத லாமே. ச

பாயிரு ணீங்கி ஞானந் தனைக்காண்ட லான்ம ரூப
நீயுநின் செயலொன் றின்றி நிற்றலே தரிச நந்தான்
போயிவன் றன்மை கெட்டுப் பொருளிற்போ யங்குத் தோன்ரு
தாயிடு லான்ம சுத்தி யருணூலின் விதித்த வாறே. உ

எவ்வடி வுகளுந் தானு யெழிற்பரை வடிவ தாகிக்
கௌவிய மலத்தான் மாலைக் கருதியே யொடுக்கி யாக்கிப்
பௌவம்விண் டகலப் பண்ணிப் பாரிப்பா லெருவ னென்று
செவ்வையே யுயிரிற் காண்டல் சிவரூப மாகு மன்றே. ங

பரையுயிரில் யானெனவுதன் றறநின்ற தடியாம்
பார்ப்பிடமெவ் குஞ்சிவமாய்த் தோன்றலது முகமா
மூலையிறந்த சுகமதுவே மூடியாகு மென்றிவ்
வுண்மையினை மிகத்தெளிந்து பொருள்வேவெரூன் றின்றித்

தரைமூதலிற் போகாது நிலையினினில் லாது
தற்பசையி னின்றழுந்தா தற்புதமே யாகித்
தெரிவரிய யாமனாங் தத்திற் சேர்தல்
சிவனுண்மைத் தரிசனமாய்ச் செப்பு நூலே.

எப்பொருள்வந் துற்றிடினு மப்பொருளைப் பார்த்தங்
கெய்துமுயிர் தனைக்கண்டிங் கவ்வுயிர்க்கு மேலா
மொப்பிலருள் கண்டுசிவத் துண்மை கண்டிங்
குற்றதெல்லா மதனுலே பற்றி நோக்கித்
தப்பினைச்செய் வதுமதுவே நினைப்புமது தானே
தருமுணர்வு புசிப்புமது தானே யாகு
மெப்பொருளு மசைவில்லை யெனவந்தப் பொருளோ
டிசைவதுவே சிவயோக மெனுமிறைவன் மொழியே. நி

பாதகங்கள் செய்திடினுங் கொலைகளவு கள்ளுப்
பயின்றிடினு நெறியல்லா நெறிபயிற்றி வரினுஞ்
சாதிநெறி தப்பிடினுந் தவறுகள்வந் திடினுந்
தனக்கெனவோர் செயலற்றுத் தானதுவாய் நிற்கி
னுதனவ னுடலுயிரா யுண்டுறங்கி நடந்து
நானுமோ கங்களையுந் தானுகக் செய்து
மேதமற நின்றிவனைத் தாளுக்கி விடுவன்
பெருகுசிவ போகமெனப் பேசுநெறி யிதுவே. அ

உண்மைநெறிவிளக்கம்

மூற்றிற்று

மெய்கண்ட சாத்திரம் - 02.

சிவஞானபோதம்

உமாபதி சிவாசாரியர்

உ

திருச்சிற்றம்பலம்

உமாபதி சிவாசாரியர்

அருளிச்செய்த

கொடிக்கவி

ஒளிக்கு மிருளுக்கு மொன்றே யிடமொன்று மேலிடிலொன்
றொளிக்கு மெனினு மிருளட ராதுள் ளுயிர்க்குயிராய்த்
தெளிக்கு மறிவு திகழ்ந்துள தேனுந் திருமல்த்தே
குளிக்கு முயிராருள் கூடும் படிகொடி கட்டினனே. க

பொருளாம் பொருளேது போதேது கண்ணே
திருளாம் வெளியே திரவே—தருளாளா
நீபுரவா வையமெலா நீயறியக் கட்டினேன்
கோபுர வாசற் கொடி. உ

வாக்காலு மிக்க மனத்தாலு மெக்காலுந்
தாக்கா துணர்வரிய தன்மையனே—நோக்கிப்
பிறித்தறிவு தம்மிற் பிரியாமை தானே
குறிக்குமரு ணல்கக் கொடி. ங

அஞ்செழுத்து மெட்டெழுத்து மாறெழுத்து நாலெழுத்தும்
பிஞ்செழுத்து மேலைப் பெருவெழுத்து—நெஞ்செழுத்திப்
பேசு மெழுத்துடனே பேசா வெழுத்தினையுங்
கூசாமற் காட்டக் கொடி.

கொடிக்கவி

மூற்றிற்று

நெஞ்சுவிடு தூது

உமாபதி சிவாசாரியர்

உ

திருச்சிற்றம்பலம்

உமாபதி சிவாசாரியர்

அருளிச்செய்த

நெஞ்சுவிடு தூது

கலிவெண்பா

பூமேவு முந்திப் புயல்வண்ணன் பொற்பமைந்த
நாமேவு மாதுபுணர் நான்முகத்தோன் - ரூமேவிப்
பன்றியு மன்னமுமாய்ப் பாரிடந்தும் வான்பறந்து
மென்று மறியா வியல்பிற - னன்றியு
மிந்திரனும் வாழ்ஞரு மேழ்ஞரு மெப்புவியு
மந்தர வெற்பு மறிகடலு - மந்திரமும்
வேதமும் வேத முடிவும்விளை விந்துவுட
ஞதமுங் காண நலத்திற - ஞத
வரியா னெளியா னளவிறந்து நின்ற
ரு பெரியான் சிறியான்பெண் பாகன் - றெரியா
வருவா னுருவா னருவுருவ மில்லான்
மரியான் மரிப்பார் மனத்தான் - பரிவான
மெய்யர்க்கு மெய்யன் விணக்குவினை யாயிஞன்
பொய்யர்க்குப் பொய்யாய்ப்பொய் யாயிஞ - னெயன்
படநாகம் பூண்ட பரமன் பசுவி
னிடமாய் நிறைந்த விறைவன் - சுடரொளியா
னென்றுமுள னன்றளவு மியாது மூளனெ
நின்றநிலை யிற்றரித்து நில்லாமற் - சென்றுசென் று

தோற்றியிடு மண்டலஞ் சுவேதசங்கண் மண்ணின்மேற்
சாற்றுமுற் பீசஞ் சாயுசங்கட் - கேற்றபிறப்
பெல்லாம் பிறந்து மிறந்து மிருவினையின்
பொல்லாங்கு துய்க்கும் பொறியிலியேன் - கல்லா
வுணர்வின் மிசையோ டுலகா யதனைப்
புணர்வதொரு புல்லறிவு பூண்டு - கணையிற்
கொடிதெனவே சென்று குடிபழுதே செய்து
கடிய கொலைகளவு காமம் - படியின்மிசைத்
தேடி யுழன்று தெரிவைத் தெரியாமல்
வாடி யிடையு மனந்தனக்கு - நாடியது
போன *வழிபோகும் புந்திக்கும் புந்தியுட
னான திறலா ரகந்தைக்கு - மேனி
யயா வயா வழிய வழியு
முயிரின் றுயா முரையேன் - வயிரமே
கொண்டதொரு காமனுக்குங் கோபனுக்கு மோகனுக்கு
மண்டு மதமாச் சரியனுக்குந் - திண்டிறல்சே
ரிந்திரியம் பத்துக்கு மீரைந்து மாத்திரைக்கு
மந்தமிலாப் பூதங்க ளைந்தினுக்குஞ் - சிந்தைகவர்
மூன்றுகுற்ற மூன்றுகுண மூன்றுமல மூன்றவத்தை
யென்றுநின்று செய்யு மிருவினைக்குந் - தோன்றுத
வாயுவொரு பத்துக்கு மாறுத வல்வினையே
யாய கிளைக்கு மருந்திதிக்கு - நேயமா
மிச்சை கிரியை யிவைதரித்திங் கெண்ணிலா
வச்சங் கொடுமை யவைபூண்டு - கச்சரவன்
சீனிலை நில்லாமற் றிண்டாடும் பல்கருவி
வானியகப் பட்டு மயங்கினேன் - றேறுங்கா
லுன்னை யொழிய வுறவில்லை யென்னுமது
தன்னை யறிவைத் தனியறிவை - முன்னந்

---

* வழியோடும் என்பதும் பாடம்.

'தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றையவ' ரென்று - நிலைத்தமிழின்
நெய்வப் புலமைத் திருவள் ளுவருரைத்த
உரு மெய்வைத்த சொல்லே விரும்பாம - லெவர்க்கு
மாவதுவே செய்தங் கவர்வழியைத் தப்பாமற்
பாவமெனும் பௌவப் பரப்பழுந்திப் - பூவையர்தங்
கண்வலையிற் பட்டுக் கலவிக் கலைபயின்றங்
குண்மை யறிவுணர்ச்சி யோராமற் - றிண்மையிலை
ஞவிற் கொடுமை பலபிதற்றி நாடோறுஞ்
சாவிற் பிறப்பிற் றலைப்பட்டிங் - காவிநிலை
நிற்கும்வகை பாராய் நிலையான நெஞ்சமே
பொற்பினுடன் பானே டுகலக்தேகள் - வெற்பின்மிசை
வந்திருக்க வல்லான் மதியாதார் வல்லரணஞ்
கூ சென்தழலின் மூழ்கச் சிரித்தபிரா - னந்தமிலா
வேத முடிவில் விளைவில் விளவிலொளி
யாதி யமல னிமலனருட் - போத
வறிவி லறிவை யறியு மவர்கள்
குறியுள் புகுதுங் குணவ - னெறிகொள்
வெளியில் வெளியில் வெளிபன் வெளியி
லொளியி லொளியி லொளிய - னெளியி
லளியி லளியி லளிய னளியி
லளவி லளவி லளவ - னளவிறந்து
நின்ற னனைத்து நிறைந்த னினைப்பவர்பாற்
கூரு சென்றுன் றெரியத் தெரியாதான் - குன்று
விளக்காய் நிறைந்த விரிசுடரான் விண்மேற்
றுளக்காம னின்றபெருஞ் சோதி - யுளக்கண்ணுக்
கல்லாது தோன்று வமல னகிலமெலா
நில்லாம னின்ற நிலையிறன் - சொல்லாரு
மீசன் பெருமை யிருவினையே னுன்றனக்குப்
பேசுந் தகைமையெலாம் பேணிக்கேள் - பாசம்

பலவுங் கடந்து பரிந்தருள்சேர் பண்பாற்
குலவி விளங்குகுணக் குன்றே - னிலகவே
செய்ய தருமச் செழுங்கிரியின் மீதிழிந்து
வையம் பரவ மகிழ்ந்தெழுந்தங் - கையம்
களவுபயங் காமங் கொலைகோபங் காதி
யளவில்வினை யெல்லா மழித்திங் - குளமகிழத்
தொம்மெனவே யெங்கு முழங்கிச் சுருதிபயில்
செம்மைதரு மாகமங்கள் சேர்ந்தோடி - மும்மலத்தின்
காடடங்க வேர்பறித்துக் கல்விக் கரைகடந்தங்
கோடுபல பூதத் துணர்வழித்து - நீடுபுகழ்
மெய்வாய்கண் மூக்குச் செவியென்னப் பேர்பெற்ற
வைவாய வேட்கை யவாவழித்து - மையுமியல்
வாக்குப்பா தம்பாணி பாயுருபத் தம்பலவு
நீக்கிச் செறிந்து நிறைந்தோடிப் - போக்கரிய
பந்தமெனுஞ் சோலை பறித்துப் பரந்தலைக்கு
மந்தமனம் புத்தியுட னுங்காரஞ் - சிந்தைவிழு
மோதி *யலைக்கு மருணீர்மை மூக்குணமுங்
காதி யுரோமமெலாங் கைகலந்து - சீதப்
புளக மரும்பிப் புலன்மயக்கம் போக்கி
விளைவில் புலன்மூட்ட மேவிக் - களபதன
மாதர் மயக்க மழித்துவளர் மண்டலத்தின்
சோதியொரு மூன்றினையுஞ் சோதித்து - நீதியிலை
லாதார மாறினுஞ்சென் றுறியடல் வாயுக்கண்
ணீதான மத்து மிகப்பாந்து - காதிப்
பிருதிவியப் புத்தேயு வாயுவா காய
வுற்றி நிலைமைந்து மோடி - மறுவிலா
ஞான்முகன்மா லீசன் மகேச னலஞ்சிறந்த
தான்முக மைந்தாஞ் சதாசிவமு - மானதொரு

---

*மருணீர்மையோங்கி விறன் முக்குணமும். என்பதும் பாடம்.

விந்துநா தங்கடந்து சுத்த வெறுவெளியி
லந்தமிலாப் பாழடங்கத் தேக்கியபின் - முந்திவரு
மவ்வறிவுக் கப்பாலுஞ் சென்றகண்ட முள்ளாக்கிச்
செவ்வறிவே யாகித் திகைப்பொழிந்தங் - கெவ்வறிவுந்
தானுய வீடருளித் தன்னிற் பிரிவில்லா
திசை யூகி யெவ்வுயிர்க்கு முட்புகுந்து - மேனியிலா
ரஞ்சுவத்தை யுங்கடந் தாயபெரும் பேரொளிக்கே
தஞ்சமெனச் சென்று *தலைப்பட்டு - வஞ்சமறத்
தானந்த மில்லாத தண்ணளியா லோங்கிவரு
மானந்த மென்பதோ ராறுடையா - னனந்தம்
பண்ணும் பயன்சுருதி யாகமங்கள் பார்த்துணர்ந்து
நண்ண வரியதொரு நாடுடையா - னெண்ணெண்ண
கலையா லுணர்ந்து கருத்தழிந்து காம
நிலையான தெல்லாமுன் னீத்திங் - கலைவறவே
தேட்டற்ற சிந்தை சிவஞான மோனத்தா
லோட்டற்று வீற்றிருக்கு மூருடையா - லுட்டத்தாற்
றெண்ணீ ரருவிழச் சிந்தைமயக் கந்தெளிந்
துண்ணீர்மை யெய்தி யுரோமமெலா - நண்ணும்
புளகம் புனைமெய்யர் பொய்யிற்கூ டாம
லுளகம்பங் கொண்டுள் ளுருகி - யளவிலா
மாலா யிருக்கு மவர்மனத்தை வாங்கவருண்
மேலாய் விளங்கலங்கன் மெய்யிலன் - சீலாத
வானம் புவன மலைகடலேழ் பாதாள
மூனைந்து பூதத் துயிருணர்ச்சி - ஞானமா
யெல்லாமா யல்லவா யெண்ணுவா ரெண்ணத்து
ணில்லாம னிற்குநீள் வாசியான் - சொல்லாரும்
பாதாள மூடுருவிப் பாரேழும் விண்ணேழு
மாதாரா மாகி யகண்டநிறைந் - தோத

---

* தலைப்பெய்தி என்பதும் பாடம்.

வரிதா யெளிதா யருமறையா றங்கத்
துருவா யுயிரா யுணர்வாய்ப் - பொிதாய
வெய்யதுயர்ப் பாசமற வீசியே வெம்பிறவித்
தய்ய கடலைத் துகளெழுப்பி - யையமுறுங்
காமக் குரோத*மத மாச்சரியங் காய்ந்தடர்த்துச்
சாமத் தொழிலின் றலைமிதித்து - நாமத்தாற்
கத்துஞ் சமயக் கணைக்கின்விறற் கட்டழித்துத்
எ தத்தம் பயங்கொலக ளாங்கழித்தே - தத்திவரும்
பாசக் குழாத்தைப் படவடித்துப் பாவையர்த
மாசைக் கருத்தை யறவீசி - நேசத்தா
லானவே கங்கொண் டருண்மும் மதத்தினை
லூனையார் தத்துவங்க ளுள்புகுந்து - தேனைப்
பருகிக் களித்துயர்ந்த பன்மறைநாற் கோட்டான்
மருவித் திகழ்ஞான வானையா - னிருமுச்
சமையங் கடந்து தனக்கொப் பிலாத
சுமைதுன்ப நீக்குந் துவசன் - கமையொன்றித்
தம்மை மறந்து தழலொளியுள் ளெயிருத்தி
எ இம்மை மறுமை யிரண்டகற்றிச் - செம்மையே
வாயுவை யோடா வகைநிறுத்தி வானத்து
வாயுவையு மாங்கே யுறவமைத்துத் - தேயுறவே
யென்று மொருதகைமை யாயிருக்கு மின்பருளே
நின்று முழங்கு நெடுமூரசோ - னன்றியு
மாலு மயனும் வகுத்தளித்த வையமெலாஞ்
சாலுமிதற் கப்பாலு மெப்பாலு - மேலை
யுலகு முலகா லுணரவொண்ணு வூரு
மிலகி நடக்குமெழி லானையா - னலகிறந்த
காட்சியான் காட்சிக்குங் காணைக் கலைஞான
அ வாட்சியா லூட்சிக்கு மாயிரன் - சூட்சியான்

---

* லோபமோகமதங்காய்ந்தடர்ந்து. எ - ம் பாடம்.

பாரும் திசையும் படரொளியா லேநிறைந்தான்
றூருந் தலையுமிலாத் தோன்றலான் - வேராகி
வித்தாகி வித்தின் முளையாகி மேவுதனுச்
சத்தாதி பூதங்க டாஞகிச் - சுத்த
வெறுவெளியாய்ப் பாழாய் வெறும்பாழுக் கப்பா
லுறுபொருளாய் நின்ற வொருவன் - பொறியிலியேன்
வெம்பும் பிறவியலை வீழாமல் வீடளித்த
சம்பந்த மாமுனியென் றம்பிரா - னம்புவியோர்
போற்றுந் திருவடியென் புன்றலைமீ தேபொறித்தே
அரு னேற்றின் புறத்தமைத்த வெங்கோமான் - சாற்றுவார்
சாற்றும் பொருளான் றனிமுதல்வன் ருனல்லான்
வேற்றின்ப மில்லா விளங்கொளியான் - போற்றுங்
குருவேட மாகிக் குணங்குறியொன் றில்லாப்
பெருவேட மாய்நிறைந்த பெம்மான் - கருவேடங்
கட்டுமுருக் கட்டறுத்தான் கற்றவர்வாழ் தில்லையா
னெட்டுமவர்க்கெட்டா வியல்பினன் - மட்டவிழ்தார்
வாளேனன் பவனி வரக்கண்டு வல்வினையே
னேலேரு மேத்துதல்கண் டேதத்தினேன் - ருனென்னைப்
பார்த்தன் பழையவினைப் பஞ்சமலக் கொத்தையெல்லா
கூல நீத்தா னினைவுவே ருக்கிறை - னேத்தரிய
தொண்ணூற் றறுவர்பயி ரொருக்கிற் றுவக்கறுத்தான்
கண்ணூறு தேனமிர்தங் காட்டினன் - வெண்ணீறும்
வேடமும் பூசையுமே மெய்யென்ரு ன் பொய்யென்ரு ன்
மடையும் வாழ்க்கை மனையுமே - நாடரிய
வஞ்செழுத்தி னுள்ளீ டறிவித்தா னஞ்செழுத்தை
நெஞ்செழுத்தி நேய மயலாக்கி - யஞ்செழுத்தை
யுச்சரிக்குங் கேண்மை யுணர்த்தியதி லுச்சரிப்பு
வைச்சிருக்கு மந்த வழிகாட்டி - யச்சமறச்
சென்று வினக்கை யெழுத்தாண்டிச் செஞ்சுடரி
கூரு லொன்றி யொருவினக்கி னுள்ளொளிவாய் - நின்ற

பெருவிளக்கின் பேரொளியி னுள்ளே பிரச
மருவு மலர்போன் மதித்தங் - குருவினுருக்
கொள்ளா வருளைக் கொளுத்திக் குணங்குறியொன்
றில்லா விடத்தே யிளைப்பாற்றி - விள்ளாத
வுள்ள மூதலாக வுற்றதெல்லாம் வாங்கவருள்
வெள்ள மயலளித்து மேவினன் - கள்ள
மறப்பித்தான் மெய்ஞ்ஞான மாக்கிமன மெல்லா
மிறப்பித்தா னென்பிறவி யீர்த்தான் - விறற்சொல்லுக்
கெட்டாவினை யார்க்கு மெழுதா வியற்குணங்க
ளெட்டாவினை யாற்ற வெழுத்தினன் - மாட்டாரும்
பாடலா ராடலார் பண்பலார் நண்பலா
ராடலா ராட லகன்பதியாங் - கூடலர்
காணக் கிடையாதான் காண்பார்க்குக் காட்சியான்
பாணர்க் கிலகு பலகையிட்டான் - சேணிற்
சிறந்த வுருவான் றிருமாலுக் கெட்டா
னிறைந்த திருவுருவாய் நிற்போன் - கறங்குடனே
சூறைசுழல் வண்டு சுழல்கொள்ளி வட்டமென
மாறில் கருணையினன் மாற்றினை - னீறணிந்த
மெய்ய னமல னிமலனருள் வீடளிக்கு
மையனறி வுக்கறி வாயினன் - பொய்யர்பாற்
பொய்மையாய் நின்றன் புரிந்தவர்தங் நெஞ்சத்துண்
மெய்மையாய் நின்று விளங்கினன் - கைமழுவா
னத்தன்பா னீசென் றடையு மிடத்தையெல்லாஞ்
சித்தஞ்சேர் நெஞ்சமே செப்பக்கே - ணித்தலுமே
பூசிமுடித் துண்டுடுத்துப் பூங்குழலார் தங்கலவி
யாசைதனிற் பட்டின்ப வார்கலிக்கு - ணேசமுற
நின்று நிலைக்கு மிதுமுன்னி யல்லதுவே
றொன்று நிலைக்கு மதுமுன்னி - யன்றென்
றிலகா விருளலகை போலிகலே பேசு
மூலகா யதன்பா லுறுதே - பலகாலுந்

தாம்பிரமங் கண்டவர்போற் றம்மைக்கண் டாங்கதுவே
தான்பிரம மென்பவர்பா னண்ணுதே - யூன்றனக்குக்
கொன்றிடுவ தெல்லாங் கொலையல்ல வென்றுகுறித்
தென்றுமற மேதெய்வ மென்றென்று - வென்றிப்
பொறையே யெனும்புத்தன் பொல்லாத புன்சொன்
மிறையே விரும்பி விழாதே - நிறைமேவி
வாழ்பவர்போன் மண்ணுடலின் மன்னுமுரோ மம்பறித்துத்
தாழ்வுநினை யாதுதுகி ருனகற்றி - யார்ழ்விக்கு
மஞ்சு மகற்று மதுமுத்தி யென்றுரைக்கும்
காரு வஞ்சமணன் பாழி *மருவாதே - செஞ்சொல்புனை
யாதிமறை யோதி யதன்பயனென் றும்மறியா
வேதியர்சொன் மெய்யென்று மேவாதே - யாதியின்மே
லுற்றதிரு நீறுஞ் சிவாலயமு முள்ளத்துச்
செற்ற புலையர்பாற் செல்லாதே - நற்றவஞ்சேர்
வேடமுடன் பூசையருண் மெய்ஞ்ஞான மில்லாத
மூடருடன் கூடி முயங்காதே - நீட
வழித்துப் பிறப்ப தறியா தானைப்
பழித்துத் திரிபவரைப் பாராதே - விழித்தருளைத்
தந்தெம்மை யாண்டருளுஞ் சம்பந்த மாமுனிவ
னுடை னந்தங் கடந்தப்பா லாய்நின்றே - னெந்தைபிரான்
வீற்றிருக்கு மோலக்க மெய்தியடி வீழ்ந்திறைஞ்சிப்
போற்றி சயசய போற்றியென - வார்த்தகரி
யன்றுரித்தாய் நின்பவனி யாதரித்தா யெல்லாரும்
வென்றிமத னம்புபட வீழ்வரோ - நின்றிடத்து
நில்லாத செல்வ நிலையென் றுனைநீங்கிப்
பொல்லா நரகம் புகுவரோ - பல்லாரும்
கத்துஞ் சமயக் கணக்கிற் படிவரோ
சித்தம் பலகாற் றிகைப்பரோ - முத்தம்

---

* மதியாதே என்பதும் பாடம்.

பொருத நகைமடவார் புன்கலவி யின்ப
மருவி மயங்கி வருவதோ - விருபொழுது
நாளிருபத் தேழு நவக்கிரக மும்நலியுங்
கோளிதுவென் றெண்ணிக் குறிப்பதோ - வேளை
யெரித்த விழியாய்நின் னின்பக் கடற்கே
தரித்து மதிமறந்த தையல் - வருத்தமெலாந்
தீரா யெனவுரைத்துச் செங்கமலப் பூந்திருத்தா
டாரா யெண்ணும்பலகாற் சூழ்ந்திறைஞ்சி - யோராரும்
பூங்கொன்றை வாங்கிப் புகழ்ந்துபுரி நெஞ்சமே
யீங்கொன்ற வாரா யினி.

வெம்பும் பிறவியலை வீழாமல் வீடளித்த
சம்பந்த மாமுனிவன் சூர்வாங்கி—யம்புந்தும்
- வஞ்சமே வும்விழியார் வல்வினையெல் லாமகல
நெஞ்சமே வாராய் நினைந்து.

நெஞ்சுவிடு தூது

முற்றிற்று

மெய்கண்ட சாத்திரம் - ௰ச.

சங்கற்ப நிராகரணம்

உமாபதி சிவாசாரியர்

திருச்சிற்றம்பலம்

உமாபதி சிவாசாரியர்

அருளிச்செய்த

சங்கற்ப நிராகரணம்

விநாயகர் வணக்கம்

திருந்திய வருந்தவம் பொருந்துபன் முனிவர்
கமையாக் காத லமையாது பழிச்சு
நிகரில் செக்கர்ப் புகர்முகத் தெழுந்த
புனிற்று வெண்பிறைத் தனிப்பெருங் கோட்டுத்
தழைசெவி மழைமதப் புழைநெடுந் தடக்கை
வாட்டரு மும்மை நாட்ட நால்வாய்ப்
பாச மங்குசந் தேசுறு மெயிறுண்
கனியிவை தாங்கும் புனிதநாற் காத்
தங்கதங் கடகம் பொங்கிழை யாள
நிறைமணிச் சுடிகைக் கறையணற் கட்செவி
கொண்ட தின்பெரும் பண்டிக் குறுந்தாட்
கனிறுதனிருகழல் கருதா
வெளிறுறு துயரம் வீட்டினம் பெரிதே.

பாயிரம்

பெருங்கட லுதவுங் கருங்கடு வாங்கிக்
கந்தரத் தமைத்த வந்தமில் கடவுள்
பாலரை யுணர்த்து மேலவர் போலக்
கேட்போ ரளவைக் கோட்படு பொருளா
லருளிய கலைக ளலகில வாலவை
பலபல சமயப் பான்மைத் தன்றே
யஃதா லந்நூற் றன்மை யுன்னிய
மாந்த ரிதுவே பொருளென் றதனிலை
யறைதலின் வேற்றோர் பனுவ லேற்றோர்க்
கிசையா மாறுபாடு கூறுவ ரதனற்
புறச்சம யங்கள் சிறப்பில வாகி
யருளின் மாந்தரை வெருளுற மயக்கி
யலகைத் தேரி னிலையிற் றீரு
மீங்கிவை நிற்க நீங்காச் சமய
மூவிரு தகுதி மேவிய தாமே
மொன்றே டொன்று சென்றுறு நிலையி
லாறு மாறு வீறுடைத் திவற்று
ளெவ்வ மில்லாச் சைவநற் சமயத்
தலகி லாகம நிலவுத லுளவவை
கனக மிராணியங் காஞ்சன மீழந்
தனந்தி யாடகந் தமனிய மென்றிப்
பலபெயர் பயப்பதோர் பொருளே போலப்
பதிபசு பாச விதிமுறை கிளக்கும்
வாய்ந்த நூல்க ளாய்ந்தன ராகி
யாசா னுகி வீசிய சமத்துட
னேழுஞ் சிரநூ றெறிந்த வாயிரம்
வாழுநற் சகன மருவா நிற்பப்

பொற்பொது மலிந்த வற்புத னுணி
யாரும் விழவிற் பொற்றே ராலயத்
கூ0 தேரு வெண்மர் நிரையி லிருப்ப
மயங்கு வாத மாயா வாதி
முயங்கிட வொருதலை முதுவெதிர் மணிசேர்
பெண்ணை சூழ்ந்த வெண்ணெயம் பதிதிகழ்
மெய்கண் டவனருள் கைகண் டவர்களி
கூ5 லொருவ ரொருதலை மருவி யிருப்ப
வஞ்சப் பிறவிக் கஞ்சிவந் தொருவ
னேதிறை யருளென வீதனு மாயா
வாதியை யயலினர் மறுதலைத் தருடா
மற்றவ ரயலின ரவருரை மறுத்துச்
சூ0 சொற்றர வயலின ரவருந் தொலைவுற்
றின்னே யெவரு முன்னே கழியழி
யாங்கய லிருந்த வருளின ரழகிது
நீங்கள்சங் கற்ப நிராகரித் தமையென
மற்றவ ருரைத்த சொற்றரு பொருள்கொடு
சூ5 வாத செற்ப விதண்டையு மேதுவு
மோது நால்வகை யுவமையுந் திகழ்தர
வருள்சேர் மாந்தர் வெருள்சே ராமற்
றர்கமும் விடையமுங் கற்க
நற்கவி மாந்தர் நகநவிற் றுவனே.

மெய்கண்ட சாத்திரம்

நூல்

மாயாவாதிசங்கற்பம்

நவிற்றிய நிலையி னவித்தையி லேனுனை
நித்த னறிவன் சுத்த னகண்டித
னிருவி கற்பனிர்த் தத்துவ னிரஞ்சனன்
சொல்வகை யெவையுந் தொடராத் தூய்மணி
வரம்பில் வேதச் சிரந்தரு பரம்பொருள்
சத்தா யெவையுந் தாரு யவித்தை
தொத்தா துயர்ந்த தொல்சுடர் மூவா
வின்ன தன்மைய னேக னனேகன்
கன்னற் பெருஞ்சுவை தன்னிற் பிறவாப்
பெற்றியி னிருந்து பொற்பணி யியல்பினின்
வான்வளி யனனீர் மண்மருந் தன்ன
மான தாது வாறைங் கோசத்
தொகுதி யாக்கைப் பகுதிய தொருபுடை
சுத்தி வெள்ளி யொத்தென மித்தையிற்
றானென லாகுந் தன்மைத் துலூதையிற்
சின்னூற் றகையின் வேற்றுமை மரீஇய
தென்னப் பன்மைய தெனினிலை பழம்பூத்
தோனுர் வயிரந் தருத்தருந் தொன்மையின்
வாரு ரந்திரை நுரைதரு வாய்மையிற்
கூடு மசித்தைச் சித்துத வாதெனி
னெற்பதர் மூலாலத் திற்பாந் தருமிது
தன்னியல் பென்றும் விளையாட் டென்றும்
முன்னுள மறைகண் மொழிதலி னெருநூற்
பன்மணி நிலையும் பசுப்பா லெனவும்
பலவுக னீரி லலர்கதி ரெனவுங்
கூலவாழி குளஞ்சிறு குழிகால்

வாவி யாவையும் வருபுன லெனவு
மவ்வவற் றடங்கி யாடியு ணிழலெனத்
தோன்றி யாக்கைதற் காந்தத் திரும்பும்
கனவிற் நீங்குங் கங்குலிற் கயிறும்
புனலிற் ரோன்றும் பேய்த்தேர்ச் செய்தியு
மன்ன துன்பி னன்னிறப் பளிங்கெனப்
பதிலுற் காணத் தொருமூன் றவத்தை
நாளு நாளு நயந்துறு மிருபயன்
றன்னிற் சாராத் தொன்மைத் தன்மை
தர்ப்பண நிழற்கட் குற்றிபாய்ந் தற்றே
யிவ்வியற் பந்தப் பௌவம தகல
விண்முத றந்த கொண்மூப் படலத்
திருளற வுதித்த காறக விவேகந்
தன்னிற் ரோன்றிச் சாதக மினத்தையு
மன்னகப் பிரிப்பு மடியிழை வாங்கலும்
போல ஞானம் பொய்யறக் கழீஇத்
தானே தானுய்த் தன்னிற் றன்னைத்
தானே கண்டு தன்னல மூற்று
வசையி றத்துவ மசிபதத் தெளிவா
லகமே பிரம மாயின னெனவறிந்
தசல ரூகிதற் சலசல மதியெனக்
கண்டிடு முடலம் விண்டகல் கடத்து
மங்குல துடைதர வெங்குமாத் தகைத்தே
யிவ்வகை புணர்ந்து செய்தொழி லருத
மடவோர் தாமுங் கடலு வியற்றுங்
கன்ம காண்டத் தொன்மைப் புரிவாற்
ரோற்றிய வித்தை யேற்கலை யரணியி
லெழுந்தெரி யவற்றை விழுங்கிய தென்னைத்
தன்னெழிற் துள்ள தாரு வழியு

மந்நிலை யன்றி யழிவறு முத்தி
யேயா தென்றுதன் னியல்பை
மாயா வாதி வகுத்துரைத் தனனே.

மாயாவாதிசங்கற்ப நிராகரணமும்
ஐக்கியவாதி சங்கற்பமும்

உணர்தரு பிர மொன்றெனு முரைக்கண்
வருபிர மாண மறையெனி லருமறை
யொன்றென்ற தன்றி யிருபொரு ளுரைத்த
னன்றன் றபேத நாடிய பொருளேற்
பேதமும் மபேதமு மோத வேண்டா
பேத மெனினு மபேத மெனினும்
பேதா பேத மெனினு மையுறின்
னியமி லுரையிற் பையவங் துளதாம்
திகழ்பிர மாண விகழ்வுமுண் டன்றிப்
பெத்தம் பேத முத்தி யபேதமே
லநவத் திதமா மவையிரு திறனு
மினியப் பழமொழி யிரண்டல வொன்றே
யன்றியும் பெத்தம் பேதத் தறைதலு
மொன்றிய முத்தி யபேதத் துரைத்தலும்
பழுதா மித்திறம் பதையா தாயகமற்
றழுதா மறையெனு மிப்பிர மாண
மாகுமை தானே யாயின தெலுன
தேக மகேக முறுபியம் பாமற்
[redacted] வானத்
[redacted] யுறழு மெனில்வறி துதியா
[redacted] பாழியு மினைத்து
[redacted] மதனுக்

கறீவில துருவில தறியா தறையா
தன்றியு மவ்வகை யகண்டித மதுவித
உஙி வென்றது குறிப்ப தெவ்வகை யாவு
மொன்றெறனு முரையு மொழிந்தனை யன்ற
யருமறை பிரம வுரையெனி லதற்குத்
தந்த தாலு முதனவில் பொறியில
தென்னிலோ ருடற்கண் மன்னிய வலகை
நஅ யறைந்தற் றென்ப தார்சொ லதமலத்
திறம்பெற் றின்றே செய்தோர் பெயராற்
சுயம்பு வென்றல கியம்புமென் றறியினித்
தற்சிட் டலேவரைத் தான்றழு தரைக்குள்
சொற்கேற் புரவல னேவ லமைச்சரை
நசி யடிகண் மற்றெங் குழுழு தாண்மினென்
றேத்தி யிறைஞ்சிக் காப்பர்க ளென்றுங்
கீச ளஞ்சுகயப் பேசின னன்றி
யினையவை பிறாிற் கனவினு மிலனே
தன்னைத் துதிக்குஞ் சொன்னலந் தானுமத்
சய துறையறி வாணர்க் கறைவதான் றன்றியுந்
தனக்குத் தானே தன்னலம் பகரா
தசத்துக் குரையா தார்க்குரை யுயிர்க்கெனி
லுரைபிரா மாண மிறைபிரா மேய
நீபிரா மாதா னின்பிரா மிதியென
சஙி நால்வகை யுளதுன தேகநன் றன்றே
நற்பிரா மாண நிற்பதான் றண்ரு
லப்பிரா மேயமு மதனியல் பன்றே
கன்னற் சுவையி லங்கிய மிலதா
வினிமை தோன்ரு தனிமைத் தென்றனை
ஙய யறிவிற் குவமை யசத்தாங் கட்டி
பிறிவித் தொட்டினும் பேற துரூதே

தற்பர விரிவு பொற்பணி தகுமெனிற்
செய்வோ ரின்றிச் செய்விஞ யின்மையிற்
பொன்பணி யாகை தன்பணி யன்றே
செய்வோர் போலாச் செயப்படு பொருண்முதற்
செய்வோ ரேயாச் செய்யவும் படுமே
சுத்தி வெள்ளியிற் ரூன்றிற் ரூயினுஞ்
சத்துல கேதுந் தாரா தருமெனி
னுலக மித்தையென் ரூரா துரைத்தனை
நிலவுநின் மரபு நினைந்திலை யாங்கொல்
விவகா ரத்தில் வேண்டுது மூலகம்
பரமார்த் தத்திற் பகரா மென்னிற்
பரத்துள தேலிவை யும்பரா மார்த்தம்
பரத்தில தேலொழி மூன்பகர் மாற்ற
மதன்முத லிதுவென வுதவுக வன்றியும்
விவகாரிக் குங்காற் றிகழ்பர மார்த்த
நிலையது தெரியி னிதுநீ நீயேற்
றெரியா தாயி னஃதுந் தெரியா
துரையா ளளவையு மொழிந்தனை யன்றே
யளவை காண்டல் கருத லுரைபெனை
வுளதவை மூன்றின் மொழிவழி நுழையி
னின்பிர மேய மென்ப தெளிங்கொல்
பொற்பிதிர் பிதிர்ந்தும் பொன்னே யாயின்
றற்பர மசித்தைதத் தருமா றென்னெனிற்
சிலம்பி நூறரு நலம்போற் ரூன்று
மென்ற னேயது வதன்ரூழி லன்றியு
மொன்றுத னியல்புல கோரியல் பன்றெனப்
பலமிலை பழம்பூப் பாதவந் தருநீர்
நிழைநுனை நிலைலை சிலதரு மிவைபோற்
ரூனே பலவா மெனநீ சாற்றினை

சத்தசத் தாகவுஞ் சத்தினி லசத்தின்
கொத்துள தாகவுங் கூறின ரிலரால்
வித்திலை கனிகனி விழுதா றருநெறி
சத்தல தொன்று தான்றர வேண்டு
அ நெற்பதர் பலாலத் திற்குபா தானமென்
காரண மின்றிக் காரியம் பிறவா
பாரிடை யொருபடம் பண்ணவும் படுமே
யந்தமில் பிரம மவித்தைகா ரணமெனத்
தந்தனை யவித்தை தானெய் துறுத
கூ றன்னியல் பென்னில் வன்னிதன் வெம்மையிற்
சத்தின தியல்புஞ் சத்தே யசத்தெனில்
வைத்தத னியல்பெனும் வழக்கொழி யன்றியு
மிருள்பொதி விளக்கென வுருமரு விளக்கிற்
கருமை பயந்த பெருகொளி தருமெனிற்
கூ றன்னியல் பன்றத னுபாதி வசத்தான்
மன்னிய தன்றிமைத் தான்றனின் மாயா
தொன்ரு னசுத்த னன்ரு மன்றே
யாங்கொரு காலத் தோங்கிய தாயி
னந்தமி லவித்தை வந்தீண வதற்கோ
ா ரேது வேண்டும் புயலியல் பெனின்வீ
டோத வேண்டா வொழிந்தோ ரினுமுறுங்
களங்கம தறவுறு மவித்தைதற் கவித்தல்
விளங்கிய பிரம விளையாட் டாயி
னவித்தை யென்பதான் றன்னியந் தன்னி
ஈ லுதிக்கு மென்றமுன் னுரையு மறந்தனை
நுண்ணுற் குடம்பை நுந்துழி போலுட்
படுநெறி யதனுல் விடுநெறி யிலதாற்
றலைமையு மறிவு மிலதென வித்தையை
விடுத்தெடுத் தாணரும் வேற்ரு ரன்றே

ஈ யொளிகொ டாமிரங் குளிகைபெற் றுங்கத
ணவித்தையை வித்தை தவிர்க்குமென் றுரைக்கி'
னித்த னறிவன் சுத்தனென் றுரைத்த
வித்தக மென்னீ வித்தையும் வேறுன்
றெம்ம னோரி லொருவ னின்னிறை
கஎ யம்ம சைவந் தவனீ யன்றே
பன்மணி பசுநற் பாத்திர மெனவு
நன்னூல் பானீர் நற்கதி யெனவு
முடலையு முணர்வையு முவமித் தனையேற்
றடமணி சாடொடு தாங்கு டலேவ
கஉ யுணர்வுணர் வொழியி னுலகுணர் வறினின்
பாலும் பசுவுஞ் சாலுஞ் சாலக்
கலம்பல வன்றிச் சலம்பல விலதனக்
காணுந ரின்றி வீணின் விளம்பினை
யாடியு ணிழல்போற் கூடுதல் கூறிற்
கஉஉ றுண்ணிழல் கொண்டு தற்பணஞ் சுவிக்கின்
மண்ணிழல் கொண்டுடல் வந்தகன் றிடுமே
மன்னையக் காந்த மெனவுடல் பிரம
சந்நிதி யளவிற் சுவித்திடு மாயி
னகண்டிதன் சன்னிதி யலதில தனைவையு
கஉஎ நடந்திட வேண்டுங் கிடந்திடப் பெறுவே
காந்தத் திரும்பு காட்டுநர்ப் பெறிலயஞ்
சேர்ந்திடு நீக்குஞ் செயலதற் கிலதே
கணுத்துயர் கயிற்றர வெனுச்சில தொடுத்தனை
கணவின் பயனு நனவின் பயனும்
கஉஏ வினையின் பயனவை பொய்யென வேண்டா
வுடன்மா ருட்டுக் கடனது கருதுக
வுற்ற புற்று மற்றதிற் கயிறு
முடனுங் கூடச் சடமென வறிதி

யறிவு கயிறென் றறியா தன்றே
கசஅ யச்சம தடைதல் கொச்சமை யுடைத்தே
யின்னுமக் கனவி லிருளுறு கயிற்றிற்
பின்னுநின் பிரமம் பிரமித் திடுமே
துன்னிய வினையிற் செம்மலர்ப் பளிங்கெனத்
தாணுந் தகைமை யாணன் மலரென
கசஉ வொருபய னன்றிப் பலபயன் மரீஇய
திருவினை தருபய னெனநனி வேண்டி
லாண்ட வித்தையு மவித்தைகொ டாக்கையு
மீண்டிரு வினையு மியம்பின பாத்தைக்
கள்வரைப் பிணிக்குங் காவல னெனமுய
கஙய மெல்வினைத் தொடக்கிற் ரோன்றுடற் சிறையிட்
டிருவினை யூட்டு மெம்மா னம்மா
னருவினை யுடற்க ணவத்தைக ளுரைத்தன
யாருறு பவர்பர மகண்டித மடங்கா
தோர்வில துடல்சட முறுநெறி யாதனின்
கருஉ மன்னிய காண மாரூட் டத்திற்
பன்னின மென்னி னிவையோ பரமோ
முதலிய தாயி னிவைபிறழ் வெய்தா
திவையெனி லுனது மொழிபழு துளதே
யுடற்படு பிரம முறுமெனிற் சாளரத்
கசஅ திடத்தகு முறுவிர னுதியளி யெறிதுய
ரங்குவி தானே யருந்திடு லுடற்கட்
டங்கிய வறிவு தனித்துறு மன்றே
தற்பண நிழற்கட் குற்றிபாய்ந் தற்ரு
னற்கணிற் றுயர நணுகாத் தகைத்தெனி
கசஉ னின்மொழி விரோதமுங் காட்சி விரோதத்
தன்மையு முறுமவை தவறில வாகா
யாமுடைப் பதிவகை யாவரும் பலகலை

*சொல்லுத லெளிதரி தத்தொழில் புரிவெனப்
புல்லிய பழமொழி புதுக்கினை யன்றே
களை யகண்டித மெனநீ பகர்ந்தமை தனக்குப்
பந்த மிதுவெனத் தந்தமை கருதில்
வானி னடக்குங் காலினைப் பிடித்துப்
பருவிலங் கிட்ட வொருவனீ யன்றே
பந்தம தகல வுந்து விவேகம்
களரு வான்வளி யெனத்தனிற் றூனே தோன்றின்
முன்புள தாயின் மயங்கா திலதெனிற்
பின்புள தாகா திலதுள தெனின்வெளி
மலாது தருமனல் மரக்கணின் றூகித்
தருவது தகுமெனிற் றூனே தோன்று
கழய விறகி னுதித்த கனறகு மாயி
னவித்தையி னுதித்த வித்தை யம்மரத்
துதித்த விவேகம் வித்தையென் றுரைத்த
